Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு
THINAMURASU
தினப்பதிப்பு

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
TP - 0212225969
Hotline: 0212229497
(C/2278)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 23 வெள்ளிக்கிழமை (05.04.2013) பக்கங்கள் 20 ஓசை – 187



ஊக்கமருந்தால் தடை (08)



போருக்குத் தயார் (09)



மொழி (10)




மிகப்பெரியது (11)



கொடிகாமம் திருநாவுக்கரசு (12)

# காங்கேசன்துறை துறைமுகம் புனரமைப்புக்கு இந்தியா உதவி



(கொழும்பு)

யுத்தத்தால் சேதமடைந்த காங்கேசன்துறை துறைமுகத்தைப் புனரமைப்பதற்கு இந்திய அரசின் நிதிஉதவி பெறப்படவிருக்கிறது. இந்திய உதவித் திட்டத்தின் ஒரு கட்டமாக 44.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலகு கடன் அடிப்படையில பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

யுத்தத்தின்போது உண்டான சேதங்கள் காரணமாக பல தசாப்தங்களாக அது முழு அளவில் பயன்படுத்தப்படாமல் உள்ளது. யுத்தத்தின்போது அழிக்கப்பட்ட கப்பல்களின் பகுதிகளும் இங்கு உள்ளன. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிந்தபின் இந்தியா வர்த்தக நடவடிக்கைகளுக்காக இந்தத் துறைமுகத்தை புனரமைக்க உதவி செய்வதாக உறுதியளித்திருந்தது. இந்தியா இந்தத் திட்டத்துக்கு நன்கொடை மற்றும் சலுகை அடிப்படையிலான உதவியை வழங்கப்போவதாகக் கூறியிருந்தது. இது தொடர்பாக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் 21 ஆம் திகதி (19) ஆம் பக்கம் பார்க்க

## பரிந்துரை அமுலாக்கம் அரசு இப்போது தீவிரம்

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்துவது என அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக 22 அமைச்சர்களும் சில நிறுவனங்களும் கால வரையறைகளை நிர்ணயித்து பணியாற்ற உள்ளதாகக் தெரிவிக்கப்படுகிறது. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கைப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை என எதிர்க்கட்சிகளும், சர்வதேச சமூகமும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடதக்கது. சர்வதேச ரீதியாக (19) ஆம் பக்கம் பார்க்க

## இந்திய உதவித் திட்டங்கள் வடக்கில் தடையின்றி தொடரும்

### தமிழக சலசலப்பு இதைப்பாதிக்காது

(கொழும்பு)

வடக்கில் இந்தியாவின் உதவித்திட்டங்கள் எதுவும் இடைநிறுத்தப்படாமல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று இந்திய வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.


ஜெனிவாத் தீர்மானத்தைத் தொடர்ந்து இலங்கை அரசுடன் இராஜதந்திர ரீதியான முகம் சுழிப்புக்கள் காரணமாக வடக்கில மேற்கொள்ளப்பட்டுவரும் இந்திய உதவியுடனான செயற்றிட்டங்கள் நிறுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை என்றும் இந்திய வெளியுறவு அமைச்சு மேலும் தெரிவிததுள்ளது.

இந்திய உதவியுடன் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை எனவும் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

ஏற்கனவே, திட்டமிட்டவாறு முக்கியமான பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக் குறிப்பிட்டுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## தக்கதருணத்தில் பாகிஸ்தானே உதவியது



மிக முக்கியமான தக்க தருணங்களில் பாகிஸ்தான் அரசு எமக்கு உதவிகளை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலாளர் அப்பாஸ் ஜிலானி நேற்றைய தினம் ஜனாதிபதியை சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இதனைக் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் பாகிஸ்தான் தேர்தல்கள் குறித்தும் இந்தச் சந்திப்பின் போது கலந்துரை யாடப்பட்டுள்ளது. அரசியலில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். இதேவேளை, யுத்தம் இடம்பெற்ற 2005 ஆம் ஆண்டில (19) ஆம் பக்கம் பார்க்க

## தகவல் தொழில்நுட்ப பயன்பாடு யாழில் கண்காட்சி

சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையில் தகவல் தொழில்நுட்ப பயன்பாடு தொடர்பான கண்காட்சி 2013 மிகச் சிறந்த தீர்வுகளை வழங்கும் எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் வர்த்தக தொழில துறை மன்றமும் அரச தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்கின்ற கண்காட்சி ஒன்று எதிர்வரும் 7 ஆம் திகதி யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள பிள்ளையார் சுற்றுலா விடுதியில் இடம்பெறவுள்ளது. வியாபார மற்றும் தொழில்துறை சார்ந்த சமூகத்தினரையும் தகவல் தொழில்நுட்ப சேவை (19) ஆம் பக்கம் பார்க்க

## பளை நகரில் புதிய பல்கலைக்கழகம் சர்வதேச தரத்தில் அமைக்க முடிவு

(கொழும்பு)

சர்வதேச தரத்திலான பல்கலைக்கழகம் ஒன்று பளையில் ஸ்தாபிக்கப்படவிருக்கிறது.

சர்வதேச சமூகத்தின் நிதி உதவியில் உருவாக்கப்படவிருக்கும் இப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடிய கற்கை நெறிகள கற்பிக்கப்படவுள்ளன. இப் பல்கலைக்கழகத்தில் உள்நாட்டு மாணவர்கள் மட்டுமல்லாது "சார்க்" அமைப்பின் அங்கத்துவநாடுகளின் மாணவர்களுக்கும் கற்கை அனுமதி வழங்கப் படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதி செயலக சமூக அபிவிருத்தித்திட்டப் பணிப்பாளர் கலாநிதி நந்தன விஜேயசிங்க தெரிவித்தார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## வன்முறை நீடித்தால் நாடு பற்றி எரியும்



(கொழும்பு)

முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்தும் நீடித்தால், இன்னும் 30, 40 வருட காலங்களில் இலங்கை தீப்பிடித்து எரியும் என அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இடையில் இருக்கும் தொடர்புகள் மற்றும் உரிமைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எந்தச் சந்தர்ப்பத்திலும் பேச்சுக்களை நடத்த தயாராக இருப் (19) ஆம் பக்கம் பார்க்க

## வெளியானது சா.தர பெறுபேறுகள்

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம் - 2012 ஆம் ஆண்டுக்கான பெறுபேறுகள் நேற்று மாலை வெளியாகியுள்ளன. பரீட்சைத் திணைக்களத்தின் இணையதள முகவரி www.doenets.com என்ற முகவரியில் இதனைப் பார்வையிடலாம். இதுவரை கிடைத்த தகவல்களின்படி யாழ். இந்துமகளிர் கல்லூரியில் இருவர் 9 ஏ தரா தரத்தில் சித்தியடைந்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் 3 பேர் - ஏ தரத்தில் சித்தியடைந்துள்ளனர். யசோதரன் ஹர்சிகா, சிவபாலன் கௌதமன், சிம்மேந்திரன் சஜீபா ஆகியோரும் 8 ஏ தரத்தில் (19) ஆம் பக்கம் பார்க்க

# வறுமையின் கோரம் எங்கிருந்தாலும் அங்கே நாம் கால் பதிப்போம்

(கரம்பைக்குறிச்சி)

எங்கெல்லாம் வறுமை இருக்கிறதோ அங்கெல்லாம் துன்ப துயரங்களை எதிர்நோக்குகின்ற மக்கள் இருக்கின்றனரோ அங்கெல்லாம் எமது காலடி பதியும் என ஈ.பி.டி.பி. யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்தார்.

கரம்பைக்குறிச்சி பாலர் முன்பள்ளி கட்டடத் திறப்புவிழா மற்றும் வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.




அவர் மேலும் உரையாற்றுகையில் எமது கிராமங்கள் பல்வேறான பாதிப்புக்களை எதிர்நோக்கி உட்கட்டமைப்புக்கள் சீர்குலைக்கப்பட்டு இருக்கின்றன. வீதிகள் மின்சாரம் பொதுக்கட்டடங்கள் போன்றவை மிகவும் பாதிப்புக்குள்ளாகிய நிலையிலேயே காணப்படுகின்றன. எமது மக்களின் சுமூகமான வாழ்விற்கும் எமது மாணவர்களின் சிறந்த எதிர்காலத்திற்குமாக எமது கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திக்கொள்ள வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம். இதனடிப்படையில் இந்தக்கிராமத்தின் நிகழ்வொன்றிற்கு நாம் வந்திருந்த போது இந்தக்கிராம மக்களின் கோரிக்கைகள் பலவற்றை நிவர்த்தி செய்து தந்திருக்கின்றோம்.

அரசின் நிதியுதவியுடன் வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக மின் இணைப்பு வழங்கப்பட்டது. அதேபோன்று இங்குள்ள பொது அமைப்புகளுக்கு தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன. முன்பள்ளிக்கட்டடம் புனரமைப்புச் செய்து தந்துள்ளோம். இவற்றைப் போன்று பல உதவித் திட்டங்களை மக்களின் வளமான எதிர்காலத்திற்காக செய்யத் தயாராகவுள்ளோம். எனவே இவ்வாறான உதவிகளை செவ்வனவே பயன்படுத்தி சிறந்ததோர் மாணவ சமுதாயத்தினையும் நற்பிரஜைகளுடைய கிராமத்தினையும் கட்டியெழுப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

விளையாட்டு நிகழ்வினைத் தொடர்ந்து, ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரினின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியில் புனரமைக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டடத் திறப்பு விழாவும், அவரின் நிதியினூடாக வழங்கப்பட்ட தளபாடக் கையளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில்; வடமாகாண கல்வியமைச்சின் ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பணிப்பாளர் ஜெயா தம்பையா, ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி இணைப்பாளர் சாள்ஸ், முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா, கிராம அலுவலர்கள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முல்லைத்தீவில் சிறு தொழிற்சாலைகள் திறப்பு




(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரையோர கிராமங்களானகள்ளப்பாடு வடக்கு கள்ளப்பாடு தெற்கு மற்றும் முள்ளியவளை கிழக்கு ஆகிய கிராமங்களின் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பயன் கருதி சிறுதொழிற்சாலைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சிற்றுண்டித் தொழிற்சாலை கருவாடு உற்பத்தி நிலையம் அரைக்கும் ஆலை என்பன USAID நிறுவனத்தின் அனுசரணையுடன் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கிராம மாதர் அபிவிருத்தி சங்கங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

**மின்சாரம் இல்லையா?**

சோலாரைப் பயன்படுத்தி இலவசமாக மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்

**இதில் பெறப்படும் மின்சாரத்தில்**

மின்குமிழ், [Phone charser, DVD, TV, Computer, Dc Motor (தோட்டத்தில் நீர் இறைப்பதற்கு) பயன்படுத்தலாம்



18000/= முதல் 85000/= செலவு செய்து உங்களிற்குத் தேவையான மின்சாரத்தை பெற்றுக்கொள்ளுங்கள்

எம்மிடம் AC/DC யில் தொழிற்படக்கூடிய Recevier (இதில் இலங்கை, இந்திய ரெலிவிசன் அலைவரிசைகள், விளையாட்டு அலைவரிசைகளினைக் கண்டுகளிக்கலாம்)

**விபரங்களிற்கு**

Jaffna Technical Institute,
No:23, Palaly Road,
Jaffna.

NEW ASIAN CENTER
56/15 B, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு :
எமது நிறுவனத்தில்
Digital Cameraகள்
Mobile Phoneகள்
திருத்திக் கொடுக்கப்படும்.



T.P: 0779254078, 0776510134
0217917518

(C/2485)

## சூடுபிடிக்கும் சர்பத் வியாபாரம்

கோடைகாலம் ஆரம்பமாகியதையடுத்து வன்னிப் பகுதிகளில் ஆங்காங்கே சர்பத் விற்பனை நிலையங்கள் முளைவிடத் தொடங்கியுள்ளன.

அதிகரித்த வெப்பம் காரணமாக மக்கள் சர்பத் பருகுவதில் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர். எனினும், சில சர்பத் விற்பனை நிலையங்களில் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாது செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## வாகன விபத்தில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

காளிகோவிலடி, தாவடி தெற்கு, கொக்குவிலைச் சேர்ந்த அப்புத்துரை சுரேஸ் (வயது -35), மயூரன் (வயது-26) என்பவர்களே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மினி பஸ்ஸுடன் இவர்கள் சென்ற மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(இ)

## இன்று முதல் விடுமுறை

(யாழ்ப்பாணம்)

அரசாங்கப் பாடசாலைகளுக்கு முதலாம் தவணைக்கான விடுமுறை இன்று வழங்கப்படுகின்றது.

முதலாம் தவணை விடுமுறைக்காக இன்று மூடப்படும் பாடசாலைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரச முஸ்லிம பாடசாலைகள் எதிர்வரும் 9ஆம் திகதி விடுமுறைக்காக மூடப்பட்டு மீண்டும் 17 ஆம் திகதி திறக்கப்படும் என்று கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. இம்முறை 16 நாட்களே விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ, 105)

## விசேட பேருந்து சேவை

சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு வடபிராந்தியப் போக்குவரத்துச்சபை விசேட பேருந்து சேவைகளை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தினை முன்னிட்டு பொது மக்களின் நன்மைகருதி வட பிராந்தியப் போக்குவரத்துச்சபை தமது சேவைகளை விஸ் தரிக்கவுள்ளதோடு, பண்டிகைக் காலத் தேவைகள், பொருட் கொள்வனவு எனப் பல்வேறு தேவைகள் நிமித்தம் அதிகளவானோர் யாழ்.நகருக்கு போக்குவரத்துக்களை மேற்கொள்வர். இவர்களின் வசதிகளுக்கு அமைய பஸ் சேவைகள் வழங்கப் படும் என்று வடபிராந்தியப் போக்குவரத்து முகாமையாளர் அஸ்கர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை மற்றும் காரைநகர்சாலைகளில் உள்ள பஸ்களின் மூலம் பயணிகளின் தேவைக்கேற்ப இப்பேருந்துச் சேவைகள் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## விளையாட்டுவிழா

(முழங்காவில்)

தேசிய இளைஞர் சேவை மன்ற இளைஞர் விளையாட்டு விழா சுவட்டு மைதானப் போட்டிகள் எதிர்வரும் 8ஆம் திகதி முழங்காவில் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில், பிரதம விருந்தினராக பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமாரும், சிறப்பு விருந்தினராக மாவட்ட இளைஞர் சேவை மன்ற அதிகாரி ஐ.தபேந்திரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (112)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் ஆலய அலங்கார உற்சவ 7ஆம் திருவிழா இன்று இடம் பெறவுள்ளது.

தொல்புரம் சிவகுமார், சாவகச்சேரி கண்ணன், எஸ்.ரி.புஸ்பராணி ஆகிய குழுவினரின் விசேட மேளக்கச்சேரிகள் இடம் பெறவுள்ளன.

இதில் சர்ப்ப வாகனத்தில் அம்பாள் வெளிவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது.

## இன்று ஓய்வூதியக் கொடுப்பனவு

அரச ஓய்வூயர்களின் ஏப்ரல் ஓய்வூதியக் கொடுப்பனவு இன்று வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஓய்வூதிய வவுச்சர்கள் பிரதேச செயலகங்களினால் ஓய்வூதியர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இம்மாதத்திற்குரிய ஓய்வூதி அட்டவணைப்படி எதிர்வரும் ஒன்பதாம் திகதி வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் புதுவருட தினத்தையொட்டி ஓய்வூதியர்களின் நன்மை கருதி முன்கூட்டியே வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (104)

## சந்திப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் காணியில்லாத தமிழ்க் குடும்பங்களுடனான சந்திப்பொன்று இன்று நடைபெறவுள்ளது.

இப்பிரதேச செயலர் பிரிவில் 46 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ள நிலையில் இக் கிராமங்களைச் சேர்ந்த மக்களில் காணியில்லாத நிலையில் கிராம அலுவலர் பிரிவில் பதிவுகளை மேற்கொண்ட, மேற்கொள்ளாத மக்களைத் தவறாது வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மக்களை, ஈ.பி.டி.பி.யின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் அ.ஜெயராஜ் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

## விற்பனைச் சந்தை

(முழங்காவில்)

புத்தாண்டு தினத்தையொட்டி பூநகரி வாடியடி நகரில் பூநகரி பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவும், திவிநெகும பிரதேச அமைப்பும் இணைந்து எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் புத்தாண்டு விற்பனைச் சந்தை நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இச்சந்தைகளில் வெளியூர் உற்பத்திப் பொருள்களும், உள்ளூர் பனைசார்ந்த கைப்பணிப் பொருள்களும், விவசாய உற்பத்திகளும் விற்பனை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (112)

## பொங்கல் விழா

(வடமராட்சி)

பருத்தித்துறை வைரவர் குடியிருப்பு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா நாளை நடைபெறவுள்ளது.

இப்பொங்கல் விழா இன்று ஆரம்பமாகி நாளை 1.30 மணிக்கு நிறைவுபெறும் என ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (01)

# இளைஞர் அணியினர் தென்பகுதிக்கு சுற்றுலா

(முழங்காவில்)

வடக்கு - தெற்கு பகுதி இளைஞர்கள் மத்தியில் நட்புறவை ஏற்படுத்தும் முகமாக தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் இம்மாத நடுப்பகுதியில் 60 பேர் கெண்ட இளைஞர் அணியினர் தென்பகுதிக்கு சுற்றுலா செல்லவுள்ளதாக பூநகரி பிரதேச தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரி தெரிவித்தார்.

பூநகரி - முழங்காவில் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் சேவை மன்ற உறுப்பினர்களே இச்சுற்றுலாவில் பங்குபற்றவுள்ளனர்.

இச்சுற்றுலாவுக்கு வேண்டிய நிதியுதவியை பொஸ்டோ நிறுவனம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு வேண்டிய ஒழுங்குகளை தேசிய இளைஞர் சேவை மன்றம் செய்துவருவது குறிப்பிடத்தக்கது. (112)

# பூநகரி – நாச்சிக்குடாவில் நண்டு வளர்ப்புத் திட்டம்

பூநகரி - நாச்சிக்குடாப் பகுதியில் பொஸ்டே(posdo) நிறுவன நிதியுதவியுடன் நண்டு வளர்ப்புத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

பூநகரிப் பிரதேச தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரியின் வேண்டுகோளுக்கமைய நாச்சிக்குடா ஜேம்ஸ் இளைஞர் கழக உறுப்பினர்கள் பத்துப்பேர் தெரிவு செய்யப்பட்டு வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக பொஸ்டோ நிறுவனம் நிதியுதவியை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (112)

# நவீனசந்தைக் கடைத்தொகுதி கேள்வி அறிவித்தலில் முறைகேடு

## - எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டு

(வடமராட்சி)

பருத்தித்துறை நவீன சந்தைக் கடைத்தொகுதி முழுமையாக பூர்த்தியடையாத நிலையில் அடிப்படை வசதிகள் இன்றி ஒரு சில கடைகள் அதிகூடிய கேள்வித்தொகையின் அடிப்படையில் வழங்கப்பட்டதில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாக பருத்தித்துறை நகரசபையின் எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

பருத்தித்துறை நகர மையத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒரு தள மாடிக்கட்டடமான நவீன சந்தை கடைத்தொகுதியில் 46 கடைகள் கொண்ட கீழ்த்தள கடைத் தொகுதி நெக்டெப் திட்டத்தின் கீழும், 39 கடைகளைக் கொணட மேற்தள கடைத்தொதி என்ரிட திட்டத்தின் கீழும் கடந்த 3 வருடங்களுக்கு மேலாக கட்டப்பட்டு ஓரளவு பூத்தியாக்கப் பட்டுள்ளன.

இந்நிலையில் ஒரு சில கடைகள் கீழ்த்தள கடைத் தொகுதியில் இருந்து பருத்தித்துறை நகரசபையின் ஆளும் கூட்டமைப்பின் தலைவரினால் அதிகூடிய கேள்வித்தொகையில் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது புதிதாக பருத்தித்துறை நகரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நவீனசந்தைக் கடைத்தொகுதி அமையப்பெற்ற இடத்தில் 25 வருடங்களுக்கு முன்னர் சந்தை மற்றும் கடைகள் இயங்கி வந்தன. ஆனாலும் யுத்த சூழ்நிலையால் அழிவடைந்த நிலையில் கடை உரிமையாளர்களுக்கு இதுவரை எவராலும் நஷ்ட ஈடுகளோ, சலுகைகளோ வழங்கப்படவில்லை.

மேலும் கடைகள் கேள்வித் தொகையில் வழங்க முன்னரும் கட்டடத்தொகுதி பூத்தியடைந்து திறப்பு விழா செய்தபின்னரே வழங்க அனுமதிக்க வேண்டும் என பருத்தித்துறை நகரசபைக் கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. எனினும் ஆளும கூட்டமைப்பின் சபைத்தவிசாளர் தான்தோன்றித்தனமாகவும் செயற்பட்டுள்ளார் என்பதுடன், சபையின் ஆளும் கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களும் எதிர்க்கட்சியினரும் எதிர்ப்புக்காட்டியிருந்தனர். அந்த எதிர்ப்பை மீறியும் செயற்பட்டுள்ளனர் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மேலும் நவீனசந்தைக் கடைத தொகுதி மலசல கூடமும், நீர்வசதியும் பெற்றுக்கொடுக்காமல் சுகாதாரமற்ற நிலையில் திறந்துவிடப்பட்ட நிலையில் நகரத்துக்கு வரும் பொது மக்கள் மலசல கூட வசதி, நீர் வசதி எதுவும் இல்லாமல் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். (116)

# அமைச்சர் ரிசாட் பதியூதின் துணுக்காய்க்கு விஜயம்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேச சபை மற்றும் துணுக்காய் பொதுச்சந்தை ஆகியவற்றுக்கான திறப்பு விழா நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வணிக கைத்தொழில் துறை அமைச்சர் ரிசாட் பதியூதின் பிரதம அதிதியாக கலந்துகொண்டு இவற்றை திறந்து வைக்கவுள்ளார்.

தொடர்ந்து அமைச்சர் நட்டாங்கண்டல் பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டு அப்பிரதேச மக்களின் பிரச்சினைகள் தேவைகள் தொடர்பாக மக்களுடன் கலந்துரையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (140)

# புதிய நிர்வாகத் தெரிவு

(வேலணை)

வேலணை சாட்டி வெள்ளைக்கடற்கரை இந்துமயான அந்தியேட்டி சபைக்கான வருடாந்தப் பொதுக்கூட்டமானது வேலணைப் பிரதேச சபையினதும் காரியாலய மண்டபத்தில் முன்னாள் இந்துமயான அந்தியேட்டிச்சபையின் தலைவரின் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய ஆண்டுக்கான நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதில் தலைவராக செ.சிவலோகநாதன், உபதலைவராக நா.ஜெகநாதன், செயலாளராக க.மார்க்கண்டுநாதன், உப செயலாளராக சு.கஜேந்திரகுமார், தனாதிகாரியாக இ.சிவநாதன் மற்றும் ந.தனபாலசிங்கம், ந.ஜீவகதாஸ், க.சிவநாதன், திருமதி மு.கார்த்திகா ஆகியோர் கொண்ட நிர்வாக சபை. தெரிவு செய்யப்பட்டுள்ளது. (05)

# பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் குறும்படப் போட்டிகளுக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பபாணம்)

வடமாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வடமாகாணத்தில் உள்ள குறும்பட தயாரிப்பாளர்களையும், படைப்பாளிகளையும், கலைஞர்களையும் ஊக்குவிக்கு முகமாகவும், சமூகத்தில் காணப்படுகின்ற முரண்கள், கலாசாரப் பிறழ்வுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்து முகமாகவும், அவர்களது படைப்பாக்கத்திறனை அதி உச்ச சமூக அக்கறையோடு வெளிக்கொண்டுவரும் பொருட்டு குறுமபடங்களுக்கான பிரதேச, மாவட்ட, மாகாண மட்டங்களில் நடாத்தப்படவுள்ளன.

'சமகாலத்தில் அடையாளம் காணப்படும் பண்பாட்டுப் பிறழ்வுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்' என்னும் கருப்பொருளில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

போட்டி விதிமுறையாக 2013 ஆம் ஆண்டில் பிரதேச மட்ட விண்ணப்பத்திகதியின் முடிவுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட குறும்படமாக இருத்தல் வேண்டும். குறும்படமானது 20 நிமிடங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். (திரைக்கதை ஆரம்பத்தில் இருந்து திரைக்கதை முடிவு வரைக்குமான கால வரையறை).

03 குறும்படத்தின் பிரதிகள் (முழுமையானது) விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தினை வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திலும், பிரதேச, மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம். ஒரு விண்ணப்பதாரி எத்தனை படைப்பாக்கங்களையும் அனுப்பிவைக்க முடியும்.

விண்ணப்பங்கள் ஒவ்வொன்றும் பிரதேச, கலாசார உத்தியோகத்தர்கள் மூலம் சிபாரிசு செய்யப்பட்டு, பிரதேச செயலர் ஊடாக படைப்பாக்கங்களை உறுதி செய்து பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு கிடைக்கச்செய்யவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றிபெறும் முதல் 10 குறும்படங்களுக்கு பெறுமதியான பரிசில்களும், வெகுமதிகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும். அத்துடன் ஆக்கங்கள் பிரதேச மட்டத்திற்கு எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவேண்டும்.

பிரதேச மட்ட போட்டி முடிவுகள் எதிர்வரும் 30 ஆம் திகதியும், மாவட்டப்போட்டிகள் மே 5 ஆம் திகதியும் மாகாண மட்டப் போட்டிகள் மே 23 திகதியும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


# முஸ்லிம்கள் ஓதும் குனூத் நிறுத்தம்

முஸ்லிம்கள் ஐந்து நேரத்தொழுகையின் போது ஓதும் 'குனூத்' (அந்நாஸிலா) நிறுத்தப்படவுள்ளது.

அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் பொதுச் செயலாளர் அஷ்சேஷ்க் எம்.எம்.ஏ.முபாரக் இவ்அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

அண்மைக்காலமாக முஸ்லிம்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வந்துள்ளார்கள். இவை முஸ்லிம்களின் அன்றாட வாழ்வைப் பாதித் துள்ளமையினால் முஹமத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலின் பிரகாரம் ஆபத்தான காலகட்டத்தில் பொறுமையைக் காத்து இறைவனிடம் பிரார்த்திக்கும் முறை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

உலமா சபையின் வேண்டுகோளை ஏற்று இலங்கை வாழ். முஸ்லிம்கள் அனைவரும் 'குனூத்' ஓதுவதை நடைமுறைப்படுத்தி வந்தனர். தற்போது அதனைத் தொடரவேண்டிய அவசியம் உணரபபடாமையினால் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (105)


பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் பருத்தித்துறை சங்கத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் மங்கள விளக்கேற்றுவதையும், செயலக கணக்காளர் எஸ்.யோகேந்திரன் உரையாற்றுவதையும், கூட்டத்தில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (01)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## வாட்ட வருகிறது கோடை!

இன்றிலிருந்து வரும் 15 ஆம் திகதி வரை காண்டாவனம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது கடந்த சில நாட்களில் இருந்த வெக்கையை விட அதிகமாய் நம்மை வாட்டப் போகிறது.

வறுத்தெடுக்கும் வெயிலில் உடல் வெப்பமடைவது, சரியான நித்திரையின்றிப் போவது, கவனக் குறைவு, தோல் நோய்கள், தொண்டை நோ, எரிச்சல், படபடப்பு, உடலில் தண்ணீர் பற்றாக் குறை என பாதிப்புகளின் பட்டியலும் நீளும்.

நமது கோடைகள் முன்பைவிட அதிகம் சூடாகி வருகின்றன என்றுதான் கடந்த சில வருடங்களாகத் தோன்றுகிறது. இது போல் வெக்கை இதற்கு முந்தைய ஆண்டுகளில் இருக்கவில்லை என்றே பலரும் அலுத்துக் கொள்கிறோம்.

கோடைகாலத்தில் இரத்தத்தில் உப்புச்சத்தின் அளவு மாறுபடுவதால் ஏற்படும் சிறுநீரகப் பாதிப்புகளிலிருந்து தப்பிக்க நிறைய தண்ணீர் குடிக்கவேண்டி இருக்கும். அதேபோல பச்சைக் காய்கறிகள் பழங்கள் போன்றவற்றை அதிகம் சாப்பிட்டும் உடலில் நீர்த்தன்மையைப் பேணிக்கொள்ள வேண்டும்.

மாறாக, வெக்கைக்கு ஐஸ்கிரீம், குளிர்பதனப்பெட்டியில் வைத்த நீர் நன்றாக இருக்கும் என்று அருந்தினால் தொண்டை பாதிப்பும் தொற்றுகளும்தான் ஏற்படும். கோடையின் அருமருந்து இளநீர் என்பதை மறந்துவிட வேண்டாம். இளநீர் சூட்டைக் குறைக்கும், சிறுநீரகத்தை சுத்திகரிக்கும், உடலில் ஏற்படும் நீர்–உப்பு பற்றாக்குறையையும் நிவர்த்தி செய்யும்.

வியர்வைச் சுரப்பிகளில் அடைப்பு ஏற்படாமல் இருக்க காலையும் மாலையும் குளிப்பது நல்லது. மெல்லிய பருத்தி ஆடைகளையே தேர்ந்து அணிந்துகொள்வது சிறந்தது. வெப்பத் தாக்கு ஏற்பட்டுவிடாமலிருக்க வெயிலில் கண்டபடி அலையாமல் இருப்பதும் நல்லது.

பெரிய நகரங்களில் அலுவலகங்கள் மற்றும் தனியாரும் குளிர்சாதனங்களைப் பெருமளவில் உபயோகிப்பதால், மின்சாரம் அதிகளவு செலவாகிறது. கணனி போன்ற புதிய இலத்திரனியல் உபகரணங்களும் விரைவில் சூடாகிப் பழுதடைந்து விடுவன என்பதால் குளிரூட்டிகள் தொடர்ந்து இயங்க வேண்டியுள்ளன. இதனால் மின்சாரப் பற்றாக்குறை உண்டாகிறது.

ஏன் குளிர்சாதனப் பெட்டிகள் அதிகம் மின்சாரத்தை உறிஞ்சுகின்றன? குளிர்ச்சிக்கு பிரதானமான காற்றமுத்தி செயற்திறன் குறைந்த ஒரு அமைப்பு. காற்றமுத்திக்குப் பதிலாக வேறு ஒரு வழியை ஆராய்ந்து வந்தார்கள். இப்போது அந்த ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் வெற்றி கண்டுள்ளனர். காந்த சக்தியுடைய சில விசேஷ உலோகங்களை ஆராய்ந்து புதிய வழி ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

1997 இல் விஞ்ஞானிகள் கடோலினியம், சிலிக்கன், மற்றும் ஜெர்மானியம் கொண்ட உலோகக் கலவை, வெப்பத்தை சாதாரண வெப்ப அளவில் காந்த சக்தியால் கட்டுப்படுத்த முடியுமெனக் காட்டினார்கள். இதன் பின், பல புதிய உலோகக் கலவைகளில் இவ்வகை நடத்தை இருப்பதை ஆராய்ந்து வெளியிட்டார்கள்.

இந்த வருடத்திற்குள்ளேயே சந்தைக்கு 1,000 சதுர அடி வீட்டை குளிர் செய்ய காற்றமுத்தி இல்லாத குளிர்சாதனப் பெட்டியைக் கொண்டுவரும் முயற்சியில் இருக்கிறார்கள். வழக்கமான குளிரூட்டியை விட, மூன்றில் ஒரு பங்கு மின்சாரம் போதுமாம். அத்துடன், இன்று காற்றமுத்திகள் உபயோகிக்கும் இரசாயனங்களைத் தவிர்த்து வெறும் தண்ணீரை உபயோகப் படுத்துமாம். இந்த இரசாயனங்கள் மோசமானவை என்றபோதும் வேறு வழியில்லாமல் உபயோகித்து வருகிறோம்.

வருங்காலத்தில் குளிரூட்டிகள் இன்றி யாருமே இருக்க முடியாத சூழ்நிலை ஏற்படும் போலவே தோன்றுகிறது. இத்தகைய புதிய கண்டுபிடிப்புச் செய்திகள்தான் முதலில் நம் மனங்களைக் குளிர்விக்க வேண்டும்.

- ஆசிரியர்

# நீதித்துறையில் முளைவிடும் கெடுபிடி யுத்த அபாயம்

(கொழும்பு)

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கும், பிரதம நீதியரசருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் காரணமாக நீதித்துறையில் பாரதூரமான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக இலங்கை சுதந்திர சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவர் பதவியேற்கும் வைபவத்தில், பிரதம நீதியரசருக்கு அழைப்பு விடுக்காதது இந்த நிலைமையை தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது எனவும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

புதிதாக பதவியேற்றுக்கொண்ட இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய பிரதம நீதியரசரை ஏற்றுக்கொள்ளாமையானது இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் வரலாற்றில் கரும் புள்ளியாக பதிவாகியுள்ளது என இலங்கை சுதந்திர சட்டத்தரணிகள் சங்கத்தின் உப செயலாளர் பந்துல வெள்ளாள தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கும், புதிய பிரதம நீதியரசருக்கும் இடையில், கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதன் காரணமாக நீதிபதிகள் எவரும் சனிக்கிழமை நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொள்ளவில்லை.

வரலாற்றில் முதல் முறையாக பிரதம நீதியரசர், சட்டமா அதிபர் சொலிசிட்டர் ஜெனரல் ஆகியோர் கலந்துகொள்ளாத வைபவம் என்ற காரணத்தினால், இலங்கை சட்டத்தரணிகள சங்கத்தின் தொன்று தொட்டு இருந்த வந்த சம்பிரதாயம் மீறப்பட்டுள்ளது எனவும் பந்துல வெள்ளாள தெரிவித்துள்ளார்.

# வைத்தியர் விடுதி பிரச்சினை ஆராய்வதற்கு குழு நியமனம்

யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய விடுதிப் பிரச்சினைகளை ஆராய்வதற்கு 18 பேர் கொண்ட குழு ஒன்றினை நியமித்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் செ.சிறிபவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள வைத்தியர் விடுதியை பகிர்ந்தளிப்பது தொடர்பாக வைத்தியசாலைப் பணிப்பாளருக்கும் வைத்தியர் சங்கத்திற்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இந்த முரண்பாட்டினைத் தீர்க்கும் முகமாக சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் உத்தரவின் பேரில் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் 15 வைத்தியர்க்ள் உட்பட வைத்தியசாலை ஊழியர் ஒருவர் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருவர் அடங்கலாக 18 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவின் தலைவராக சிரேஷ்ட சத்திர சிகிச்சை நிபுணர் என்.சிவகுமார் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தக் குழுவினர் விடுதி பிரச்சினைகளை ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குமாறு சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் பணித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (25)

# மனித அபிவிருத்தி சுட்டெண் முன்னேற்றமடைந்தது இலங்கை

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டிற்கான மனித அபிவிருத்தி அறிக்கையின்படி கடந்த வருடத்தை விட இம்முறை இலங்கை 5 இடங்கள முன்னேறியுள்ளது.

இதனடிப்படையில் 187 நாடுகளின் பட்டியலில் இலங்கை 92 ஆவது இடத்தில் உள்ளது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் இலங்கை 97 ஆவது இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தெற்காசிய வலயத்தில் மனித அபிவிருத்தி சுட்டெண்ணில் இலங்கை தொடர்ந்தும் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தெற்காசிய வலயத்தில் இரண்டாம் இடத்தில் உள்ள மாலைதீவுகள் மனித அபிவிருத்தி சுட்டெண்ணில் 104 ஆவது இடத்தில் உள்ளது.

இந்தியா 136 ஆவது இடத்திலும், பூட்டான் 140 ஆவது இடத்திலும், பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகியன 146 ஆவது இடத்திலும் உள்ளன.

நோர்வே முதலிடத்தைப் பெற்றுள்ள நிலையில், அவுஸ்ரேலியா இரண்டாம் இடத்தையும் அமெரிக்கா மூன்றாம் இடதையும் பெற்றுக்கொண்டுள்ளன.

நெதர்லாந்து, ஜேர்மனி மற்றும் நியூசிலாந்து முறையே நான்காம், ஐந்தாம், ஆறாம் இடங்களைப் பெற்றுக்கொண்டுள்ளன. ஆயுட்காலம், எழுத்தறிவு மற்றும் வாழ்க்கைத் தரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே மனித அபிவிருத்தி சுட்டெண் கணிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது.

# சுற்றாடல் பிரதி அமைச்சர் மீது ஒழுக்காற்று நடவடிக்கையா?

## இடைக்காலத் தடை விதித்தது நீதிமன்றம்

(கொழும்பு)

சுற்றாடல் பிரதி அமைச்சர் அப்துல் காதருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு கல்கிஸை சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இடைக்கால தடை உத்தரவொன்றைப் பிறப்பித்தது.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவு க்கு எதிரான குற்றப்பிரேரணை யின் போது அரசாங்கத்துடன் இணைந்து வாக்களித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஐக்கிய தேசியக் கட்சியினால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையிலேயே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அப்துல் காதர், பின்னர் அரசாங்கத்துடன் இணைந்துகொண்டார். குற்றப்பிரேரணைக்கு எதிராக வாக்களிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி, தனது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்திருந்தது. கட்சியின் இந்தத் தீர்மானத்தை மீறி செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அப்துல் காதருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க ஐ.தே.க. தீர்மானித்தது.

இதன் பிரகாரம், அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது. எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பலர் அவருக்கு எதிரான மனுவைத் தாக்கல் செய்திருந்தனர். இந்நிலையில் இந்த வழக்கு நேற்று இஸட்.ஏ.ரசீட் மற்றும் ரோஹினி வல்கம ஆகிய நீதவான்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே அப்துல் காதருக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அத்துடன் இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# பொங்கல் விழா

(பருத்தித்துறை)

தென்புலோலி ஸ்ரீ முத்து மாரி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று ஆரம்பமாகி நாளை சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு நிறைவுபெறவுள்ளது. அம்பிகை அடியார்கள் தங்கள் நேர்த்திக்காக விடப்படும் ஆட்டுக்கடாக்களை விரும்பும் அடியார்களிடம் அன்பளிப்பாகப்பெற்று ஆலயத் திருப்பணி நிதியுடன் சேர்த்துக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(10)

# உயர் பாதுகாப்பு வலயம், தமிழக மீனவர் ஊடுருவல், கூட்டமைப்பின் நிலைப்பாடு!



சமீபத்தில் வலிகாமம் வடக்கில் அமைந்துள்ள பலாலி இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பொது மக்களின் காணிகளை மீளவும் அவர்களிடமே ஒப்படைக்கக் கோரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், வேறு சில தமிழ்க் கட்சிகளும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் முன்றலில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடாத்தியிருந்தன. இந்தப் போராட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டது ஒரு வேடிக்கைக் காட்சியாக இருந்தது. ஏனெனில் பல வருட வரலாற்றைக் கொண்ட இந்த உயர் பாதுகாப்பு வலயம், ஐ.தே.க.வின் 17 வருட (1977 - 1994) கால ஆட்சியின் போதுதான் உருவாக்கப்பட்டது என்பதை பலர் மறந்து போயுள்ளனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் ஐ.தே.க.வுக்கும் இடையிலான இந்தக் காதல் இன்று, நேற்று ஏற்பட்டதல்ல. தமிழ் தலைமைகளின் பெயர்கள்தான் காலத்துக்குக் காலம் மாறியுள்ளதே தவிர, தமிழ் தலைமைகளுக்கும் ஐ.தே.க.வுக்கும் இடையிலான பாசப்பிணைப்பு இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பே உருவான ஒன்று.

ஐ.தே.க ஆட்சியில் இருக்கும் போது தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுப்பதும், அவர்களது உரிமைகளை வழங்க மறுப்பதும் எப்படி ஒரு வழமையான நிகழ்வோ, அதேபோல தமிழ் தலைமைகள் ஐ.தே.க அரசு பதவியில் இருக்கும் நேரங்களில் சாதுக்களாக, நல்ல பிள்ளைகளாக இருப்பதும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் அமையும் நேரத்தில் போராட்டங்கள் நடாத்துவதும், ஒரு சம்பிரதாயமாக இருந்து வருகிறது. இரு தரப்புகளுக்குமான தற்போதைய கூடிக்குலாவலுக்கு கடந்த வருட மே தினத்தில் யாழ்ப்பாணத்தில் வைத்து பிள்ளையார் சுழி போடப்பட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒரே நோக்கம், வடக்கு, கிழக்கில் இருந்து முற்றாக இராணுவம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்பதே.ஐ.தே.க.வின் நோக்கமும் அதுதானா என்பதை அக்கட்சி நாட்டு மக்களுக்கு விளக்குவது அவசியம். நடைமுறைச் சாத்தியமில்லாத விடயங்களைக் கிளப்புவதும், பின்னர் சிறுபிள்ளைக்குக் காட்டும் பொம்மை போல அதை வைத்தே தமிழ் மக்களின் வாக்குகளைக் கொள்ளையிடுவதும் தமிழ் தலைமைகளின் வாடிக்கையாக இருந்து வருகிறது.

ஆனால் யதார்த்த நிலைமை என்னவெனில், வடக்கிலிருந்து இராணுவத்தை முற்றிலுமாக அகற்றுவது சாத்தியமில்லாதது மட்டுமல்ல, வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தை முற்றாக அகற்றுவதும் சாத்தியமில்லாதது என்பதே. ஏனெனில் நாட்டில் 30 வருடங்களாக ஒரு பிரிவினைவாத யுத்தம் நடந்துள்ளது. அதை நடத்திய புலிகளின் தலைமை 2009 மே மாதத்தில் அழிக்கப்பட்டுவிட்டாலும், புலம்பெயர் நாடுகளில் உள்ள அதன் மீத மிச்சங்கள் திரும்பவும் அணி சேரும் முயற்சிகளில் இருக்கின்றனர். அதுமட்டுமில்லாமல், இலங்கையின் வடபகுதிக்கு மிக அருகில் இருக்கும் இந்தியாவின் தமிழ்நாட்டில், புலி ஆதரவு சக்திகள் இலங்கையில் மீண்டும் ஒரு பிரிவினைவாதப்போராட்டத்தை ஆரம்பிப்பதற்காக முனைப்பாகச் செயல்பட்டு வருகின்றனர்.

> வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள காணிகள் முழுவதையும் மீட்க முடியாது என்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு நன்கு தெரிந்திருந்தும், பொதுமக்களை ஏமாற்றவும், ஏதாவது அரச எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்பதற்காகவும், இந்தப் பிரச்சினையை அவர்கள் கையில் தூக்கிப் பிடித்துள்ளனர். அவர்களது இந்தப் 'போராட்டத்துக்கு' ஆதரவு தெரிவிக்க ஓடோடிச் சென்ற ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாளைக்கு ஆட்சிக்கு வந்தால், அவர்கூட இந்தப் பாதுகாப்பு வலயக் காணிகளை உரியவர்களிடம் ஒப்படைக்கப் போவதில்லை என்பதும் கூட்டமைப்பினருக்குத் தெரியாமல் இல்லை.

இந்த சூழ்நிலையில் இலங்கையில் அமையும் எந்தவொரு அரசும் பலாலி படைத்தளத்தை வலுவாகவே வைத்திருக்க முயற்சிக்கும். இதுதான் உண்மையான நிலைவரம். எனவே வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் அகப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகள் சம்பந்தமான பிரச்சினைக்கு நடைமுறை சார்ந்த தீர்வொன்றைக் காண்பது பற்றியே சிந்திப்பது அவசியம்.

அப்படிப் பார்த்தால், முதலாவதாக இந்தப் பாதுகாப்பு வலயத்தில் காணி வைத்திருப்பவர்களின் காணிகளில் முடியுமானவற்றை அரசுடன் பேசி விடுவிக்க முயற்சிக்கலாம். அண்மையில் இராணுவத்தின் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி ஹத்துருசிங்க தெரிவித்த விபரங்களின்படி, வலி வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்த பொது மக்களின் காணிகளில் அரைவாசியை 2009 இல் யுத்தம் முடிவுற்ற பின்னர் இராணுவம் விடுவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். எனவே மேலும் அதிகமான காணிகளை விடுவிக்க பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது பயனுள்ளதாக இருக்கும். ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் என மக்களுக்கு 'ஷோ" காட்டி வாக்குப் பிடுங்குவதைவிட இது பயனுள்ளது.

இரண்டாவதாக, விடுவிக்க முடியாத காணிகளுக்கு மாற்றீடாக வேறு பொருத்தமான இடங்களில் காணி பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிக்கலாம்.

இவற்றைவிடத் தமது காணிகளுக்கு நஷ்டஈடு பெற விரும்புபவர்களுக்கு உரிய நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுக்கலாம். இதில் இன்னொரு கவனத்துக்குரிய விடயமென்னவெனில், இந்தக் காணிப் பிரச்சினை ஆரம்பமாகி மூன்று தசாப்தங்கள் ஆகிவிட்டதால், பலர் நாட்டைவிட்டே வெளியேறிவிட்டனர் அல்லது நாட்டின் ஏனைய பகுதிகளில் நிரந்தரமாகக் குடியமர்ந்து விட்டனர்.

வலி. வடக்கு. உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள காணிகள் முழுவதையும் மீட்க முடியாது என்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு நன்கு தெரிந்திருந்தும், பொதுமக்களை ஏமாற்றவும், ஏதாவது அரச எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்பதற்காகவும், இந்தப்பிரச்சினையை அவர்கள் கையில் தூக்கிப் பிடித்துள்ளனர். அவர்களது இந்தப் "போராட்டத்துக்கு" ஆதரவு தெரிவிக்க ஓடோடிச் சென்ற ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாளைக்கு ஆட்சிக்கு வந்தால்,அவர் கூட இந்தப் பாதுகாப்பு வலயக் காணிகளை உரியவர்களிடம் ஒப்படைக்கப் போவதில்லை என்பதும் கூட்டமைப்பினருக்குத் தெரியாமல் இல்லை. ரணில் தனது இம்முறை யாழ்ப்பாண விஜயத்தின் போதே, "பலாலி இராணுவ முகாம் முக்கியமான ஒன்று" எனத் தெரிவித்ததின் மூலம் தனது நிலைப்பாட்டைச் சூசகமாகச் சொல்லிவிட்டார்.

இந்த வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயக் காணிப் பிரச்சினை முக்கியமானது என்ற போதிலும், அது சில நூறு குடும்பங்களுடன் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினை. அதேநேரத்தில் இதைவிட முக்கியமானதும், ஆயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரத்துடன் சம்பந்தப்பட்டதுமான ஒரு பிரச்சினை இலங்கையின் வடக்கு, கிழக்கு, மேற்குக் கரையோரங்களில் வாழும் தமிழ் மீனவக் குடும்பங்களுக்கு இருக்கிறது. அதுதான் இந்திய மீனவர்களின்ஊடுருவல் பிரச்சினை. இந்த இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியால் பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் மீனவக் குடும்பங்கள் வாழ வழியின்றித் தவிக்கின்றனர்.

இந்த மீனவர் பிரச்சினை குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு மூச்சுவிடக் காணோம். அந்த மீனவர்களுக்காக கூட்டமைப்பினர் ஏன் ஒரு உண்ணாவிரதத்தை ஒழுங்கு செய்யவில்லை? குறைந்த பட்சம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதுவரிடம் ஒரு ஆட்சேபனைக் கடிதத்தைத் தன்னும் கையளிக்கலாம் தானே?

ஆனால் கூட்டமைப்பினர் அதைச் செய்யமாட்டார்கள். அதைச் செய்தால் தமிழகத்திலுள்ள தமிழ் விஸ்தரிப்புவாத புலி ஆதரவுக் கட்சிகளின் ஆதரவை இழக்க வேண்டி வரலாம் அல்லவா? அத்துடன் தமிழகத்தில் பாதுகாப்பாகத் தங்கவைக்கப்பட்டுள்ள தமது குடும்பங்களின் சுகபோக வாழ்க்கைக்கும் இடையூறு நேரலாம் அல்லவா?

சிங்கள மீனவர்கள் வடக்கில் வந்து மீன் பிடித்தால் கூச்சல் போடும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அந்நிய (தமிழக) மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்தால் நில பாவாடை விரித்து வரவேற்கக் காத்திருக்கிறது! புலிகளும் தமது காலத்தில் இதைத்தான் செய்தார்கள். அவர்களது கடற்புலிகள் இந்திய மீனவர்கள் வடபகுதிக் கடலில் மீன் பிடிக்கப் பாதுகாப்பு வழங்கியிருக்கிறார்கள். இதை புலிகளின் ஏற்பாட்டில் சட்ட விரோதமாக வன்னிக்கு வந்து சென்ற வை.கோபாலசாமி நேரில் பார்த்து புலிகளைப் புகழ்ந்து தள்ளியும் இருக்கிறார்.

இந்த நிலைமையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் மீனவர்களின் பிரச்சினை குறித்துத் தொடர்ந்து மௌனம் சாதித்துக்கொண்டு, வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலய மக்களின் காணிகளுக்காகப் போராடுவது என்பது சுத்த பம்மாத்தே தவிர வேறொன்றுமில்லை. உண்மையில் அவர்களுக்கு தமிழ் மக்கள் மீது அக்கறை இருக்குமாக இருந்தால், மீனவர்களுக்காகவும் போராட்டம் நடாத்த வேண்டும்.

இதிலிருந்து ஒன்று தெரிகிறது. இவர்களது போராட்டங்கள் எல்லாம், இலங்கை அரச எதிர்ப்பு என்பதை மட்டும் இலக்காகக் கொண்டுள்ளன என்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

இலங்கையில் எப்படியும் ஒரு ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்து, அதை ஏகாதிபத்தியத்தின் ஆசிய விஸ்தரிப்புக்கான மிதி பலகையாகமாற்ற வேண்டும் என்ற உலகளாவிய திட்டத்தின் பங்காளர்களாகவே ஐக்கிய தேசியக்கட்சியும், தமிழ் கட்சிகளும் செயல்படுகின்றனவே தவிர, அதற்கும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

(நன்றி: வானவில் 26)

# கிராமத்து சண்டியராக கோஷமிட்டு சர்வதேசத்தை அடக்க முடியாது

## கூறுகிறார் ரவி கருணாநாயக்க



(கொழும்பு)

கிராமத்து சண்டியர்களைப் போன்று கோஷமிடுவதன் மூலம் சர்வதேச சமூகத்தை அடக்கி ஆள முடியுமென அரசாங்கம் கருதுகினறது.

ஆனால் இந்த செயற்பாடு நடைமுறைச் சாத்தியமற்றதென ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இது தொர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்தியா மீது அரசாங்கம் கோபம் கொள்வதில் அர்த்தமில்லை.

அரசாங்கத்தின் பிழைகளுக்கு இந்தியாவையோ அல்லது வேறும் நாடுகளையோ குற்றம் சுமத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.


நாடு தற்போது எதிர்நோக்கி வரும் நெருக்கடி நிலைமைகளுக்கு அரசாங்கமே பொறுப்புச்சொல்ல வேண்டும்.

அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு பல்வேறு வாக்குறுதிகளை அளித்த போதிலும் அவை உரிய முறையில் நிறைவேற்றப்படவில்லை.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்துவதாக அரசாங்கம் பல்வேறு சந்தர்ப்பங்களில் வாக்குறுதி அளித்த போதிலும், இந்த வாக்குறுதிகள் உரிய முறையில் நிறைவேற்றப்படவில்லை.

சகல சந்தர்ப்பங்களிலும் சர்வதேச சமூகத்தை முட்டாளாக்க முடியும் என்ற அரசாங்கத்தின் திட்டம் பயனளிக்காது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் தற்போதைய நிலை குர்ஷித், ரணில் சந்தித்துப் பேச்சு



(புதுடில்லி)

புதுடில்லிக்குப் பயணம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித்தை சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பில இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டதாக புதுடில்லித் தகவல்கள் தெரிவித்தன. குறிப்பாக, ஜெனிவா தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்த பின்னர், இலங்கையில் அதிகரித்து வரும் இந்திய எதிர்ப்புணர்வு குறித்துக் கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவருகிறது.

முன்னதாக, ரணில் விக்கிரமசிங்க, பா.ஜ.க. தலைவர்கள் எல்.கே. அத்வானி, சுஸ்மா சுவராஜ் ஆகியோரையும் சந்தித்துப் பேசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜெயலலிதாவின் ஈழக்கோரிக்கை ஏற்கவில்லை ஏனைய கட்சிகள்

## என்கிறது திவயின

(கொழும்பு)

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் ஈழக்கோரிக்கையை ஏனைய கட்சிகள் ஏற்றுக்கொள்ளவில்லை என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் புதுடில்லியில் அண்மையில் நடைபெற்ற சர்வ கட்சி மாநாட்டில் ஈழ இராச்சியத்தை உருவாக்குவது குறித்த யோசனையை, ஜெயலலிதா முன்வைத்துள்ளார்.

எனினும், இந்த யோசனையை ஏனைய மாநிலக் கட்சிகளோ அல்லது தேசியக் கட்சிகளோ ஏற்றுக்கொள்ளவில்லை.

தமிழக மாநிலக் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர்ந்த ஏனைய கட்சிகள் இந்த யோசனைக்கு ஆதரவளிக்கவில்லை.

பாரதீய ஜனதாக் கட்சி போன்ற கட்சிகளும் இந்த யோசனைக்கு ஆதரவளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது என திவயின குறிப்பிட்டுள்ளது.

# மாத்தறையில் காணாமற் போனோர் தகவல் திரட்டுகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

மாத்தளையில் 1988-1990 வரையான காலப்பகுதிகளில் காணாமற் போனவர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டவுள்ளதாக ஜே.வி.பி. கட்சி தெரிவித்துள்ளது.

விசேட கமிட்டி ஒன்றை நிறுவி அதன் மூலம் குறித்த தகவல்கள் திரட்டப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஜே.வி:பி. மாகாணசபை உறுப்பினர் கமகெதர திஸாநாயக்கவின் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள கமிட்டி இவ்வாறு தகவல்களைத் திரட்ட உள்ளது.

வீட்டுக்கு வீடு சென்று காணாமற் போனோர் பற்றிய தகவல்களைத் திரட்டவுள்ளதாக ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அண்மையில் மாத்தளை வைத்தியசாலைப் பகுதியில் மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டதாகவும், அவை ஜே.வி.பி. உறுப்பினர்களின் உடல் எச்சங்கள் என்பதனை உறுதிப்படுத்தும் நோக்கில் இவ்வாறு தகவல் திரட்டப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உரிய முறையில் அரசாங்கம் விசாரணை நடத்தினால் இந்தத் திரட்டப்படும் தகவல்கள் விசாரணைகளுக்காக வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# ஊடக சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் இல்லை

## இராணுவம் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் ஊடக சுதந்திரம் முடக்கப்பட்டுள்ளதாக சுமததப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என இராணுவப் பேச்சாளர் ருவான் வனிக சூரிய தெரிவித்துள்ளார்.

டொலர்களைப் பெற்றுக் கொள்ள விரும்பும் சில தரப்பினர் ஊடக சுதந்திரம் கிடையாது என சர்வதேச ரீதியாக பிரசாரம் செய்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கோ, ஊடகவியலாளர்களுக்கோ அரசாங்கம் அல்லது படையினர் எவ்வித இடையூறுகளையும் ஏற்படுத்தவில்லை.

நாட்டின் எப்பாகத்திலும் செய்தி சேகரிப்பு, பிரசுரம் அல்லது பத்திரிகை விற்பனைக்கு எவ்வித தடையும் கிடையாது.

ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

பணம் சம்பாதிக்க விரும்பும் சில தரப்பினர் நாட்டில் ஊடக சுதந்திரம் கிடையாது என சர்வதேச சமூகத்தை பிழையாக வழிநடத்தி வருகின்றனர்.

நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு பாரியளவு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், யுத்த காலத்தையும் விடவும் அதிகளவு அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கடற்புலிகளின் படகுகள் வடிவமைப்பு; சீன பாதுகாப்புக் குழுவினர் வியப்பு



(திருமலை)

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சீனாவின் உதவிப் பாதுகாப்பு அமைச்சர் சோயு குய்ங் தலைமையிலான சீனப் பாதுகாப்பு அதிகாரிகள் குழு கடந்த செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் பாதுகாப்பு நிலைகளைப் பார்வையிட்டுள்ளது.

இலங்கைக் கடற்படையின் கிழக்குத் தலைமையகம் அமைந்துள்ள டொக்யார்ட்டுக்கு சென்ற இந்தக் குழுவினர், திருகோணமலைத் துறைமுகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைப் பார்வையிட்டுள்ளனர்.

படகு மூலம் இவர்கள் திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றிப் பார்வையிட்டதுடன், அங்குள்ள கடற்படை அருங்காட்சியகத்துக்கும் சென்றனர்.

கடற்புலிகளால் வடிவமைக்கப்பட்டு பயன் படுத்தப்பட்ட கரும்புலித் தாக்குதல் படகு ஒன்றைப் பார்த்த சீனாவின் உதவிப் பாதுகாப்பு அமைச்சர் வியப்புத் தெரிவித்துள்ளார்.

கடற்புலிகளின் படகுகள் வடிவமைப்பு மற்றும் அவர்கள் கையாண்ட தாக்குதல் உத்திகள் குறித்தும் சீனப் பாதுகாப்பு அமைச்சர், இலங்கை கடற்படையின் கிழக்கு பிராந்தியத் தளபதியிடம் கேட்டறிந்து கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தமிழக போராட்டங்களுக்கு கர்தினால் மல்கம் கண்டனம்



(கொழும்பு)

தமிழகத்தில் இடம்பெற்று வரும் போராட்டங்களுக்கு கர்தினால் மல்கம் ரஞ்சித் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

தமிழகத்தில் இலங்கையர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களை நிறுத்துமாறு தமிழக கத்தோலிக்கச் சபையிடம், கர்தினால் மல்கம் ரஞ்சித் கோரியுள்ளார்.

தமிழகத்தில் வாழும் இலங்கையர்கள் தொடர்பில் சர்ச்சைகள் இருந்தால் அதனைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள முடியும்.

தமிழகத்திற்குச் செல்லும் இலங்கையர்கள் துன்புறுத்தப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. தற்போது நாட்டில் பல அமைப்புக்கள் உருவாகி போராட்டம் நடத்தி வருகின்றன.

30 ஆண்டுகள் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் பிரச்சினைகள் அவசியமில்லை என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

# பொய்யுள்



— மூலபாரதி

## குறைகள்!

வடக்கில் தேர்தல் வருகுதாம்
வட்ட மேசை கூட்டுங்கள்!
கிடப்பில் போட்ட உரிமையை
கிறுக்கி தள்ளி வாருங்கள்!

முள்ளி வாய்க்கால் மோதலில்
மடிந்த சனத்தின் வாக்குகள்
அள்ளிப் போட்டார் குப்பையில்
அங்கத் துவமும் குறையுமாம்!

உரிமை எதற்கு காச்சவா
உணவு அதனால் கிடைக்குமா
எரியும் தமிழர் இதயங்கள்
எதற்கு? உதவும் சொல்லுங்கள்!

# வியாபார நிலையங்களில் வாடகைப்பணம் அறவிடுவது குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)


வர்த்தகர்களுடன் இணக்கப்பாடு எட்டும்வரையில் வர்த்தக நிலையங்களுக்கான வாடகையை கூடுதலாக அறவிடக் கூடாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார்ந்தவர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் சாவகச்சேரி வர்த்தக சங்க, நகரசபை மற்றும் விலைமதிப்பீட்டுத் திணைக்கள பிரதிநிதிகளுடன், கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட வியாபார நிலையங்களில் வாடகைப் பணம் அதிகளவில் அறவிடுவது தொடர்பில் வர்த்தகர்களால் எடுத்துக் கூறப்பட்ட போது இவ்விடயம் தொடர்பாக விலை மதிப்பீட்டுத்திணைக்களம் மறு பரிசீலனை செய்ய வேண்டுமெனக்கேட்டுக் கொண்டதுடன் இணக்கப்பாடு எட்டும்வரையில் வாடகைப்பணத்தை கூடுதலாக அறவிடக்கூடாது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் நடமாடும் வியாபாரிகளால் தமது வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகவும், இதனைக் கருத்திற் கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இம்மாத நடுப்பகுதியில் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி வர்த்தகர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு உரியதீர்வு கிடைக்க வழிசமைக்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.



இதன்போது ஈ.பி.டி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா, ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சைவசமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6, 7, 8 ஆம் வகுப்புக்களில் சைவநெறி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

உடுவில், தெல்லிப்பளைக் கோட்டப் பாடசாலை ஆசிரியர்களிற்கான மேற்படி செயலமர்வு எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சங்கானை, சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலை ஆசிரியர்களிற்கான மேற்படி செயலமர்வு எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை மனிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் கற்றல், கற்பித்தல் தொடர்பில் மாணவர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள், அதற்கான தீர்வுகள் செயலட்டை தயாரித்தல் முதலான விடயங்கள் தொடர்பில் செயலமர்வு நடைபெறவுள்ளது. ஆசிரியர்கள் கைநூல், பாடநூல் என்பவற்றுடன் தவறாது செயலமர்வில் பங்குபற்ற ஆவன செய்யுமாறு அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. (06)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அத்தியடி சிதம்பர நடராஜர் வீரகத்திப் பிள்ளையார் வருடாந்த மகோற்சவப் பெருவிழா நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 14 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 15 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும், 16 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (95)

# யாழ். பண்ணைப் பாலம் துரித கதியில் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். - பண்ணைப் பாலம் தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இப்பாலத்தின் ஒரு பகுதி துருப்பிடித்து துவாரம் விழுந்த நிலையில் அண்மை நாட்களாகக் காணப்பட்டது. இதனையடுத்தே அப்பகுதி புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இப்பாதை யாழ்ப்பாணம் - தீவகப்பகுதியை இணைக்கும் மிக முக்கியமானதாக காணப்பட்டு வருகிறது. அத்துடன் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளும், நயினாதீவு ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களும் அதிக பயணத்தை இப்பாதையூடாக் மேற்கொண்டு வருகின்ற நிலையில் இப்பாலம் துரித கதியில் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

அத்துடன் யாழ் - பண்ணையில் இருந்து இப்பாலத்தின் ஊடாக ஒரு கிலோமீற்றர் தூரம் வரையான வீதிக்கு காப்பெற் இடப்பட்டு ஒரு வருடகாலம் முடிவுற்ற நிலையில் ஏனைய வீதிகளுக்கு இது வரை காப்பெற் இடாது உள்ளமையால் போக்குவரத்து சிரமத்துடன் இடம்பெறுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (21)

# கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் (NAITA) இளைஞர், யுவதிகளுக்கான புதிய பிரிவுகளுக்கான கற்கைநெறிகள் ஆரம்பமாகவுள்ளன. எனவே இக்கற்கைநெறிகளைப் பயில விரும்பும் பயிலுநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தாதி உதவியாளர் (Nursing Assistant) தகைமை: கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம், கணனி வன்பொருள் தொழில் நுட்பம் தகைமை: தரம் 10, தட்டச்சு பொறிவலர் (தமிழ்) Stenography தகைமை: கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம், கணினி அனுமதிப்பத்திர கற்கைநெறி தகைமை: கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம்.

ஆகிய கற்கைநெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை மாவட்ட முகாமையாளர், NAITA ஆனந்தபுரம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் கிடைக்குமாறு அனுப்பிவைக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# முரசின் இன்றைய பலன்

(05.04.2013 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் பங்குனி மாதம் 20 ஆம் திகதி.
நட்சத்திரம் உத்தராடம். பின்இரவு 12.27 வரை. திதி அட்டமி
முன்னிரவு 11.33 வரை. இராகுகாலம் 12.10 - 01.40 வரை.
சுபநேரம் 04.40 - 06.10 வரை. மரணயோகம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உறவினர் எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், தாமதகதியில் இயங்கும். அளவான பணவரவு. ஒவ்வாத பொருள் ஆசைப்பட வேண்டாம். கணவன் மனைவி அன்யோன்யம். |
| ரிஷபம் | முழக்க வேண்டிய வேலைகள் அதிகமிருக்கும். எவரிடமும் விரக்தி மனதுடன் பேசவேண்டாம். தொழில் இலக்கு நிறைவேற்ற அவகாசம் எடுக்கும். சுமாரான பணவரவு. மின் உபகரணங்களுடன் கவனம். |
| மிதுனம் | வாழ்வில் வளம் பெற, புதிய வாய்ப்பு வரும். முறையாக பயன்படுத்துவதால் நன்மை. தொழில், சீர்பெற முழு கவனத்துடன் பணிபுரிய வேண்டும். பிறர் பார்வைக்காக செலவு செய்ய வேண்டாம். ஒவ்வாத உணவு விலக்குக. |
| கடகம் | புதிய நன்மைகளை பெற செயல்படுவீர்கள். அனுகூல சூழ்நிலை அமையும். தொழில், அபிவிருத்தியாகும். சராசரி பணவரவு. கடன் வசூலாகும். நண்பர்கள் விருப்பப்படி நடந்து கொள்வீர்கள். பிள்ளைகளால் பெருமை. |
| சிம்மம் | சிலர் கோபப்பட வைப்பர். எதிர்ப்போர் செயலை முறியடிப்பீர்கள். மனதில் மகிழ்ச்சி நிறையும். தொழில், வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நடக்கும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். விருந்து உபசரிப்பு. |
| கன்னி | மனதில் பாதிப்பை ஏற்படுத்தும் நிகழ்வுகள் நடக்கலாம். குழப்பமனதுடன் முக்கிய காரியங்களில் ஈடுபட வேண்டாம். தொழில், சராசரி அளவில் இருக்கும். மிதமான பணவரவு. போக்குவரத்தில் கவனம் நல்லது. |
| துலாம் | செயல்கள் யாவையும் நேர்த்தியுடன் முடிப்பீர்கள். சமூகத்தில் நன்மதிப்பு, மரியாதை கிடைக்கும். தொழிலில், புதிய வளர்ச்சிப் பரிமாணம். பணவரவு அதிகரிக்கும். பெற்றோரின் தேவை நிறைவேற்றுவீர்கள். |
| விருச்சிகம் | வெளிவட்டார தொந்தரவு வரலாம். பணிகளில் தற்காப்பு அவசியம். தொழிலில் அளவான மூலதனம் போதும். பகட்டுக்காக பயன்தராத பொருள் வாங்கவேண்டாம். உடல் நலத்திற்கு உணவில் கவனம். சிரமம் குறையும். |
| தனுசு | சிலரது ஆலோசனையால் தர்மசங்கடம் உருவாகும். பொறுமையுடன் நடந்தால் நன்மை பெறலாம். தொழில், வளர்ச்சிப் பணிக்கு, காலம் தேவைப்படும். சிக்கனம் நல்லது. கவனக்குறைவால் உடல் கெட நேரிடலாம். |
| மகரம் | மனதில் புதிய சிந்தனை உருவாகும். செயல்களில் அதிக நன்மை பெறுவீர்கள். தொழில், கூடுதல் மூலதனம் இட்டு செழிக்கும். இல்லறத்துணை அன்பில் மகிழ்வு. புதிய முயற்சிகள் நல்லபழயாகும். |
| கும்பம் | ஆன்மிக நாட்டம் நிறைந்திருக்கும். கடந்த நாளில் திகைப்பு தந்த பணி, நிறைவேறும். தொழில் வளர்ச்சியில், புதிய பரிமாணம் ஏற்படும். பணவரவில் முன்னேற்றம். சுற்றத்தவரிடம் இருந்து அனுகூலம். சுபநிகழ்ச்சி . |
| மீனம் | எவரிடமும் உயர்வு, தாழ்வு கருதாமல் பழகுவீர்கள். முயற்சிகளில் அதிக நன்மை கிடைக்கும். தொழில், வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். உபரி வருமானம் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு உயர்வும் புகழும். நித்திரையில் இனிய கனவு. |

## இன்றைய ஆட்டம்



Season 6


# IPL

ஹைதராபாத் சன் றைஸ் எதிர் புனே வாரியர்ஸ்

இடம்: ராஜீவ்காந்தி சர்வதேச மைதானம்

இரவு 8.00 மணி

# எளிதில் வெற்றிபெற பந்து வீச்சே காரணம்



டில்லி அணிக்கு எதிரான போட்டியில், பந்து வீச்சாளர்களின் சிறப்பான செயல்பாட்டால் எளிதில் வெற்றி பெற முடிந்தது என, கொல்கத்தா அணி கப்டன் கம்பீர் தெரிவித்துள்ளார். தொடரை வெற்றியுடன் தொடக்கியது மகிழ்ச்சி அளிக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின் முதல் போட்டியில் வெற்றி பெற்றுள்ளோம். இப்போட்டியில் எங்கள் அணி வீரர்களின் செயற்பாடு திருப்தி அளிக்கிறது. இந்த வெற்றிக்கு பந்து வீச்சாளர்கள் முக்கிய பங்குவகித்தார்கள். அருமையாக பந்துவீசிய இவர்கள், டில்லி அணியை 128 ஓட்டங்களுக்குள் சுருட்டி, துடுப்பாட்ட வீரர்களின் நெருக்கடியைக் குறைத் தனர். குறிப்பாக, சுனில் நரைன் துல்லியமாகப் பந்துவீசினார். இவரது 'ஆட்டத் திறன் அடுத்து வரும் போட்டிகளிலும் தொடரும் என நம்புகிறேன். இவரைத் தவிர ரஜத் பாட்யா, பிரட் லீ, பாலாஜி ஆகியோ ரும் சிறப்பாகப் பந்துவீசி, எதிரணியின் ஓட்ட வேட்டையை தடுத்தனர். அடுத்து வரும் போட்டிகளில் வெற்றி நடையை தக்கவைத்துக் கொள்ள முயற்சிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கொல்கத்தாவுக்கு எதிரான முதல் போட்டியில் தோல்வி அடைந்தது ஏமாற்றம் அளிக்கிறது என டில்லி அணி கப்டன் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார். போட்டியில் முதல்நிலை விக்கெட்டுகளை அடுத்தடுத்து இழந்தது தோல்விக்கு வித்திட்டது. கூடுதலாக 30 ஓட்டங்கள் எடுத்திருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம். சுனில் நரைன் துல்லியமாக பந்துவீசி எங்கள் அணி துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடி கொடுத்தார். எங்கள் அணியில் உள்ள நிறைய இளம் வீரர்கள் இவரது பந்துவீச்சை எதிர்கொண்டதில்லை. இப்போட்டியில் காயம் காரணமாக சேவாக் விளையாடவில்லை. 2ஆவது போட்டியில் இவர் களமிறங்குவார் என எதிர்பார்க்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# பலத்தைக் கொடுப்பவர்கள்



இஷாந் சர்மா மற்றும் டேல் ஸ்டெய்ன் ஆகியோர் சிறப்பாக பந்து வீசி எமது அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்வரென ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணியின் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்தார்.

எமது அணியில் இடம் பெற்றுள்ள வேகப்பந்து வீச்சாளர்களான இஷாந்த் சர்மா, டேல் ஸ்டெய்ன் ஆகியோர் சிறப்பாகச் செயற் பட்டு அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச்செல்வர் என நான் நம்புகின்றேன். இஷாந்த் ஷர்மா இவ் வருடம் அவுஸ்ரேலியாவிற்கு எதிரான போட்டிகளில் சிறப்பாக விளையாடியுள்ளார்.

அதேபோல் கடந்த நான்கு வருடங்களாக ஸ்டெய்னும் நன்கு விளையாடி வருகிறார். இந்த இருவரும் சேர்ந்து அணிக்கு, பந்து வீச்சில் நல்ல பலத்தை தருவார்கள். புதிய பந்தில் ஆட்டத்தின் போக்கையே மாற்றக்கூடிய தன்மையைக் கொண்டவர்கள் அவர்கள் எனவும் சங்கக்கார தெரிவித்தார்.

# ஊக்கமருந்து தந்த பரிசு வந்தது போட்டித் தடை



(மொஸ்கோ)

ரஷ்யாவின் தடகள வீராங்கனை எலீனா சுரகோவா (வயது 26). இவர் லண்டன் ஒலிம்பிக்கில் 400 மீற்றர் தடகளத்தில் பங் கேற்றவர். எலீனா தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தினை உட்கொண்டதாக பரிசோதனையில் தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து 2 வருடங்கள் போட்டிகளில் கலந்து கொள்ள அவருக்கு தடை விதித்துள்ளதாக அனைத்து ரக்ஷ்ய அத்லெட்க் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

எலீனா தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தான மெட்டான் டைமீனோன் மற்றும் டெஸ்டோஸ்டீரோன் ஆகியவற்றை எடுத்துக் கொண்டது சோதனையில் தெரிய வந்துள்ளது. இந்தப் பரிசோதனைக்கான மாதிரிகள் கடந்த ஜனவரி 26இல் போர்த்துக்கல் நாட்டில் நடைபெற்ற பயிற்சி முகாமில் வைத்து அவரிடம் இருந்து பெறப்பட்டன. அதன் முடிவில் பொசிட் டிவ் என தெரிய வந்ததைத் தொடர்ந்து பெப்ரவரி 28, 2013ஆம் ஆண்டில் இருந்து போட்டிகளில் விளையாட தடை விதிக் கப்பட்டுள்ளது.லண்டன் ஒலிம்பிக்கின் 400 மீற்றர் தொடர் நீச் சல் போட்டியில் கலந்து கொண்ட ரஷ்ய வீராங்கனை நடால்யா லோவ்ட்சோவா ஊக்க மருந்து உட்கொண்டது தெரிய வந் ததை அடுத்து 2.5 வருடங்கள் விளையாட கடந்த மாதம் தடை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# கிரிக்கெட் வாழ்வு முடிவா? தேம்பி அழுதார் சச்சின்

(பெங்களூர்)

அறிமுகப் போட்டியிலேயே எனது கிரிக்கெட் வாழ்க்கை முடிந்துவிட்டதாக நினைத்தேன் என சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

பெங்களூரில் சன்பீஸ்ட் நிறுவனம் நடத்திய போட்டியில் வென்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்றபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், எனது 16ஆவது வயதில் முதல் முறையாக பாகிஸ்தானில் கிரிக்கெட் வாழ்க்கையைத் தொடங்கினேன். கராச்சியில் நடைபெற்ற முதல் போட்டியில் களமிறங்கி ஆடியபோது எனக்கு அதிவேகப் பந்துவீச்சாளர்களான அக்ரம், வக்கார் யூனிஸ் ஆகியோர் பந்து வீசி-னர். அப்போது ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்பதைவிட, தொடர்ந்து மைதானத்தில் தாக்குப்பிடிக்க வேண்டும் என்றே கடவுளிடம் வேண்டிக் கொண்டேன். ஆனால், சொற்ப ஓட்டங்களிலேயே ஆட்டமிழந்தேன்.

ஓய்வறைக்குத் திரும்பிய எனக்கு சந்து போர்டே உள்ளிட்டோர் ஆறுதல் கூறினர். இருப்பினும் அந்தப் போட்டியுடன் எனது கிரிக்கெட் வாழ்க்கை முடிந்துவிட்டதாக நினைத்ததால், அன்றிரவு முழுவதும் எனது மனதுக்குள் பெரும் போராட்டமே நடந்தது.

எனினும், இறைவன் அருளால் இன்று வரை தொடர்ந்து கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கிறேன். என்னை எல்லோரும் கிரிக்கெட்டின் கடவுள் என்று அழைக்கிறார்கள். நான் கிரிக்கெட்டின் கடவுள் இல்லை. நான் தவறுகளை செய்யக்கூடியவன். கவாஸ்கர்-விவியன் ரிச்சர்ட்ஸ் ஆகிய இருவரும் தான் எனக்கு எப்போதுமே ரோல்மாடல் இந்த இருவரையும் இணைந்தே நான் இருக்க விரும்புகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மனுத் தாக்கல்

(கொழும்பு)

எதிர்வரும் 16 ஆம் திகதி நடத்து வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள இலங்கை கிரிக்கெட் நிறுவன தேர்தலை ஒத்தி வைக்குமாறு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய் யப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் நிறுவன தேர்தலில் இந்தமுறை உப செயலாளர் பதவிக்கு போட்டியிடும் எதிரிமுனி தேவப்பிரிய என்பவர் குறித்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தற்போதைய தலைவர் உபாலி தர்ம தாஸ, செயலாளர் நிசாந்த ரணதுங்க, உப தலைவர் கே.மதிவாணன் மற்றும் கிரிக்கெட் நிறுவன நிறைவேற்று சபை உறுப்பினர்கள் அனைவரும் மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

தான் உப தலைவர் பதவிக்கு வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளபோதும் இது வரையில் தனக்கு எதுவித அறிவித்தல் களும் விடுக்கப்படவில்லை என எதிரி-முனி தேவப்பிரிய தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு செய்வது நிபந்தனைகளை மீறும் செயல் என அவர் சுட்டிக் காட்டி யுள்ளார்.

# உரிமம் பெற்றது ஜேர்மன் நிறுவனம்

(ஜூரிச்)

சுவிட்சர்லாந்து நாட்டின் ஜூரிச்சைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் உலக கால்பந்து சம்மேளனம் பிபா, வரும் ஜூலை மாதம், பிரேசில் நாட்டில் கால்பந்து போட்டியொன்றை நடத்த உள்ளது.

2014 ஆம் ஆண்டு, பிரேசிலில் நடைபெறவிருக்கும் உலக கால்பந்து போட்டிக்கு முன்னோடியாக நடக்க இருக்கும் இந்தப் போட்டியின் கோல் வரிசைத் தொழில்நுட்ப மேற்பார்வைக்கு, ஒப்பந்த அடிப்படையில் தேர்வு நடந்தது.

அதில், ஜேர்மனியின் கோல் கண்ட்ரோல் ஜி.எம்.பி.ஹெச். நிறுவனம் உரிமத்தைப் பெற்றது. இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் திருப்திகரமாக இருந்தால், தொடர்ந்துவரும் உலகப்போட்டியிலும், இவர்களே இந்தப் பொறுப்பில் ஈடுபடுவார்கள் என்று சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவ்ரி மாதம் வெளியிடப்பட்ட இதற்கான ஒப்பந்தப் புள்ளிகளில் கடைசி யாகக் கலந்துகொண்ட ஜேர்மன் நிறுவனம், மற்ற மூன்று நிறுவனங்களைப் பின்னுக்குத் தள்ளி, இந்த உரிமத்தைப் பெற்றுள்ளது.

போட்டியின் நடுவர்கள் கட்டியிருக்கும் கைக்கடிகாரத்தில் ஏற்படும் ஒலி அதிர்வு மற்றும் பிம்பங்கள் மூலம் அவர்கள் திறமையாகப் பணியாற்றக்கூடிய தொழில்நுட்பத்தினை வழங்குவது தங்களின் சிறப்பென இந்நிறுவனம் கருதுகின்றது.

சம்மேளனத்தின் கடுமையான தரக்கட்டுப்பாடு விதிகள், நிறுவனத்தின் ஒத்துப்போகும் தன்மைகள், செலவினங்கள் மற்றும், போட்டிகளின்போது இணக்கமான சூழ்நிலை போன்ற அனைத்து கருத்துகளையும் மனதில் கொண்டு ஜி.எம்.பி.ஹெச். நிறுவனம் தேர்ந் தெடுக்கப்பட்டதாக சம்மேளனம் அறிவித்துள்ளது.

# நண்பர்களின் சமர் வென்றது ஸ்ரான்லிக் கல்லூரி


(முள்ளியவளை)

நண்பர்களின் சமர் என வர்ணிக்கப்படும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்) அணி ஐந்து விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது. முல்லை. முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணிக்கும், யாழ். கனகரத்தினம் அணிக்குமிடையிலான நண்பர்களின் சமர் என வர்ணிக்கப்படுகின்ற ஒரு நாள் போட்டி நேற்று வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய வித்தியானந்தாக் கல்லூரி அணி, கலைச்செல்வனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் வித்தியானந்தாக் கல்லூரி அணி 26.5 ஓவர்கள் நிறை வில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஞ்சயன் 21, அருணா 12 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனையோர் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் கலைச்செல்வன் 18 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு, கம்சிகன் மூன்று ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விதுசன் 17 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 90 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி 10 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மதன் ஆட்டமிழக்காது 29, கம்சிகன் 21, கலைச்செல்வன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஞ்சயன் 19 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இப்போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக ஸ்ரான்லிக் கல்லூரியைச் சேர்ந்த மதன், சிறந்த பந்து வீச்சாளராக அதே கல்லூரியைச் சேர்ந்த கலைச்செல்வன், சிறந்த களத்தடுப்பாளராக வித்தியானந்தாக் கல்லூரியைச் சேர்ந்த இப்ரகாத், சிறந்த சகலதுறை வீரராக ஸ்ரான்லக் கல்லூரியைச் சேர்ந்த கம்சிகன், போட்டியின் ஆட்டநாயகனாக கலைச்செல்வன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இரு அணிகளுக்குமிடையில் எதிர்வரும் ஆண்டுகள் நண்பர்களின் சமர் என்ற பெயரில் இப்போட்டி தொடர்ந்து நடைபெறும் எனவும், இரண்டு நாள் இனிங்ஸ் போட்டியும் விரைவில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பாடசாலைத் தரப்பினர் தெரிவித்தனர். (எஸ்.பி.)


# வீரர்களின் போர் இன்று ஆரம்பம்

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி



இடமிருந்து வலம், அமர்ந்திருப்பவர்கள் ஜெ. ஜெயமோகன் (விளையாட்டுத்துறைத் தலைவர்), த. தவராஜா (பிரதி அதிபர்), தே. சிந்துஜன் (அணித் தலைவர்), ஈ.ஆர். ஈஸ்வரதாசன் (அதிபர்), கே. றொபேட் ரிசாத் (துணைத் தலைவர்), வென்யோய் (பயிற்றுவிப்பாளர்), த. சிவகுமார் (பொறுப்பாசிரியர்)
இடமிருந்து வலம் நடுவரிசை (நிற்பவர்கள்) : ரி. தனுஷன், ரி. கானுஜன், ஜே. ஜெனக்சன், ரி.நிரோசன், ஆர். ருவிக்காந்தன், ஏ. றொஷான், பி. சுஜிதரன், யு. ஜெயப்பிரதாப், ஈ.ஜே. ஜெருஷன்.
மேல்வரிசை (இடமிருந்து வலமாக) பி. றஜிதரன், கே. பிரசாத், கே. துவாரகன், கே. சயந்தன், பி. ஐங்கரன்.

## மகாஜனாக் கல்லூரி



இடமிருந்து வலம், அமர்ந்திருப்பவர்கள்: சி. கமலமோகன் (விளையாட்டுத்துறை முதல்வர்), இ. சிறதரன் (பயிற்றுநர்), கி. திலக்ஷன் (உப தலைவர்), ம. மணிசேகரன் (உப அதிபர்),கு. வேல் சிவானந்தன் (அதிபர்), சு. சயந்தன் (பிரதி அதிபர்), த. டிலோஷன் (அணித் தலைவர்), நா. புனிததயாபரன் (அணிப் பொறுப்பாசிரியர்)
இடமிருந்து வலம் முதல் வரிசை (நிற்பவர்கள்) ச. ரமேஸ்குமார், ச. சௌசிகன், அ. பிரசாத், தே. சுபதீபன், ஜெ. ஜனந்தன், கு. ரசிகரன், சி. கஜந்தன், ப. ரிசோத்.
இரண்டாம் வரிசை (நிற்பவர்கள்) ச.பிரசாத், ஜெ. மயூரன், த.சாரங்கன், சி.அன்ராஜ், ஆ. நிவராஜா,ம.பவன்.

யாழ்ப்பாண கிரிக்கெட் திருவிழாவின் இறுதி ஆட்டம் இன்று ஸ்கந்தவரோதயவில் களை கட்ட ஆரம்பிக்கும். யாழ்ப்பாண கிரிக்கெட் வரலாற்றில் மூன்றாவது மிகப் பெரும் கிரிக்கெட் தொடராகக் கருதப்படும் வீரர்களின் போர் இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி நாளை வரை சூடு தணியாத களமாக காட்சியளிக்கும்.

இப்போரில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் கடந்த 2000ஆம் ஆண்டிலிருந்து மோதி வருகின்றன.

இதில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மூன்று வெற்றிகளைப் பதிவாக்கி முன்னிலை பெற்றுள்ளதுடன்,இந்தாண்டு அதனை தக்க வைத்துக் கொள்ளும் முனைப்புடன் ரி. சிந்துஜன் தலைமையில் களமிறங்குகின்றது. சொந்த இடத்தில் போட்டி இடம்பெறுவதால் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக்கு அது சாதகமாக, சாதகமாக்கிக் கொள்ளும் வகையில் அதன் கள வியூகம் அமையும்என எதிர்பார்க்கப்படுகின்றது.அத்துடன் போட்டியில் திருப்பங்களை ஏற்படுத்தக் கூடிய பல வீரர்களை அது உள்ளடக்கியிருப்பதால் வெற்றியைப் பெற்றுக் கொள்ளும் முனைப்புடன் அது செயற்படும் என அதன் ஆதரவாளர்களால் நம்பப்படுகின்றது.

மறுபுறத்தில், இத்தொடரில் இரண்டு வெற்றிகளைப் பதிவாக்கியுள்ள மகாஜனாக் கல்லூரி அணி, இந்தாண்டில் டிலோஜன் தலைமையில் களமிறங்குகின்றது. இந்தாண்டில் இது வரை இடம்பெற்ற பல ஆட்டங்களில் வெற்றியைப் பதிவாக்கியுள்ள அதேவேளை, தோல்வியைத் தழுவ நேரிட்ட சந்தர்ப்பங்களில் அதிலிருந்து மீண்டு, அதை சமநிலை செய்திருக்கின்றது. அத்துடன் துடுப்பாட்டத்தில் வலிமை மிக்க அணியாக வலம் வரும் மகாஜனாக் கல்லூரி அணி, பந்து வீச்சிலும், களத்தடுப்பிலும் ஜொலிக்கும் வீரர்களை அதிகம் உள்ளடக்கியிருக்கின்றது. எதிரணி ஆடுகளத்தில் தமது முழுப் பலத்தையும் வெளிப்படுத்தி வெற்றியைப் பெற்றுக் கொள்ளும் முனைப்புடன் அதன் செயற்பாடு அமையும் என அவ்வணி ஆதரவாளர்களால் எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த வகையில் 13ஆவது வீரர்களின் போர்க் களம் நாளை வரை நீறுபூத்த நெருப்பாக, சூடு தணியாத களமாக இருக்கும் என இரு அணி ஆதரவாளர்களாலும் நம்பப்படுகிறது.

ஆனால், போட்டியை நடத்துகின்ற கல்லூரிச் சமூகங்கள் வெற்றி, தோல்விகளுக்கு அப்பால் இப்போட்டித் தொடரை அடுத்த தளத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டும் என்ற நோக்கிலேயே செயற்பட்டு வருகின்றன.

அதாவது, இந்தப் போரின் வெற்றி, தோல்விகளுக்கு அப்பால் வீரர்களின் திறன் அதிகரிக்க, மேம்பட, அடுத்த நிலையை அடையவேண்டும் என்பதே கல்லூரிச் சமூகத்தின் பெரு விருப்பாக, இலக்காக உள்ளது. இதற்கு அப்பால் போட்டியாளர்களின் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்யும் வகையில் வீரர்கள், படம் பிடிக்கப்பட்டு, அச்சிடப்பட்டு ஆண்டு தோறும் புத்தகம் வெளியிடப்பட்டு வருகின்றது. பாடசாலைச் சமூகத்தால் மேற்கொள்ளப்படும் இந்த யுக்தி, மாணவர்கள் மத்தியில் விளையாட்டில் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்துகின்றது. அதிகரிக்கச் செய்கின்றது. அதாவது, புத்தகத்தில் தனது புகைப்படம் அச்சிடப்படவேண்டும், ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் மத்தியில் போட்டிக் களத்தில் 11 வீரர்களில் ஒருவராக தானும் அணியில் விளையாட வேண்டும் என்ற ஆர்வத்தை அல்லது ஊக்கத்தை விளையாட்டில் (கிரிக்கெட்டில்) ஆர்வமில்லாதவர்களைக் கூட பற்றிக்கொள்ளச் செய்கிறது.


அந்த வகையில், கிரிக்கெட்டின் ஆர்வத்தை மாணவர்கள் மத்தியில் விதைப்பதில் பாடசாலைச் சமூகம் வெற்றி கண்டிருப்பதாகவே கொள்ள முடியும். இந்நிலையைத் தொடர்ந்தும் தக்கவைக்க வேண்டுமாயின் அடுத்த தளம் ஒன்று விரைவில் உருவாக்கப்பட வேண்டும். அதாவது, விளையாட்டில் சாதிப்பவர்களைத் தத்தெடுத்து, தட்டிக் கொடுக்கும் தளமாக அது அமையவேண்டும். அது வீரர்களுக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும் நம்பிக்கையூட்டும் வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும். இத்தளம் உருவாக்கப்படவும், வெற்றிகரமாக இயங்கவும் செல்வமாகத் திகழும் விளையாட்டு ஆர்வலர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், தனியார் நிறுவனங்களின் ஒன்றிணைவு, பங்களிப்பு, ஊக்குவிப்பு மிகவும் அவசியம் என கல்விச் சமூகத்தால் நம்பப்படுகின்றது.

கல்வியும், வீரமும் இருக்கும் இடத்தில் செல்வம் சேர்ந்தால் மட்டுமே புதுப் பாதையில் வெற்றிகரமாகப்பயணிக்க முடியும். இதில் ஒன்றுக்கொன்று இடைவெளி ஏற்படும் இடத்து அதில் முழுமையான வெற்றியைப் பெற்றுக்கொள்வதென்பது கடினம்.

இடைவெளி விடாது, இடைஞ்சல்களைக் களைந்து புதிய பரிமாணத்தை எட்ட உள்ளூர் கிரிக்கெட் திருவிழாக்களுக்கு ஒன்றிணைந்து ஊக்குவிப்போம். அது வீரர்களை தேசிய, சர்வ தேசத்தில் சாதிக்க வழிவகுக்கும்.

**க. இலட்சுமி**

## வெற்றிக்குப் போராடுவோம்




(சுன்னாகம்)

எமது அணி சகலதுறையிலும் சிறப்பாக விளங்குவதால் 13ஆவது வீரர்களின் போரில் வெற்றியைப் பதிவாக்கிக் கொள்ள இறுதி வரை போராடுவோம் என மகாஜனாக் கல்லூரி அணி கப்டன் டிலோஜன் தெரிவித்தார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ள வீரர்களின் போர் இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி குறித்து கருத்துக் கேட்டபோதே டிலோஜன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த ஆண்டு எமது அணி சகலதுறையிலும் பலம் மிக்கதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக துடுப்பாட்டத்தில் மயூரன், சாரங்கன், றசிகரன், ரமேஸ்குமார், பிரசாந்த் போன்ற வீரர்கள் திறமையாக ஆடி சிறந்தபெறுபேறுகளை இந்த ஆண்டில் வெளிப்படுத்தியிருக்கின்றனர். அத்துடன் ஜனந்தன், திலக்ஷன், கஜந்தன், டிலோசன், றசிகரன் ஆகியோர் பந்து வீச்சில் தமது திறமைகளை வெளிப்படுத்தி அணியின் வெற்றிக்குத் துணை புரிந்திருக்கின்றனர். இவர்களின் திறமை 13ஆவது வீரர்களின் போரிலும் வெளிப்படும் என்று நம்புகின்றேன். அவ்வாறு வெளிப்படும் இடத்து அது எங்களுக்குச் சாதகமான முடிவைத் தரும். எனவே, வெற்றி கொள்ளும் முனைப்புடன் களமிறங்குவோம். போட்டியின் இறுதிப் பந்து வரை வெற்றிக்காகப் போராடுவோம் எனத் தெரிவித்தார். (93)

## எதிர்பார்ப்பை பூர்த்திசெய்வோம்



(சுன்னாகம்)

சொந்த இடத்தில் போட்டி ,நடைபெறுவதால் எமது அணி மீதான எதிர்பார்ப்பு இரசிகர்கள் மத்தியில் அதிகரித்துக் காணப்படுகின்றது. அவர்களின் எதிர்பார்ப்பை பொய்யாக்காதவாறு எமது செயற்பாடு அமையும் என ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி கப்டன் சிந்துஜன் தெரிவித்தார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ள வீரர்களின் போர் இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி குறித்து கருத்துக் கேட்டபோதே சிந்துஜன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு என அனைத்துத் துறைகளிலும் ஜொலிக்கும் வீரர்கள் அணியில் இடம்பிடித்திருக்கின்றமைமகிழ்ச்சியான விடயம். அத்துடன் சொந்த இடத்தில் போட்டி நடைபெறுவதால் எம் மீதான எதிர்பார்ப்பு இரசிகர்கள் மத்தியில் அதிகரித்திருக்கின்றது. அவர்களின் எதிர்ப்பும், ஆதரவும் எங்களை நிச்சயம் உற்சாகப்படுத்தும். நெருக்கடியிலிருந்து மீள துணை புரியும்.

எனவே, இரசிகர்களின் எதிர்பார்ப்பை ஈடு செய்யும் வகையில் ஆட முற்படுவோம். ஒருங் கிணைந்து செயற்பட்டு, போட்டிக் களத்தை எமக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் வகையில் எமது செயற்பாடுகள் அமையும் எனவும் அவர் தெரிவித்தார். (93)

**தினமுரசு ஊடக அனுசரணையுடன் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தினால் நடத்தப்படுகின்ற மாபெரும் கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி இன்றைய தினம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.**

# மொழி...! மொழி...! மொழி...!

- எஸ். ஹமீத் -

(ஒரு குட்டிக் கதை)

**மீ**ன் பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பின் இரு ஊர்கள் காத்தான்குடியும், ஆரையம்பதியும். காத்தான்குடியில் ஆதம் லெப்பையும், ஆரையம்பதியில் அரியரத்தினமும் வாழ்ந்து வந்தனர். முன்னாளில் மட்டக்களப்பில் ஒரு பாட-சாலையில் இருவரும் சேர்ந்து கல்விகற்கும் காலத்தில் "நீ இஸ்லாம் - நான் இந்து" என்று, பழுத்த சுயநல அரசியல் வேடர்கள் விரித்த கபட வலைக்குள் இருவரும் வீழ்ந்து, தத்தம் சுயத்தை இழந்து விட்டிருந்தனர்.

தமிழே பேசினாலும்-தான் ஒரு முஸ்லிம் என்ற எண்ணம்தான் ஆதம் லெப்பையிடம் மேலோங்கியிருந்தது. தான் ஒரு இந்து என்று சொல்லிக் கொள்வதை விட, தன்னை ஒரு தமிழன் என்று சொல்வதே அரியரத்தினத்திற்குப் பிடித்திருந்தது. ஆக, அவ்விருவரும் ஒரே மொழியைப் பேசினாலும் "தமிழ் - முஸ்லிம்" என்று தமக்கிடையே வேலி-களைப் போட்டுக் கொண்டனர். இவ்வாறு வேலிகளைப் போட்டுக் கொள்வதற்குத் தேவையான அனைத்தையும் இரு பக்கமும் உள்ள அரசியல்வாதிகள் வாரி வழங்கியிருந்தனர்.

பாடசாலைக் காலம் முடிந்து இருவரும் பிரிந்து விட்டனர்.

தம்மினப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு, குழந்தை, குட்டிகளுடன் வாழத் தொடங்கி விட்டனர். இந்தக் காலத்தில் இருவரும் சந்தித்துக் கொள்ளவில்லை.

ஆடி மாதத்தின் ஒரு நாள்...

சவுதி அரேபியாவின் ரியாத் நகரிலிருந்து 150 மைல் தொலைவில் உள்ள அல்ஜலா என்ற பாலைவனப் பகுதியில் ஓலம் ஒன்று எழுகிறது. "அல்லாஹ்வே...என்னால் தாங்க முடியவில்லையே..."

வீசும் நெருப்புக் காற்றில் கலந்து வந்த அந்தத் தமிழ் ஓலம், அருகே உள்ள கோதுமை வயலில் வேலை செய்து கொண்டிருந்த சங்கரனின் காதுகளில் விழுகிறது. அவன் நிமிர்ந்து பார்த்தான்.

ஓர் அரபிக்காரனும், இன்னொரு இளைஞனும் பாலைவனத்தின் மணற்பாதையில் நின்று கொண்டிருந்தனர். அந்த இளைஞன் இலங்கையன் அல்லது இந்தியன் போலத் தெரிந்தான். காரை ஓரமாக நிறுத்திவிட்டு இருவரும் தர்க்கித்துக் கொண்டிருந்தனர்.

சங்கரன் அவர்களின் அருகில் .சென்றான். அவர்களைப் பார்த்தான். அந்த வாலிபன் அரபியிடம் தமிழில் பேசினான். அரபியோ அவனிடம் அரபியில் கத்தினான்.

வாலிபனின் முகம் வெளுத்திருந்தது. அவனது ஆடைகளையும் தாண்டி உடலின் வியர்வை ஒழுகிக் கொண்டிருந்தது.

"அல்லாஹ்வே...என்னால் தாங்க முடியவில்லையே... நான் செத்து விடுவேன் போல இருக்கிறதே..." என்று அந்த வாலிபன் துடிக்க, அரபி "லெஷ் பீ ..?" (என்ன.. என்னாச்சு..?) என்று அவனை அதட்டிக் கொண்டிருந்தான்.

சங்கரன் அவர்களை அண்மித்தான். "என்ன விஷயம்...?" என்று அந்த வாலிபனிடம் தமிழில் கேட்டான்.

"ஓ..நீங்க தமிழா...? இலங்கையா..? முஸ்லிமா..?" என்று அந்த வாலிபன் தனது முகமெல்லாம் பூரிப்புடன் கேட்டான்.

"அதெல்லாம் இருக்கட்டும்.. உங்க பிரச்சினை என்ன.. ஏன் இப்பிடி ஓலமிட்டு அழுறீங்க..?" என்று சங்கரன் திரும்பக் கேட்டான்.

"ஓ...எனக்கு வயித்து வலி தாங்க முடியல... உசிரே போய்டும் போல இருக்கு... ரெண்டு மணித்தியாலத்துக்கு முன்னாடிதான் இலங்கைல இருந்து வந்தேன். ஏர்போர்ட்ல இருந்து இவன் என்னை ஏத்திக்கிட்டு வர்றான்.. ஒரு அரை மணி நேரத்துக்கு முன்னால வயித்து வலி ஆரம்பிச்சுது. இப்போ தாங்க முடியாத அளவுக்கு வலி. எனக்கு அரபி தெரியாது. தெரிஞ்ச ஆங்கிலத்தில சொல்லிப் பார்த்தேன். அதுவும் இவனுக்கு விளங்கல... வயித்தைக் காட்டி சைகையால சொல்லிப் பார்த்தேன்.. அதப் பார்த்துட்டு எனக்குப் பசின்னு நெனைச்சு இவன் வாழைப் பழத்தை எடுத்துத் தாரான்... கடைசில... நான் அழத் தொடங்க, காரை நிப்பாட்டிட்டான்..." என்ற வாலிபன் "ஒருக்கா toilet போயிட்டு வந்தா சரியாய்ப் போகும்" என்றான்.

சவுதிக்கு சங்கரன் வந்து இரண்டு வருடங்கள். ஆதலால் அவனுக்கு அரபி தெரிந்திருந்தது. அவன் அரபு மொழியில் விடயத்தை அரபியிடம் விளக்கி விட்டு, கோதுமை வயலோடு ஒட்டியிருந்த தனது தங்குமிடத்திற்கு அந்த வாலிபனை அழைத்துச் சென்றான்.

அந்த வாலிபன் toilet போய் வந்தான். அவனது முகத்தில் இப்போது ஒரு நிம்மதி தெரிந்தது.

"ப்ளைட்ல தந்த சாப்பாடு ஒத்துக்கல. அதான் இப்படி ஒரு வலி... இப்போ வலி குறைஞ்சிடுச்சு." என்றவன் சொன்னான்.

"எம் பேரு அமீன்.. இலங்கைல காத்தான்குடி என்ர ஊரு.. வாப்பா பேரு ஆதம் லெப்பை. அது சரி.. நீங்க எந்த ஊரு..?"

சங்கரன் சொன்னான்.. "என்ர பேரு சங்கரன்.. உங்க ஊருக்குப் பக்கத்து ஊரு-தான் நானும்... என்ர அப்பா பேரு அரியரத்தினம்..."




"ரொம்ப சந்தோஷமா இருக்குங்க.. இந்த அரபி ஒரு முஸ்லிம். நானும் ஒரு முஸ்லிம்.. ஆனா.. இப்போ, என்னோட வலி-யைப் போக்கினது இந்த மதமில்லீங்க... பாஷை! நீங்க மட்டும் இல்லேன்னா, நான் வயித்து வலியால செத்தே போயிருப்பேன்..." என்ற அமீன் சங்கரனைக் கட்டித் தழுவினான்.

ஒரு வேளை, இந்த இருவருமே இன்றைய நிகழ்வைத் தமது தகப்பனார்களுக்குத் தெரிவிப்பார்கள்: அப்பொழுதாவது, ஆதம் லெப்பையும், அரியரத்தினமும் பகைமைக்களம் விடுத்துப் பாசக் குளத்தில் நீந்துவார்களா...?

# மாரடைப்புக்கு "ஸ்ரென்ட்" சிகிச்சை

**யா**ருக்காவது மாரடைப்பு வந்து விட்டால் நோயாளியை பரிசோதிக்கும் டாக்டர் "ஆஞ்ஜியோ செய்யலாம் "ஸ்ரென்ட்" வைத்து விட்டால் போதும்" என்பார்.




"ஸ்ரென்ட்" சிகிச்சை உண்மையில் வரப்பிரசாதம் என்றுதான் கூற வேண்டும். மூளைக்கு செல்லும் இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு பக்கவாதம் ஏற்படுவதைத் தடுக்கவும் "ஸ்ரென்ட்" சிகிச்சை கைக்கொடுக்கிறது என்று அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் உறுதி செய்துள்ளனர்.

பெரும்பாலும், இதய இரத்த நாளங்களில் அடைப்பை நீக்க "ஸ்ரென்ட்" பயன்படுத்துகின்றனர் டாக்டர்கள். அதில் நோயாளிகளுக்கு நல்ல பலன் கிடைக்கிறது. அதன்பின் தேவைப்பட்டால் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்கின்றனர். பெரும்பாலானோருக்கு "ஸ்ரென்ட்" பொருந்தியபின் மருந்து மாத்திரையில் சீராக்கி விட முடிகிறது.

"ஸ்ரென்ட்" என்பது மிகச்சிறிய வலைகுழாய்; உடலில் எந்தப் பாகத்தில் இரத்தக்குழாய் அடைப்பு ஏற்பட்டாலும், இரத்த ஓட்டத்தை சீராக்க இந்த வகை ட்யூப், இரத்தக் குழாயில் செருகப்படுகிறது. இதற்காகத்தான் "ஆஞ்ஜியோ பிளாஸ்டி" என்ற சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. ஆஞ்ஜியோவின் முக்கிய கட்டம்தான் "ஸ்ரென்ட்" வைப்பது.

இரத்தக்குழாயில் இரத்த ஓட்டம் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு மட்டுமின்றி, இரத்தக்குழாய் பலவீனமாக இருந்து, அதனால் அது வெடிப்பதைத் தடுக்கவும் "ஸ்ரென்ட்" பயன்படுத்தப்படுகிறது. உலோகம், ஒருவகை இழைகள், மூலம் "ஸ்ரென்ட்" தயாரிக்கப்படுகிறது. சிலவகை "ஸ்ரென்ட்"கள், மருந்து தடவியதாகவும் இருக்கும்.

இதயத்தில் உள்ள இரத்தக்குழாய்களில் இரத்தம் செலுத்தப்பட்டு, பின்னரே மற்ற உறுப்புகளுக்கு செல்கிறது. இதய இரத்தக்குழாய்கள் கொழுப்பு சேர்ந்து அடைப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனால் இரத்த ஓட்டம் பாதிக்கப்படும்போது, நெஞ்சுவலி, அதைத்தொடர்ந்து மாரடைப்பு ஏற்படுகிறது. இதைத்தான் "ஆஞ்ஜினோ" என்று டாக்டர்கள் கூறுகின்றனர். இதைத்தடுக்க ஆன்ஜியோ பிளாஸ்டி செய்யப்படுகிறது. "ஸ்ரென்ட்" பொருத்தப்பட்டவுடன், இரத்த நாளத்தில் அடைப்பு நீக்கப்படுகிறது. வலைட்யூப் வழியாக இரத்தம் சீராக பாய்கிறது. "ஸ்ரென்ட்" பொருத்தாவிட்டால், மீண்டும் இரத்தக்குழாய் அடைப்பு ஏற்பட வாய்ப்பு அதிகம்.

பக்கவாதத்தை தடுக்கும் வலது, இடது கழுத்தில் "கரோடிட்" என்ற இரத்தக்குழாய்கள் உள்ளன. இதயத்தில் இருந்து செலுத்தப்படும் இரத்தம் இந்த இரத்தநாளங்கள் வழியாகத்தான் மூளைக்கு செல்கின்றன. இதிலும் அடைப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இதைத்தடுக்கவும் "ஆஞ்ஜியோ பிளாஸ்டி" சிகிச்சை பயன்படுத்தபடுகிறது. "ஸ்ரென்ட்" வைத்தவுடன் மூளைக்கு இரத்த ஓட்டம் சீராகி, பக்கவாதம் தவிர்க்கப்படுகிறது. இதய இரத்தக்குழாய்களில் பலன் தரும் "ஸ்ரென்ட்", பக்கவாதம் ஏற்படுவதையும் தடுக்கிறது என்பதை அமெரிக்க, ஐரோப்பிய நிபுணர்கள் சமீபத்தில் உறுதி செய்துள்ளனர்.

# கூகுளில் தமிழர்!



**ஸ்**மார்ட்ஃபோன், டப்லெட் பிசி போன்றவற்றில் பிரபலமான ஒபரேடிவ் சிஸ்டமாக விளங்கும் ஆன்ட்ரோய்ட் ஒபரேடிவ் சிஸ்டமாக உருவாகக் காரணமாக இருந்தவரும், அந்தப் பிரிவின் தலைவராக ஏறக்குறைய ஏழு ஆண்டுகள் பணியாற்றியவருமான ஆன்டி ரொபின் அந்தப் பொறுப்பிலிருந்து விலக உள்ளதைத் தொடர்ந்து, அந்த இடத்துக்கு சுந்தர் பிச்சை தேர்வு செய்யப்பட்டுள்ளதாக கூகுள் அமைப்பின் நிர்வாகி லரி பேஜ் தனது இணையத்தளம் மூலம் தகவலை வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் பிறந்த 41 வயதான சுந்தர் பிச்சை புதியனவற்றை உருவாக்குவதில் அபார திறமை கொண்டவர். அதற்கு ஓர் உதாரணம் கூகுள் குரோம். அதன் வேகம், எளிமை, பாதுகாப்புத்தன்மை போன்ற காரணங்களால் பலரைக் கவர்ந்துள்ளது. 2004ஆம் ஆண்டில் கூகுள் நிறுவனத்தில் இணைந்த சுந்தர் பிச்சை, 'கூகுள் குரோம் இன்ரநெற்' பிரிவின் தலைவராகப் பணிபுரிந்தவர்.

மொபைல் போன்கள் மற்றும் சிறிய வகை, கம்ப்யூட்டர்களை 'டப்லெட்'களை பயன்படுத்தவும் ஒபரேடிங் சிஸ்டமான ஆன்ட்ரோய்ட் 2008ஆம் ஆண்டில் கூகுள் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.

தற்போது உலகில் உள்ள ஸ்மார்ட் போன்களில் மூன்றில் ஒரு பங்கு போன்கள் ஆன்ட்ரோய்ட் மூலம் இயங்குகின்றன. இலவச மென்பொருளான ஆன்ட்ரோய்ட், முன்னணி மொபைல்போன் நிறுவனங்களான சம்சுங், எச்டிவி முதலான பல நிறுவனங்களின் மொபைல் போன்களில் பயன்படுத்தப்படுகின்றது.

6 - (1)

# பத்தாண்டுகளின் பத்து இயக்குனர்கள்

சார்லஸ்

ஒரு திரைப்பட உருவாக்கம் என்பது வேறு எந்தக் கலை வடிவத்தை விடவும் அதிக உடல் உழைப்பைக் கோரக்கூடியது. ஒரு இயக்குனர் படைப்புத் திறனும், சமயோசிதமும், ஆளுமையும், தேர்வு செய்வதில் இரசனையும் கொண்டவராக இருப்பதோடு, சளைக்காமல் உழைப்பவராகவும் இருப்பது அவசியம். பல்வேறு கலைஞர்கள் சேர்ந்துதான் ஒரு படத்தை உருவாக்குகிறார்கள், ஆனால் அதன் தொடக்கப் புள்ளியிலிருந்து இறுதிப் புள்ளிவரை இருப்பது இயக்குனர் மட்டுமே. எந்தவொரு படத்தின் நேர்த்தியும், நுணுக்கங்களும், ப்பும் அதன் இயக்குனரின் ஈடுபாட்டையும் உழைப்பையுமே உணர்த்துகின்றன. 2000 முதல் 2009 வரையான பத்தாண்டுகளில் எழுந்துவந்த இயக்குனர்களில், முக்கியமானவர்களாக நான் நினைக்கும் பத்துப்பேரின் பட்டியலில் அடுத்து இடம்பெறுபவர் அப்படிப்பட்ட கடின உழைப்புக்குப் பெயர் பெற்ற ஒருவரே...



## பீட்டர் ஜாக்ஸன்

நியூஸிலாந்து நாட்டைச்சேர்ந்த பீட்டர் ஜாக்ஸன், இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுந்துவந்த இயக்குனர்களிலேயே மிகப் பெரிய கடின உழைப்பாளி என்று நான் நினைக்கிறேன். அந்த வகையில் நான் அவரை ஒரு ரோல் மொடலாகவே கருதுகிறேன். அவருடைய மூன்று "லோர்ட் ஒப் த ரிங்ஸ்" படங்களும் எத்தனை பிரம்மாண்டமானவை, சிக்கலானவை, தேர்ந்த தொழில்நுட்பமும், கலை நேர்த்தியும் கொண்டவை என்பதைப் பார்த்தவர்கள் யாரும் உணர முடியும். ஒவ்வொரு படமும் இரண்டு படங்களுக்குச் சமமானவை. மூன்று படங்களையும் சேர்த்தால் சுமார் 10 மணிநேரம் ஓடக்கூடும். அத்தனை பெரிய படைப்பை அவர் உருவாக்கிய வேகம் ஒரு பெரும் ஆச்சரியமே.

2001 - 2003 ஆகிய மூன்று ஆண்டுகளின் ஒவ்வொரு டிசம்பர் மாதமும் ஒரு பாகம் என்னும் கணக்கில் வெளியிடப்பட்டது "லோர்ட் ஒப் த ரிங்ஸ்". முதற் பாகம் வெளியாகும் போதே அடுத்தடுத்த பாகங்கள் வெளியாகும் திகதிகள் அறிவிக்கப்பட்டன (19 Dec 2001, 18 Dec 2002, 17 Dec 2003). பீட்டர் ஜாக்ஸன் கூற்றுப்படி "ஓடிக்கொண்டிருக்கும் இரயிலுக்கு முன்னால் தண்டவாளங்களைப் பதித்தபடி செல்வது போன்று" அவரும் குழுவும் வேலைசெய்தார்கள்.

ஆனால் அவரொன்றும் சிக்கனமாக, தேவையானதை மட்டும் படமெடுக்கும் இயக்குனர் அல்ல. ஒரு ஷொட் - ஐயே வெவ்வேறு கோணங்களில் எடுத்துவைத்துக்கொண்டு படத் தொகுப்பில் எது தேவையென முடிவுசெய்வார். ஏராளமான டேக்குகளுக்குப் பெயர் பெற்றவர். ஒரு டேக்கில் அவருக்கு சொல்வதற்கோ திருத்துவதற்கோ ஏதும் இல்லாவிட்டாலும் "அதிர்ஷ்டத்துக்காக இன்னொரு முறை" என்று அவர் அறிவிப்பது மிகப் பிரபலம். ஒரு காட்சியையே பல நாட்களுக்கு எடுத்துக்கொண்டிருப்பார். ஏராளமான அனிமேஷன், செட் எக்ஸ்டென்ஷன், கொம்போஸிடிங் கிராபிக்ஸ் வேலைப்பாடுகள் நிறைந்திருந்தாலும் ஒவ்வொரு நுணுக்கத்திலும் தனிக்கவனம் செலுத்தி துல்லியமான நேர்த்தியை எட்டும்வரை விடமாட்டார்.




அப்படியிருந்தும், முன்னறிவிக்கப்பட்ட திகதிகளிலேயே படங்களை வெளியிட அவரால் முடிந்தது. அதைச் சாத்தியப்படுத்தியது அவருடைய சளைக்காத உழைப்பே. முன் - தயாரிப்பு வேலைகளையும் சேர்த்து மொத்தம் 4 ஆண்டு களாக, அவர் ஒரே ஒருநாள் கூட விடுப்பு எடுக்காமல் வேலைசெய்தார் என்கிறார்கள். நான்காண்டுகளாக ஓய்வே இல்லாமல், செய்யும் வேலையில் சலிப்படையாமல், தன் படைப்பாற்றலை மென்மேலும் கூர்தீட்டியபடியே பணியாற்றிய ஒரு கர்மயோகி அவர்.

அதேசமயம் அவர் உம்மென்று சீரியஸாக வேலை செய்பவரும் அல்ல விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் ஒரு சிறுவனின் மனநிலையிலேயே அவர் படப்பிடிப்புத் தளத்தில் இருப்பார் என்று சொல்லப்படுவதுண்டு. விளையாட்டு எத்தனை தீவிரமாக இருந்தாலும் சிரிப்பும் குதூகலமும் கூடவே இருக்கும்போது உற்சாகம் குறைவதில்லை, சலிப்பும் தோன்றுவதில்லை. இந்த விளையாட்டு மனநிலை எல்லாத் திரைப்பட இயக்குனர்களுக்கும் மிக அவசியமானது என்று நான் நினைக்கிறேன்.

"லோர்ட் ஒப் த ரிங்ஸ்" ஒரு ஹொலிவுட் படமாக அறியப்பட்டாலும், அது உண்மையில் முழுக்க முழுக்க நியூஸிலாந்தில் தயாரிக்கப்பட்டது. படப்பிடிப்பு மட்டுமல்ல, திரைக்கதை எழுதுவதில் ஆரம்பித்து இறுதிக்கட்ட வேலைகள் வரை தன் தாய்நாடான நியூஸிலாந்திலேயே தயாரிப்பு வேலைகளை நடத்தினார் பீட்டர் ஜாக்ஸன். ஹொலிவுட்டில் பெருவெற்றி அடைந்தபிறகும் அமெரிக்காவிற்கு சென்று குடியேறாத ஒரே இயக்குனர் அவர்தான். நியூஸிலாந்து நாட்டின் திரைப்பட வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியதற்காக அந்நாட்டு அரசு அவரைக் கௌரவித்திருக்கிறது.

உலகை வியக்கவைத்த அந்தப் படங்களின் கிராபிக்ஸ் தொழில்நுட்பத்தை நிகழ்த்தியது உண்மையில் ஹொலிவுட்டின் எந்த நிறுவனமும் அல்ல, நியூஸிலாந்தில் சிறிய அளவில் அவரால் ஆரம்பிக்கப்பட்ட சொந்த நிறுவனமே. முதன் முறையாக, ஒரு திரைப்படத்தின் கிராபிக்ஸ் வேலைகளைப் பல அடுக்குகளாகப் பிரித்து அவுட்சோர்ஸிங் முறையில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களுக்கும் கொடுப்பதை ஆரம்பித்ததும் அவர்தான். அதன் மூலமே மிக விரைவாக அவரால் படப்பிடிப்பிற்குப் பின்னுள்ள வேலைகளை முடிக்க முடிந்தது. அப்படி சில இந்திய நிறுவனங்களும் அந்தப் படங்களில் பங்காற்றியிருக்கின்றன.

**(தொடரும்)**

# மிகப்பெரிய காந்தி சிலை



1917ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி மகாத்மா காந்தி பிரார்த்தனை கூட்டம் நடத்திய மைதானத்தில், 96 ஆண்டுகளுக்கு பின்பு அந்த இடத்தில் உலகின் மிகப்பெரிய காந்தி சிலையை எழுப்பியுள்ளனர். பீகார் மாநிலம் பாட்னாவிலேயே இந்த மிகப்பெரிய காந்தி சிலை திறக்கப்பட்டுள்ளது.

இதன் உயரம் 72 அடி. 1.5 ஏக்கரில் சுற்றியும் தோட்டம் அமைத்து, ஒளி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. 32 அடி உயர மேடையில், 40 அடி உயரத்தில் வெண்கலத்தில் காந்தி இருபுறமும் சிறுவர், சிறுமியரை அணைத்தபடி நிற்கிறார். மேடையின் நான்கு புறங்களிலும் காந்தியடிகளின் வாழ்வில் நடந்த சிறப்பு அம்சங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இதனை உருவாக்கியவர் பத்மஸ்ரீ ராம்சுதார். 1948இல் வைக்கப்பட்ட முதல் காந்தி சிலையை வடிவமைத்து உருவாக்கிய பெருமையும் இவரையே சாரும். இதுவரை இவர் 80 நாடுகளுக்காக 120 காந்தி சிலைகளை உருவாக்கித் தந்துள்ளார். இப்போது இவருக்கு வயது 88. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் காந்தியுடன் பங்கு கொண்டவர் இவர்.

# டைட்டானிக் வயலின்!

"மிதக்கும் சொர்க்கம்" என, வர்ணிக்கப்பட்ட, டைட்டானிக் கப்பல், 1912இல், வட அட்லாண்டிக் பெருங்கடலில், பனிப் பாறையில் மோதி, மூழ்கியது. இதில், 1,500இற்கும் அதிகமானோர், கடலில் மூழ்கி இறந்தனர். முன்னதாக, பயணிகளின் உயிர் பயத்தை குறைப்பதற்காக, கப்பலில் இருந்த இசைக் கலைஞர்கள் சிலர், தங்களின் இசைக் கருவிகளை இசைத்தனர். இவர்களில், ஹார்ட்லி என்ற வயலின் இசைக் கலைஞரும் ஒருவர். இறுதியில், இவரும் இறந்து விட்டார். கடலில் மூழ்கியபோது, தான் உயிருக்கு உயிராக நேசித்த வயலினை, தன் உடலுடன் இறுக்கி கட்டிக் கொண்டார். இவரது உடல் கரை ஒதுங்கிய போது, வயலினும் மீட்கப்பட்டது. அந்த வயலின், அவரது காதலியிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்தக் காதலி, தான் இறப்பதற்கு முன் அந்த வயலினை தன் நண்பரிடம் கொடுத்து விட்டார். இந்த வயலின் பல கைகளைத் தாண்டி, தற்போது ஏலத்துக்கு வரவுள்ளது.

அதற்கு முன், இந்த வயலின் டைட்டானிக் கப்பலில் இருந்தது தான் என்பதை, பல கட்ட சோதனையில் உறுதி செய்துள்ளனர். இந்த வயலின், இரண்டு 'கோடி ரூபாய்க்கு மேல், ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது.









# யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை

யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையானது யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் 2012 ஆம் ஆண்டு இலங்கை அரசின் ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் இணைத்துக் கொண்டதற்கமைய ஆரம்பப் பிரிவு நீக்கப்பட்ட இடைநிலை உயர் நிலை வகுப்புகளைக் கொண்ட பாடசாலையாக மாற்றுவதற்கு ஏற்பாடாகி இருந்தது. இந்தக் கட்டத்தில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், ஏனைய பாடசாலை நலனில் அக்கறை கொண்ட அமைப்புக்கள் என எல்லோரும் ஆரம்பப் பிரிவை நீக்குவதற்கான திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆரம்பப் பிரிவை நீக்குவதற்கு பதிலாக அதனை ஒரு தனிப் பாடசாலையாக உருவாக்கி வளர்க்க வேண்டும் என பாடசாலைச் சமூகத்தினர் எல்லோரும் ஒருமித்த குரலில் கேட்டுக் கொண்டதன் பயனாக எமது தற்போதய பாடசாலை யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை என்னும் பெயரில் அதே இடத்தில் இயங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

இதன் விளைவாக 14.03.2012 இல் இருந்து தனி நிர்வாகத்தினைக் கொண்ட ஒரு பாடசாலையாக மாற்றியமைக்கப்பட்டது. இப்பாடசாலை அதிபராக திருமதி புஸ்பராணி மங்களேஸ்வரன் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். இன்று இப்பாடசாலை ஆரம்பப் பிரிவு வகுப்புக்களை மட்டும் கொண்ட ஒரு தனிப்பாடசாலையாக இயங்கி வருகின்றது. இங்கு இருநூற்று நாற்பத்து மூன்று மாணவர்கள் கல்விகற்கின்றனர். பத்து வகுப்புப் பிரிவுகள் உள்ளன. ஆங்கில ஆசிரியர் உட்பட பதினொரு ஆசிரியர்கள் சேவையாற்றி வருகின்றனர். இப்பாடசாலை 17.05.2012 அன்று நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான உயர் திரு. முருகேசு சந்திரகுமார் அவர்களால் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இப்பாடசாலையின் அபிவிருத்திக்கு பெற்றோர், பழைய மாணவர்கள், வர்த்தக சங்கத்தினர், நலன் விரும்பிகள் காட்டிவரும் அக்கறை வரவேற்கத்தக்கது. எமது இப்பாடசாலைக்கு மின்சார வசதி இல்லாது இருந்தது. இதனை நிவர்த்திக்க யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. முன்னைநாள் அதிபர் திரு.கந்தையா ஆசிரியர் திரு. ம.சசிகரன் ஆகியோர் பழைய மாணவர்களின் உதவியைப் பெற்றுஉதவியுள்ளனர். மேலும் யுனிசெப் அனுசரணையில் மலசல கூடத்தொகுதி புனரமைத்து தரப்பட்டுள்ளது. அத்துடன் குடிநீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய Wash திட்டத்தின் கீழ் குழாய்க்கிணற்றுடன் இணைந்த தண்ணீர்த் தாங்கி ஒன்றை அமைத்துத் தந்துள்ளனர். மேலும், எமக்கு இருந்த வகுப்பறைப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நலன் விரும்பிகள் முன்வந்து இரண்டுவகுப்புக்களை நடாத்தக்கூடிய தற்காலிக கொட்டகை ஒன்று அமைக்கப்படுகின்றது. அத்துடன், எமது பாடசாலைக்கு வேண்டிய நிழற்பிரதி இயந்திரம் ஒன்றை வழங்க இலண்டன் வாழ். பழைய மாணவன் திரு. த. ஆனந்தரூபன் முன்வந்துள்ளார். மேலும் இவ் வருட விளையாட்டுப் போட்டிக்கு பெற்றோர்கள், பழைய மாணவர்கள், வர்த்தகர்கள், வங்கிகள், ப.நோ.கூ. சங்கத்தினர். நலன்விரும்பிகள், ஏனைய பொது அமைப்புக்கள் என எல்லோரும் பண உதவிகளும் பொருள் உதவிகளும் வழங்கி விழா சிறப்புற நிகழ உதவியுள்ளனர்.




அதிபர்
திருமதி புஸ்பராணி
மங்களேஸ்வரன்

பாடசாலைச் சமூகத்தினர் இவர்கள் அனைவரையும் பாராட்டி நினைவு கூருகின்றனர்.


இப்பாடசாலையானது குறுகிய காலத்தில் பாரிய அபிவிருத்தி கண்டு வருவது குறிப்பிடத்தக்கது. மேலும், அனைத்து வசதிகளும் கொண்ட ஒரு ஆரம்பப் பாடசாலையாக மிளிர வேண்டும் என பாடசாலைச் சமூகம் எதிர்பார்க்கின்றது. இதற்காக மென்மேலும் அனைவரது பங்களிப்பினையும் எதிர்பார்க்கின்றது.



பாடசாலை அதிபருடன், ஆசிரியர் குழாம்



2013 கால்கோள் விழாவின்போது



2012 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோரும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களும், அதிபர், கற்பித்த ஆசிரியர்களுடன்...



2013 வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின்போது



2012 இல் சம்பியன் பெற்றவர்கள்

# 36 தொழில்நுட்ப அலுவலர்களுக்கு நியமனக்கடிதங்கள் வழங்கல்



(கொழும்பு)

வட மாகாணத்திற்கு நியமனம் பெற்றுள்ள உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரிசிறி தலைமையில் கொழும்பு பத்திரமுல்லவிலுள்ள ஆளுநர் உப அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது 36 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும், 5 பட வரைஞர்களுக்கும், 7 குடியேற்ற உத்தியோகத்தர்களுக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

வட மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் .இ.இளங்கோவன், விவசாய அமைச்சின் செயலாளர் யு.எல்.எம்.ஹால்டீன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# குடிநீர்தாங்கிகள் போதாமையால் நீரைப் பெறுவதில் சிரமப்படும் மக்கள்

(மானிப்பாய்)

பண்டத்தரிப்பு சாந்தை பிரதேசத்தில் தேவைக்கு போதுமான அளவு குடிநீர் தாங்கிகள் அமைக்கப்படாமையினால் மிக நீண்ட நேரம் காத்திருந்து குடிநீரைப்பெறவேண்டியநிலை உள்ளதாக பிரதேச வாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இங்கு ஆறு நீர்த் தாங்கிகளே அமைக்கப்பட்டுள்ளன. இது இப்பிரதேசத்திற்கு போதுமானதல்ல இதனால், காலையில் அலுவலகங்களுக்கு செல்பவர்களும் மாணவர்களும் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டப்படுகிறது பிரதேச மக்களின் கஷ்டங்களை கருத்திற்கொண்டு ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச அமைப்பாளர் ஜீவாவின் முயற்சியினால் ஒரு நீர்த்தாங்கி கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சத்தியசாயி நிலையத்தினர் தொண்டு அடிப்படையில் இப்பிரதேசத்திற்கான நீர்வழங்கும் பணியை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் இப்பகுதியில் குடிநீர் வழங்கலை மேற்கொள்வதற்காக மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொண்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. (54)

# மகோற்சவம்

(நயினாதீவு)

நயினாதீவு செம்பனத்தம்புலம் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெறவுள்ளது.

இவ்உற்சவத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 15ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் மாலை கொடியிறக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதுடன் 2ஆம் திருவிழாவன்று புதிய கைலாச வாகனத்திலும் 9ஆம் திருவிழா அன்று புதிய சப்பறத்திலும் விநாயகப்பெருமான் எழுந்தருளும் காட்சி இடம்பெறவுள்ளது. (175)

# மருதங்கேணி கோட்டமட்ட தமிழ்த்தினப்போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் கோட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டியில் மருதங்கேணி கோட்ட மட்ட பாடசாலைகளிடையிலான போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. விபரம் வருமாறு:

பாவோதல் பிரிவு 01

சாந்தகுமார் மிதுசா (மாமுனை அ.த.க. பாடசாலை), அன்ரன்ரட்ணசீலன் அன்ரன் மௌசியன் (மணற்காடு றோ.க.த.க. பாடசாலை)

பிரிவு 02

நவரத்தினம் டசிராஜ். (ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை), கணேசலிங்கம் சுதர்மினி (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி)

பிரிவு 03

சாந்தநேசன் அபிலாஜினி (மருதங்கேணி இ.த.க. வித்தியாலயம்), றொபேட் மரியதர்சா (மணற்காடு றோ.க.த.க. பாடசாலை)

பிரிவு 04

சுரேஸ் உதயகுமார் சுரேஜனா (மணற்காடு றோ.க.த.க. பாடசாலை), வேதநாயகம் ரனிஸ்ரெலா (நாகர்கோவில் மகா வித்தியாலயம்)

இசையும் அசைவும் பிரிவு 01

சிமியோன்ராஸ் மேரிமதுசா (செம்பியன்பற்று றோ.க.த.க. பாடசாலை), ஜெயச்சந்திரன் பிரியங்கா (மருதங்கேணி இ.த.க. வித்தியாலயம்)

இசை தனி பிரிவு 02

கந்தசாமி விதுசா (உடுத்துறை மகா வித்தியாலயம்), யோகராசா பிரியங்கா (கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை)

பிரிவு 03

சபாநேசன் துஜீவ் (ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை), அன்ரன் ரகுநாதன் யதுர்சன் (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி)

பிரிவு 04

நந்தகுமார் டியூசா (மணற்காடு றோ.க.த.க. பாடசாலை), கணபதி டக்சனா (செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை)

இசை குழு பிரிவு 01

(அம்பன் அ.மி.த.க. பாடசாலை), (நாகர்கோவில் அ.மி.த.க. பாடசாலை)

நடனம் தனி பிரிவு 02

சிவஞானம் கிருசங்கா(ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை)

பிரிவு 03

சுந்தரமௌலீசன் மதுலா (மருதங்கேணி இ.த.க. வித்தியாலயம்)

பிரிவு 04

உ.கிருபாகினி (ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை)

நடனம் குழு பிரிவு 01

(மணற்காடு றோ.க.த.க. பாடசாலை), (ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை)

வாசிப்பு பிரிவு 01

ஜெயச்சந்திரன். சதுசிகா (ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை), சத்தியதீஸ்வரன் நிலவரசி (மாமுனை அ.த.க. பாடசாலை), பெனாட் மோகன்ராஜ் மதுபன் (மணற்காடு றோ.க.த.க. பாடசாலை)

பிரிவு 02

யோகேஸ்வரன் துவாரகா (உடுத்துறை மகா வித்தியாலயம்), நிக்சன் அருள்நிலா (மருதங்கேணி இ.த.க. வித்தியாலயம்)

ஆக்கத்திறன் வெளிப்பாடு பிரிவு 01

அருள்நேசன் கரன் (செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலை), யோகலிங்கம் யதுர்சன் (குடத்தனை அ.த.க. பாடசாலை). (தொடரும்....) (150)

# பதிவிறக்கப் பெட்டகம்

நம்பிக்கையே இல்லாத, மிக மிகக் கொடூரமான வதை முகாம் வாழ்க்கையைக் காண்பிக்கும் ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட், பியானிஸ்ட் ஆகிய இரண்டு படங்களிலும் தெரிந்த நம்பிக்கை என்ற விஷயம் பரதேசியில் ஏன் இல்லை? காரணம், தமிழ் சினிமா ஃபோர்முலாவான நல்லவன் கெட்டவன், ஹீரோ வில்லன் என்ற binary opposition–இலேயே பாலாவும் மாட்டிக் கொண்டதுதான். இந்த ஃபோர்முலாவை விட்டு வெளியே வர வேண்டுமானால் வாழ்க்கையைப் பற்றிய தரிஸனம் (vision) வேண்டும். இந்த தரிஸனம் ஒருவருக்கு புத்தகங்களினால் வரலாம் உலக சினிமாவைப் பார்ப்பதன் மூலம் வரலாம். ஆனால் எனக்கு எல்லாம் தெரியும் என்ற கர்வம் இருந்தால் இந்த தரிஸனம் நம் பக்கத்திலேயே வராமல் ஓடிப் போய்விடும். பாலாவின் பேட்டிகளைப் பார்த்தால் அவர் தன்னை ஒரு மாபெரும் கலைஞனாக நம்புவதாகத் தெரிகிறது. போதாக்குறைக்கு அனுராக் காஷ்யப்களும் தமிழ்ப் பத்திரிகைகளும் இருக்கின்றனர். சி.என். அண்ணாதுரையைக் கூடத்தான் தெனனாட்டு பெர்னார்ட்ஷா என்றார்கள். இதிலெல்லாம் போய் ஒருவர் சிக்கிக் கொள்ளக் கூடாது. ஏபிசிடியே தெரியாத ஒரு கூட்டத்தில் ஒருவர் அழகாக ஆங்கிலம் பேசினால் அவரை அறிஞர் என்று சொல்வது எதிர்பார்க்கக் கூடியதுதானே? அதனால் தான் ஆதி பகவன், முகமூடி போன்ற ஆக மொக்கைப் படங்களைப் பார்க்க விதிக்கப்பட்டிருக்கும் தமிழ் ரசிகா கூட்டம் பாலாவையும் கலைஞன் கலைஞன் என்கிறது. பாலாவும் அதை நம்பத் தலைப்பட்டு விட்டார்.

பாலாவின் படங்களிலும் மேலே சொன்ன ஹீரோ வில்லன், நல்லவன் கெட்டவன் தமிழ் சினிமா டெம்ப்ளேட் தான் செயல்படுகிறது. பரதேசியில் தேயிலைத் தோட்டத்துக்குப் புலம் பெயரும் கிராமத்து மக்கள் அனைவரும் நல்லவர்கள். அவர்களை அடித்து உதைத்துத் துன்புறுத்தி சித்ரவதை செய்யும் கங்காணியும் ஆங்கிலேயர்களும் கெட்டவர்கள். வாழ்க்கையை இந்த ரீதியில் பார்த்தால் எப்படி ஐயா நல்ல படம் எடுக்க முடியும்?

– சாரு நிவேதிதா

சார்லி சாப்ளின் இயக்கி நடித்த "தி கிரேட் டிக்டேட்டர்" படத்தில் ஒரு காட்சி வருகிறது – கட்டாயத்தால் இராணுவத்தில் சேர்க்கப்பட்ட பயந்த சுபாவமுள்ள நாயகன், போர்க்களத்தில் தன்னுடைய படையுடன் அணிவகுத்துச் செல்கிறான். குண்டுகள் வெடித்து எங்கும் புகைமூட்டமாக இருக்க, அதனூடே அந்தப் படைப்பிரிவு முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிறது. குண்டுவெடிப்பு அதிகரிக்க புகைமூட்டமும் அதிகரிக்கிறது, எதிரில் என்ன இருக்கிறதென்று தெரியாத புகைக்குள் நாயகன் செல்கிறான். ஒருகட்டத்தில் புகை குறைந்து காட்சி தெளிவாகிறது, இப்போதும் நாயகன் படையில் அணிவகுத்தபடிதான் சென்றுகொண்டிருக்கிறான், ஆனால் ஏதோ தவறாக இருப்பதாக அவனுக்குப்படுகிறது. அவனுக்கு அருகில் செல்லும் சிப்பாயும் நாயகனை ஏனோ விநோதமாகப் பார்க்கிறான். உண்மையில் நாயகன் இப்போது அணிவகுத்துச் சென்றுகொண்டிருப்பது எதிரிப்படையோடு! புகைமூட்டத்தில் எங்கோ அவன் திசைமாறி, எதிரிப் படையோடு சேர்ந்திருக்கிறான். அவர்கள் அவனைச் சுடத் தயாராவதற்குள் நாயகன் ஓடித் தப்பிவிடுகிறான்.

மிக நேரடியாகப் போரின் அர்த்தமின்மையைக் காட்டிவிடும் இந்தக் காட்சி, சாப்ளினின் மேதைமைக்கு ஒரு சான்று. ஏராளமான உயிர்களைக் கொன்று குவிக்கிற அந்த இரு நாட்டுப் படைவீரர்களும், தாங்கள் எந்தப் பக்கத்தில் நின்று போரிடுவது என்பதை அவர்களா தீர்மானித்தார்கள்? அவர்கள் ஒரு நாட்டில் பிறந்ததால், ஒரு இனத்தில் பிறந்ததால் அந்தப் போருக்கு வந்துசேர்ந்திருக்கிறார்கள். ஆனால் அந்த நாட்டில் அல்லது அந்த இனத்தில் அவர்கள் பிறந்தது முழுக்க முழுக்கத் தற்செயலாகத்தானே?

நாம் தற்செயலாக எங்கே பிறந்தோம் என்பதுதானே நம் இனம் எது, மொழி எது, தேசம் எது என்பதை எல்லாம் தீர்மானிக்கிறது? புகைமூட்டம் சார்லி சாப்ளினை ஓரிடத்துக்குக் கொண்டுசேர்த்ததும் அவர் அங்கிருப்பவர்களோடு சேர்ந்து 'லெஃப்ட் அன்ட் ரைட்' போட்டு அணிவகுத்தது போலத் தானே நாமும், தேசப்பற்று, இனப்பற்று, மதப்பற்று என்று பலவற்றையும பற்றிக்கொண்டிருக்கிறோம்? மனிதகுலத்தை அலைக்கழிப்பது இந்த மாபெரும் மாயைதான் இல்லையா? இந்த மாயையை ஒரு புகைமூட்டமாகச் சித்தரித்த சார்லி சாப்ளின் என்கிற மேதையை வியக்காமலிருக்க முடியவில்லை. திரைப்படத்தில் அரசியல் எப்படிக் கையாளப்பட வேண்டும் என்பதற்கு சாப்ளினே சிறந்த வழிகாட்டி என்று நான் நினைக்கிறேன்.

– சார்லஸ்

# இலங்கையில் 62வீதமானோர் இரத்த அழுத்த நோயால் பாதிப்பு

## — உப்பு பாவனையை குறைக்க ஆலோசனை —

(கொழும்பு)

இலங்கையில் இரத்த அழுத்த நோய் காரணமாக 62 வீதமானோர் பக்கவாத நோய்க்கு ஆளாகிறார்கள். 49 வீதமானோர் மாரடைப்புக்குள்ளாகின்றனர். இவர்களில் 30 வீதமானோர் அதிகளவு உப்பு பாவனை காரணமாகவே இரத்த அழுத்த நோய்க்கு ஆளாகின்றனர் என சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் நிஹால் ஜயதிலக்க தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டுக்கான உலக சுகாதார தினம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டு சுகாதார அமைச்சு இம்முறை உப்பு பாவனையை குறைப்போம் இரத்த அழுத்த நோயை ஒழிப்போம் என்ற தொனிப் பொருளில் மக்களிடையே உப்பு பாவனையை கட்டுப்படுத்துவதற்கான திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.

இதனை முன்னிட்டு நேற்று முன்தினம் சுகாதார கல்விப் பணியகத்தில் விசேட செயலமர்வொன்று நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சுகாதார அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஒரு நபர் ஒரு நாளைக்கு 5 கிராம் (ஒரு தேக்கரண்டி) உப்பை மட்டுமே உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். எனினும், இலங்கையில் 12.5 கிராம் உப்பை உணவில் சேர்த்துக்கொள்கிறார்கள். சோறு சமைக்கும் போது உப்பு போடக் கூடாது. இதற்குப் பதிலாக றம்பை, கறுவா போன்ற இயற்கை வாசனைத் திரவியங்களைப் பாவிக்க வேண்டும்.

கறி வகைகளுக்கு உப்பு போடும் போது முடிந்தவரை குறைந்தளவில் உப்பைப் பயன்படுத்த வேண்டும். அதற்குப் பதிலாக எலுமிச்சைப் பழம், கொரக்கா புளி, பழப் புளி போன்றவற்றை பயன்படுத்தலாம்.

அதிகளவு உப்பு சேர்க்கப்பட்ட கருவாடு வகைகள், சோஸ், உப்பு, பிஸ்கட், உப்புத் தூவப்பட்ட கிழங்குப் பொரியல், உப்பு அதிகளவு பயன்படுத்தப்பட்ட பிரைட் றைஸ், உடன் நூடில்ஸ் போன்றவற்றினை உட்கொள்வதை தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்தச் செயலமர்வின் போது தொற்றா நோய்களாக மாரடைப்பு, பக்கவாதம், சிறுநீரக நோய், என்பவற்றுக்கு அதிகளவு உப்பு பாவனை, அதிகளவு சீனி பாவனை, புகைத்தல், மது அருந்துதல், எண்ணெய் சேர்க்கப்பட்ட உணவு வகைகள், காபோஹைதரேட் கூடுதலாகவுள்ள மாப்பொருட்கள் கலந்த உணவு பயன்பாடு போன்றவையே காரணம் என குறிப்பிட்டனர்

தினமொன்றுக்கு ஒருவர் 10,000 தடவைகள் அடி எடுத்து வைத்து நடைப்பயிற்சி செய்தால் ஆரோக்கியமான நபராக இருக்க முடியும். தினமொன்றுக்கு ஒரு நபர் 6 தேக்கரண்டி சீனியை மட்டுமே எடுக்க வேண்டும். தன்னுடைய இரத்த அழுத்தத்தை 140 - 90 ஆக இருக்கும் படி பார்த்துக் கொள்ள வேண்டும். அதிகளவு காய்கறி வகைகள், பழங்களை உட்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.



யாழ்.மாவட்ட பெண்கள் அமைப்பினால் நேற்றுமுன்தினம் யாழ். நகரில் நடாத்தப்பட்ட பேரணியின் நிறைவில், அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் மகஜர் கையளிக்கப்படுவதைக் காணலாம்.

# ஹெரோயின் வைத்திருந்தவருக்கு மரணதண்டனை விதிப்பு

(கொழும்பு)

2.4 கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த நபருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கொழும்பு உயர் நீதிமன்ற நீதவான் பத்மன் சூரசேனவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பொரளை சர்பன்டைன் வீதியைச் சேர்ந்த சமரவீர ஆராச்சிகே சுரேஸ் குமார என்பவருக்கே இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது,

போதைப் பொருள் வைத்திருந்ததாக நான்கு பேர் சாட்சியமளித்துள்ளனர். தனிப்பட்ட உளவாளி ஒருவரின் தகவல்களின் அடிப்படையில் 2004ஆம் ஆண்டு சந்தேக நபரை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

# ஒருவருட பயிற்சி நிறைவுற்றதும் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம்

## — அமைச்சர் செனவிரத்ன உறுதியளிப்பு —

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கான அரச சேவை நியமனத்தில் கட்சி, இனம், மொழி, பிரதேசம் என்ற எந்தப் பாகுபாட்டுக்கும் இடமில்லையென்றும் சகலருக்கும் கட்டம் கட்டமாக நிரந்தர நியமனம் வழங்கப்படுவது உறுதியெனவும் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

ஒரு வருட பயிற்சிக் காலத்தை நிறைவுசெய்யும் சகலருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படும் எனத் தெரிவித்த அமைச்சர் பயிற்சிக் காலத்தில் 10,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் நிரந்தர நியமனத்தின் பின் அவர்களுக்கு 23,000 ரூபா சம்பளம் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

ஒரு வருடப் பயிற்சியை முடித்துக் கொண்ட 9,380 பட்டதாரிகளுக்கு இவ் வாரத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், முதற்கட்டமாக 5,491 பட்டதாரிகளுக்கு அண்மையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்படுவதாக எழுப்பப்படும் பிரசாரங்களை முற்றாக மறுத்த அமைச்சர் அவர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சியே வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

# 15வீத மாணவர்கள் நீரிழிவால் பாதிப்பு

பாடசாலை மாணவர்களின் சுகாதார நலனில் அக்கறை செலுத்தும் வகையில் புதிய திட்டமொன்றை செயற்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போது 10% தொடக்கம் 15% வரையான பாடசாலை மாணவர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனால், தொற்றாத மற்றும் ஏனைய நோய்கள் குறித்து பாடசாலை மாணவர்களுக்கு தெளிவுபடுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. மாவட்ட மட்டத்தில் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. இதன் முதல் கட்டம் நேற்று கொழும்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளைச் சேர்ந்த 500 மாணவர்கள் இதில் பங்குபற்றினர்.

# மதுபோதையில் வாகனம் செலுத்திய தேரருக்கு சிறைத் தண்டனை

(கொழும்பு)

வாகன சாரதி அனுமதிப்பத்திரமின்றி மது போதையில் வாகனத்தைச் செலுத்திய தேரருக்கு ஐந்து வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அனுராதபுரம் மேலதிக நீதவான் எதிரிமான என்பவரே இவ்வாறு நேற்று முன்தினம் இந்தத் தண்டனையை விதித்துள்ளதுடன் 7500 ரூபா தண்டமும் விதித்துள்ளார்.

கடந்த 2012ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் திகதி குறித்த தேரர் மதுபோதையில் வாகனத்தை, செலுத்திய போது பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். குறித்த தேரர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்தே அவருக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குற்றத்தை ஏற்றுக்கொண்டாலும் அவருடைய தராதரத்தைப் பார்க்கவில்லை என்றும் காவியுடையை கவனத்தில் கொண்டே ஆறு மாதகால சிறைத் தண்டனையை ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைத்ததாக நீதவான் தெரிவித்தார்.

# இந்து ஆலயங்கள் தொடர்பாக வவுனியாவில் பெரும் முறைப்பாடு

## — மாவட்டகலாசார உத்தியோகத்தர் கவலை —

வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள இந்து ஆலயங்கள் தொடர்பில் தினமும் ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாக வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தெரிவித்தார். இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் காரைக்கால் அம்மையாரின் குரு பூசை நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர், எமது மதத்தின் தலைவர்களாக இருந்தவர்கள் பல்வேறு தரப்பிலும் தமது ஒழுக்க நிலையை மாற்றியமையினால் இந்துக்களுக்கு மட்டுமல்ல எமது மதத்திற்கும் பெரியதொரு பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. தினமும் ஆலய நிர்வாகத்தினர் மீதும் சிவாச்சாரியார்கள் மீதும் குற்றச்சாட்டுக்கள் வந்த வண்ணமுள்ளது. அவை சொல்லமுடியாத பிரச்சினைகளாக உள்ளன. குறிப்பாக கோவில் குளம் விஷ்ணு ஆலயத்தில் 18 வருடங்களாக கடமையாற்றிய பிரதம சிவாச்சாரியார் ஒழுக்க நிலை காரணமாக நிறுத்தப்பட்டுள்ளார். அதே போல் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியார் அவர் சார்ந்த புத்திரர்களும் ஆலயத்தின் கடமைகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறான நிலையில் தினமும் நீண்ட நேரமாக அதிலும் இரவு 10 மணி 11 மணிவரை எனது கைத்தொலைபேசிக்கு அழைப்பு வந்து கொண்டேயிருக்கின்றது. அவை ஏதாவது ஒரு கோவில் நிர்வாகம் பிரச்சினையாகவுள்ளது, சிவாச் சாரியார் பிரச்சினையாக உள்ளார் என்பதாகவே உள்ளது. இவை மிகுந்த மன வேதனையைத் தரும் விடயமாகவுள்ளது.

இதேவேளை, அரசாங்க அதிபரும் பிரதேச செயலாளரும் அலுவலகங்களில் ஏதாவது ஓர் ஆலயத்தை சுட்டிக்காட்டி அக் கோவில் நிர்வாகத்திற்கு கடிதம் எழுதுங்கள் அந்த குருக்களுக்கு கடிதம் எழுதுங்கள் என பணிக்கும் நிலையே காணப்படுகின்றது. இவ்வாறான நிலை ஏன் எமது சமயத்திற்கு ஏற்பட்டுள்ளது என்பதனைப் பார்க்க வேண்டும். இவற்றுக்காக 2011ஆம் ஆண்டு இந்து ஆலயங்களின் ஒன்றியம் ஒன்றைத் தெரிவு செய்து இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அனுப்பிய போது ஏற்கனவே அம்பாறை மாவட்டத்தில் இவ்வாறான அமைப்பை உருவாக்கி அதில் நிதி மோசடி இடம்பெற்றமையினால் இவ்வாறான அமைப்புக்களை மாவட்ட மட்டத்தில் உருவாக்க அனுமதி வழங்கமாட்டோம் எனத் தெரிவித்தார். இதன் காரணமாக அவ் அமைப்பு செயற்படாது போய் விட்டது. ஆனால், இன்றைய நிலையில் அவ்அமைப்பு பதிவு செய்யப்படுகின்றதோ இல்லையோ எமது மாவட்டத்தில் சமய பெரியார்கள், வர்த்தக பிரமுகர்கள், அபிமானிகள், புத்திஜீவிகளைக் கொண்டு ஓர் அமைப்பை விரைவில் உருவாக்கி அதனூடாக இந்து ஆலயங்களில் நடக்கும் பிரச்சினைகளுக்கு பொருத்தமான தீர்வினைக் காண்போம் எனத் தெரிவித்தார்.

# பாடசாலைகளில் உடற்பயிற்சி கட்டாயமென அறிவிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளில உடற்பயிற்சி கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இரண்டாம் தவணை முதல் பாடசாலைக ளில் உடற்பயிற்சி கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கை சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட உள்ளதாகக் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மத வழிபாடுகளின் பின்னர் நாள் தோறும் 10 நிமிடங்கள் உடற்பயிற்சியில் ஈடுபட பாடசாலை மாணவர்கள் கட்டாயப்படுத்தப்பட உள்ளனர்.



ஆரோக்கிய மான மாணவர் சமூக மொன்றை கட்டியெழுப்பும் நோக்கில் இந்த உடற்பயிற்சித் திட்டம் முனனெடுக்கப்பட உள்ளதாகக் குறிப பிட்டுள்ளார். அரசாங்கப் பாடசாலைகளில் விளையாட்டு நிகழ்வுகள் மிகமுக்கியமான இணைப் பாட விதான செயற்பரடாக கருதப்படுகின்றது என அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

52) பூனை, நாய் போன்றவை வயிற்றுக்கோளாறு ஏற்படும்போது தேடியுண்ணும் மூலிகைச் செடி எது?
1. பூனைநக்கி 2. பால் அறுகு 3. குப்பைக்கீரை 4. நெருஞ்சி

53) மலை நாட்டுப் பகுதியில் வாழும் மக்களுக்கு பெரும் பிரச்சினையாக உள்ள பிராணி எது?
1. நத்தை 2. அட்டை 3. யானை 4. காட்டுப்பன்றி

54) தான் வாழும் சூழலின் நிறத்துக்கு ஏற்ப உடலின் நிறத்தை மாற்றும் பிராணி எது?
1. பச்சோந்தி 2. ஓணான் 3. பச்சிலைப்பூச்சி 4. கிளி

55) இலங்கை மக்களின் பிரதான உணவு நெல் அரிசிச்சோறு, இலங்கையில் அதிகளவு நெல் உற்பத்தி செய்யும் மாவட்டம் எது?
1. அம்பாறை 2. குருநாகல் 3. மட்டக்களப்பு 4. அனுராதபுரம்


56) இறைச்சி சமைக்கும்போது, இறைச்சியை மென்மையாக்கப் பயன்படுத்துவது எது?
1. பப்பாசிக்காய் 2. இரம்பை 3. கராம்பு 4. கறுவா

57) எமது நாட்டின் பண்டைக்காலம் பற்றிய தகவல்களை அறிய உதவுவது எது?
1. திரிபீடகம் 2. உபநிடதம் 3. ஆரியவம்சம் 4. மகாவம்சம்

58) இந்தியாவிலுள்ள அஜந்தா ஓவியங்களுக்கு ஒப்பான கலைத்துவப் படைப்புக்கள் காணப்படும் இடம் எது?
1. சிகிரியா 2. கம்பளை 3. தலதாமாளிகை 4. எம்பக்க தேவாலயம்

59) வொலிபோல் விளையாட்டுக்கான ஒரு குழுவிலுள்ள விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை யாது?
1. 6 2. 7 3. 10 4. 12

60. பெற்றோல் நிரப்பும் நிலையங்களில் அவதானிக்கக்கூடியதும், செய்யக்கூடாததுமான குறியீடு எது?
1. 2. 3. 4.




## கடந்த திங்கட்கிழமை வெளியான பயிற்சி வினாத்தாளின் விடைகள்.
பகுதி II

11) (1) தடித்த துணியினால் போர்த்துதல் / நிலத்தில் உருளச் செய்தல்.

12) (2)




13) (4) வாந்திபேதி


14) (3) கலப்பை

15) (3) பல்லி

16) (1) காலாவதியாகும் தினம்

17) (2) நிறைகலசம்

18) (1)




19) (2) பாதசாரிகள் பாதையைக் கடக்குமிடம் முன்னால் (எல்லாவிடைகளும் சரி)

20) (4) இரவில் பின்புறம் வரும் வாகனங்களுக்குத் தெரிய வேண்டுமாதலால்

21) (3) காந்தத்துண்டு


22) (3)




23) (1) 6

24) (2) கதிர்காமம்

25) (2) 1948



26) (2)

27) (2) கிட்டியடித்தல்

28) சீதேவியார்செங்குமுநீர்

29) நன்னாரி

30) தேங்காய்ப்பூக் கீரை

31) முருங்கு 32) வாத்து

33) பருந்து 34) சேவல்

35) மரங்கொத்தி 37) 12

36) பி.ப 1.05/ பிற்பகல் 1.05 / 13 05 மணி / 13.05

37) ரூபா 50 / ரூபா . 50 / ரூபா 50

38) 107

39) (i) 132
ii) 300
iii) 19
iv ) பட்மின்ரன்

v)



(தொடரும்....)



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013


பகுதி - II
1 மணி 15 நிமி



# கல்வி முரசு

**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

♦ கீதாவின் வீட்டின் வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி விடைதருக.




01) வீட்டிலிருந்து வாகனத் தரிப்பிடம் எவ்வளவு தூரத்தில் உள்ளது?
..............................

02) வீட்டிற்கு மிக அருகிலுள்ள இடம் எது? எவ்வளவு தூரம்?
..............................

03) வீட்டிலிருந்து தூரத்திலுள்ள இடம் எது? எவ்வளவு தூரம்?
..............................

04) வாகனத் தரிப்பிடத்திலிருந்து கிணற்றின் வழியே நீர்த் தாங்கி வரை எவ்வளவு தூரம்?
..............................

♦ **பின்வரும் விபரத்தை வாசித்து விடை தருக.**

| | |
|---|---|
| 1 கிலோகிராம் சீனியும், 500 கிராம் தேயிலையும் | - ரூ. 175.00 |
| 1 கிலோகிராம் சீனியும், 400 கிராம் பால்மாவும் | - ரூ. 155.00 |
| 500 கிராம் தேயிலையும், 1 கிலோகிராம் பிஸ்கட்டும் | - ரூ. 220.00 |
| 1 கிலோகிராம் சீனியின் விலை | - ரூ. 35.00 |

05) ஒரு கிலோகிராம் பிஸ்க்கட்டின் விலை என்ன?
1) ரூபா 220 2) ரூபா 80 3) ரூபா 45

06) 800 கிராம் பால்மாவின் விலை என்ன?
1) ரூபா 120 2) ரூபா 155 3) ரூபா 240

07) ஒரு கிலோகிராம் தேயிலையின் விலை என்ன?
1) ரூபா 140 2) ரூபா 280 3) ரூபா 320

**தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 08) பொதுவான வாகனம் | வாகனம் நிறுத்தல் |
| 09) தோணி | சுற்றாடல் மாசடைதல் |
| 10) மஞ்சள்கடவை | பாதையைக் கடத்தல் |
| 11) வாகனப் புகை | நீரோடையைக் கடக்க உதவும் |
| 12) பேருந்துத் தரிப்பிடம் | புகைவண்டி |


♦ **பழ வியாபாரி ஒருவர் ஒரு நாளில் கொள்வனவு செய்த பழவகைகளினதும், விற்பனை செய்யப்பட்ட பழ வகைகளினதும் எண்ணிக்கையை அருகிலுள்ள அட்டவணை காட்டுகிறது.**

| பழங்கள் | கொள்வனவு செய்தவை | விற்பனை செய்தவை |
|---|---|---|
| அப்பிள் | 65 | 45 |
| அன்னாசி | 75 | 35 |
| பலா | 45 | 20 |
| வாழை | 60 | 40 |
| கொய்யா | 60 | 40 |

13) குறித்த நாளில் கொள்வனவு செய்யப்பட்ட மொத்தப் பழங்களின் எண்ணிக்கை யாது?
..............................

14) குறித்த நாளில் விற்பனை செய்யப்பட்ட பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
..............................

15) குறித்த நாளில் எஞ்சியுள்ள பழங்களின் எண்ணிக்கை யாது?
.............................................................




16) குறித்த நாளில் விற்பனை செய்யப்பட்ட பழங்களை அருகில் தரப்பட்டுள்ள நிரல் வரைபில் வகைக் குறித்துக் காட்டுக.
.............................................................

17) குறித்த நாளில் அதிகளவு விற்பனை செய்யப்பட்ட பழவகை எது?
.............................................................

18) சம எண்ணிக்கையில் விற்பனை செய்யப்பட்ட பழ வகைகள் எவை?
.............................................................

- வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக..



19) .............................
20) .............................
21) .............................
22) .............................
23) .............................

- பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைப் புள்ளிக்கோட்டின் மீது தமிழில் எழுதுக.

24) எசல .............................  25) உணுகுரு .............................
26) யதுர .............................  27) அம்ப .............................
28) கிரவா .............................  29) பொல் .............................

- பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரை நிரப்புக.

இடமிருந்து வலம்

30) பிரி என்பதன் எதிர்ப்பதம் (1)

31) வானம் என்பதன் எதிர்ப்பதம் (4)

மேலிருந்து கீழ்

32) வறட்சி என்பதன் எதிர்ப்பதம் (1)

33) இரவு என்பதன் எதிர்ப்பதம். (5)





இடமிருந்து வலம்

| | | | |
|---|---|---|---|
| 1 | | | 2 |
| | | 3 | |
| 4 | | | |
| | | | |

மேலிருந்து கீழ்

- பின்வரும் தாவரங்களின் பெயர்களை எழுதுக.

(கறிவேப்பிலை / அகத்தி / வேம்பு / நீர்முள்ளி)



- பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

34) தாய்க்கும், தந்தைக்கும் இடையே 2 வயது வித்தியாசம் உண்டு. எனினும் தாயைவிடத் தந்தை மூத்தவர். தாயைவிட மகன் 18 வயது இளையவன். மகனின் தற்போதைய வயது 10 எனின், தந்தையின் வயது யாது?
.............................................................

35) முந்தை நாளுக்கு முற்பட்ட நாள் ஞாயிற்றுக்கிழமை எனில், நாளை மறுதினத்திற்கு அடுத்த நாள் என்ன கிழமை? .............................................................

36) ரவியினதும், சுதாவினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 20 வருடங்களாகும். ரவியின் வயது, சுதாவின் வயதின் 4 மடங்காயின், ரவியின் வயது எத்தனை?
.............................................................

37) சசியைவிட உமேஷ் உயரமானவன். சசியும் பிரியாவும் ஒரே உயரம் உடையவர்கள். பிரியாவைவிட அனுலா உயரம் குறைந்தவள் அனுலாவைவிட சசி உயரம் கூடியவள் எனில் இதில் உயரம் கூடியவர் யார்?
.............................................................

38) சானுஜன் படம் ஒன்றினைக் காட்டி பின்வருமாறு கூறினான். படத்தில் இருப்பவரின் தாய், எனது அப்பாவின் அம்மா ஆகும். அப்படியானால் சானுஜனுக்கும் படத்தில் இருப்பவருக்கும் இடையேயான உறவு முறை எது?
.............................................................

**கீழே தரப்பட்ட விவரணத்தை வாசித்து விடைதருக.**

நீண்ட நேரம் பயணம் செய்த வயோதிபர் மிகவும் களைத்த நிலையில் காணப்பட்டார். அவர் தலையில் காணப்பட்ட கச்சான், கடலைக் கடகம் கூட அவருக்குப் பெரும் சுமையாகக் காணப்பட்டது. அவரின் மனம் ஆறுதலை விரும்பியது. பரந்து செழித்து வளர்ந்த ஆலமர நிழலை அடைந்ததும் "அப்பாடா" என்று ஓர் பெருமூச்சு விட்டபடி மரநிழல் இருந்த நிலத்தில் தனது தலைப்பாகையைக் கற்றிடி விரித்த வண்ணம் மன நிம்மதியோடு சாய்ந்தார். அந்த ஆலமரத்தை அண்ணார்ந்து பார்த்தபோது, அவரின் மனத்தில் பல காட்சிகள் கண்ணுக்குப் புலப்பட்டன. ஓர் காகத்தின் கூட்டையும் அதற்குள் இருந்த இரண்டு குஞ்சுகள் தாயைத் தேடிக் கத்திய வண்ணம் இருப்பதையும் கண்டார். சிறிது நேரத்தில் தாய்க் காகம் வந்து குஞ்சுகளுக்கு உணவு ஊட்டியது. இப்படியான பல காட்சிகளைக் கண்ட வயோதிபர் சுதந்திரமாக வாழும் பறவைகளைப் பார்த்து மனநிம்மதியடைந்து தனது பயத்தை ஆரம்பித்தார்.

39) இப்பந்தியில் விபரிக்கப்பட்டவர் யார்?.............................
40) ஆலமரத்தடிக்கு அவர் ஏன் வந்தார்?.............................
41) ஆலமரம் எப்படி வளர்ந்திருந்தது?.............................
42) வயோதிபர் ஆலமரத்தில் என்னத்தை அவதானித்தார்?.............................
43) குஞ்சுகள் ஏன் கத்தியது?.............................
44) பின்வரும் சொற்களுக்கு ஒத்தசொல் தருக.
1. பயணம் :............................. 2. நிலம் :.............................
45) பின்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொல் தருக.
1. வயோதிபர் :............................. 2. நீண்ட :.............................

46) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.
1. சுமை 2. குஞ்சுகள்

47) இப்பந்தியில் இருந்து இரண்டு பெயர்ச் சொற்களை எழுதுக 1)............................. 2).............................

48) இப்பந்தியில் இருந்து இரண்டு வினைச் சொற்களை எழுதுக. 1)............................. 2).............................

- பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

49) போராடிய /அகிம்சை வழியில் / வெள்ளையருக்கு / மாமனிதர் / ஆவர் / மகாத்மாகாந்தி / எதிராக
.............................................................

50) நெற்றி / நிலத்திலே / உழைத்தான் / தொழிலாளி / சிந்தி / வியர்வை
.............................................................

- பின்வருவனவற்றுக்கு விடை எழுதுக.

51) பல்வலியைக் கு றைக்கப் பயன்படுத்தும் தைலம் எது?
1. கறுவாய் தைலம் 2. கராம்புத் தைலம்
3) விக்ஸ் தைலம் 4) சாதிக்காய்த் தைலம்

# ஹெலிகொப்டர் கொள்வனவில் ஊழல்

# முன்னாள் தளபதி தேடப்படும் குற்றவாளி



(டில்லி)

ஹெலிகொப்டர் ஊழல் வழக்கில் இந்திய விமானப் படையின் முன்னாள் தளபதி எஸ்.பி.தியாகி தேடப்படும் குற்றவாளி என்று சி.பி.ஐ.அறிவித்துள்ளது. இந்திய வி.ஐ.பி.க்கள் பயணம் செய்ய இத்தாலி நிறுவனத்துடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் ரூ.3,600 கோடி ஊழல் நடந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக இத்தாலியில் பின் மெக்கானிக்கா நிறுவனத்தின் தலைவரும், அகஸ்டா வெஸ்ட்லாண்ட் நிறுவனத்தின் தலைவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் ரூ.3600 கோடி ஹெலிகொப்டர் பேரத்தில் இந்தியாவைச் சேர்ந்தவர்களுக்கு ரூ.360 கோடி இலஞ்சம் கொடுத்ததாக அதிர்ச்சியூட்டும் தகவலை வெளியிட்டனர்.

இந்த விவகாரம் குறித்து சி.பி. ஐ.விசாரித்து வருகிறது. விசாரணையில் இந்திய விமானப் படையின் முன்னாள் தளபதி தியாகி இலஞ்சம் வாங்கியது உறுதியானது.

ஆனால், அவர் எவ்வளவு இலஞ்சம் வாங்கினார், எப்படி வாங்கினார் என்பது இன்னும் தெரியவில்லை.

இந்நிலையில், கடந்த 13ஆம் திகதி தியாகி அவரது உறவினர்கள் சஞ்சீவ் தியாகி என்ற ஜுலி தியாகி, ராஜீவ் தியாகி மற்றும் சந்தீப் தியாகி உட்பட 8 இந்தியர்கள் மற்றும் 5 வெளிநாட்டவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந் நிலையில் தியாகி, அவரது உறவினர்கள் 3 பேர் மற்றும் 4 பேர் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறுவதைத் தடுக்க எல்லையில் உள்ள அனைத்து சோதனைச்சாவடிகளுக்கும் தேடப்படும் குற்றவாளிகள் நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த வழக்கில் தொடர்புடைய கிடோ ரால்ப், கார்லோ வாலன்டினோ பெர்டினான்டோ கெரோசா மற்றும் கிறிஸ்டியன் மிஷல் ஆகிய 3 பேரை பிடிக்க இன்டர்போலின் உதவியை நாடவிருக்கிறது சி.பி.ஐ.

# பரீட்சை மண்டபத்தில் தாயானார் மாணவி

பாடசாலையில் பரீட்சை மண்டபத்தில் குழந்தையைப் பெற்றெடுத்தார் மாணவி. April 4, 2013 11:42 உத்தரபிரதேசத்தில் பள்ளி தேர்வு எழுதிக் கொண்டிருந்த மாணவிக்கு, தேர்வு அறையில் குழந்தை பிறந்தது. உத்தரபிரதேச மாநிலம் அசம்கார் மாவட்டம் சதியவ் என்ற இடத்தில் உத்தரபிரதேச மாநில அரசு மேல்நிலைப்பள்ளியில் தேர்வுகள் நடந்து கொண்டிருந்தன.

நேற்று இந்தப் பள்ளியில் பூனம் ஷானி என்ற மாணவியும் சமஸ்கிருத தேர்வு எழுத வந்தார். அவர் நிறைமாத கர்ப்பிணியாக இருந்தார். தேர்வு எழுதிக் கொண்டிருந்த போது அவருக்கு திடீரென பிரசவ வலி ஏற்பட்டது. இதுகுறித்து அறையில் இருந்த மேற்பார்வையாளரிடம் தெரிவித்தார். உடனடியாக அவர் அம்புலன்ஸ் உதவி கேட்டு போன் செய்தார். சிறிது நேரத்தில் அங்கு அம்புலன்ஸ் வந்து சேர்ந்தது.

அதேசமயம் அந்த மாணவிக்கும் வகுப்பறையிலேயே குழந்தை பிறந்தது. பின்னர் குழந்தையும், தாயும் அந்த அம்புலன்ஸ் மூலம் மாவட்ட வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டனர்.

# திருமணம் குறித்த கேள்வி வெறுப்படைகிறார் ராகுல்

(டில்லி)

எனக்கு எப்பொழுது திருமணம், நான் எப்பொழுது பிரதமர் ஆவேன் என்று அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் தேவையில்லாதவை என்று காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பின் ஆண்டு கூட்டம் டில்லியில் நடைபெற்று வருகிறது. இன்றைய கூட்டத்தில் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். அப்போது அவர் பேசியதாவது, எப்பொழுது நீங்கள் திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்கள்? எப்பொழுது பிரதமர் ஆவீர்கள்? என்று என்னிடம் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் தேவையில்லாதவை. இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு தொழில் முனைவோர் பெரும் உதவி செய்துள்ளனர். இந்தியாவில் கனவுகள், ஐடியாக்களுக்கு பஞ்சமே இல்லை. இந்திய இளைஞர்களின் உத்வேகத்தை நாம் தான் நல்ல வழியில் செலுத்த வேண்டும்.


இந்தியாவின் வளர்ச்சிக்கு சிறந்த கட்டமைப்பு தேவை. சிறந்த உள்கட்டமைப்பை அமைக்க கார்பரேட் நிறுவனங்



கள் அரசுக்கு உதவி செய்ய வேண்டும். வளர்ச்சிக்கு அரசு மற்றும் தனியார் துறைகளின் கூட்டணி மிகவும் முக்கியம். இங்கு வேலையின்மை பிரச்சினை இல்லை. முறையான பயிற்சி இல்லாதது தான் பிரச்சினை. வளர்ச்சிப் பாதையில் குண்டும் குழியும் இருக்கக் கூடாது. வளர்ச்சியில் ஏழைகள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். நான் 1991இல் கல்லூரிக்குச் சென்ற போது இந்திய தெருக்களில் யானைகள் நடந்து செல்லுமாமே என்று என்னிடம் கேட்டனர். ஆனால், தற்போது யாரும் அது போல் கேட்பதில்லை. ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் ஆட்சியில் இந்தியா வேகமாக வளர்ந்துள்ளது என்றார்.

## பாலியல் பலாத்கார குற்றம்

# அமுலுக்கு வந்தது மரணதண்டனை




பாலியல் பலாத்கார குற்றத்துக்கு மரணதண்டனை அளிக்க வகை செய்யும் புதிய சட்டம் நேற்றுமுன்தினம் முதல் அமுலுக்கு வந்தது. இதற்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஒப்புதல் அளித்து கையெழுத்திட்டார். அசிட் வீச்சு குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு 10 ஆண்டு சிறை தண்டனை அளிக்க, புதிய சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

இனிமேல் இந்தப் புதிய சட்டம், குற்றவியல் சட்டம் (திருத்தம்), 2013 என்று அழைக்கப்படும். இதில், இந்திய தண்டனை சட்டம், குற்றவியல் நடைமுறை சட்டம், இந்திய சாட்சிகள் சட்டம், பாலியல் குற்றங்களில் இருந்து சிறுவர்களைக் காக்கும் சட்டம் ஆகியவை திருத்தம் செய்யப்பட்டுள்ளன. மேலும், சம்மத பாலியல் உறவுக்கான வயது வரம்பு 18 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி, பாலியல் பலாத்காரத்துக்கு 20 ஆண்டுகள் வரை கடுங்காவல் சிறைத் தண்டனை அளிக்கப்படும். அல்லது குற்றத்தின் கொடுமைக்கு ஏற்ப சாகும்வரை சிறைத் தண்டனையும் வழங்கப்படும். மேலும், இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பாக பாலியல் பலாத்கார குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டவர்களுக்கு மரண தண்டனையும் அளிக்கலாம்.

இந்தியச் செய்திகள்

# இலங்கையுடன் உள்ள நட்பின் மூலம் மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு



இலங்கையுடன் உள்ள நட்பு ரீதியில் மீனவர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என இந்தியா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

மீனவர் பிரச்சினை குறித்து இலங்கையுடன் தொடர்பில் இருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மத்திய, வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர், செய்யது அக்பர்தீன் இது குறித்து கூறியதாவது: இந்திய மீனவர்கள் சிலரை, இலங்கை அரசு கைது செய்து, காவலில் வைத்துள்ளது. அவர்களை விடுவிக்க, அனைத்து முயற்சிகளையும், மத்திய அரசு, மேற்கொண்டுள்ளது. இந்த விவகாரம் குறித்து, இலங்கை அதிகாரிகளுடனும், தொடர்ந்து பேசி வருகிறோம். விரைவில் சுமுக தீர்வு ஏற்படும் என்ற, நம்பிக்கையுள்ளது, என்றார்.




# கண்கள் தோண்டப்பட்ட நிலையில் மயங்கிக்கிடந்தார் இராணுவவீரர்

இந்திய இராணுவத்தின் 11ஆவது ராஷ்டரிய ரைபிள்ஸ் படைப்பிரிவில் பணியாற்றி வரும் இராணுவ வீரர் ராஜேஷ் தத் என்பவர் கண்கள் தோண்டப்பட்ட நிலையில், ஜம்மு-பூஞ்ச் நெடுஞ்சாலைப் பகுதியில் மயங்கிய நிலையில் கிடந்துள்ளார். ஒரு மாத விடுமுறையில் தனது குடும்பத்தாரைக் காண வீட்டிற்குச் சென்ற இவர், கடந்த மாதம் 31ஆம் திகதி பணிக்குத் திரும்பியிருக்க வேண்டும். ஆனால், குறிப்பிட்ட திகதியில் அவர் பணியில் சேரவில்லை.

இந்நிலையில், ஜம்மு-பூஞ்ச் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சவுக்கி சோரன் பகுதியில் உள்ள கால்வாயில் கண்கள் தோண்டப்பட்ட நிலையில் இராணுவ வீரர் மயங்கிக் கிடப்பதாக வழிப்போக்கர் ஒருவர், அக்னூர் பொலிஸாருக்கு தொலைபேசி மூலம் தகவல் அளித்தார். சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், கால்வாயில் மயங்கிக் கிடந்த நபரை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.



அவரைப் பற்றிய தகவல்களை கேட்டபோது, இராணுவத்தில் பணி செய்யும் தனது பெயர் ராஜேஷ் தத் என்றும், சுமார் 10 நாட்களுக்கு முன்னர் தன்னை யாரோ கடத்திச் சென்றதாகவும் அவர் கூறினார்.

பின்னர், மீண்டும் மயக்க நிலைக்குச் சென்று விட்டார். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுவருகின்றனர்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................


கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# கொரிய தீபகற்பத்தில் தொடரும் பதட்டம்
# இராணுவத்தை முன்நகர்த்தியது அமெரிக்கா



(பான்யாங்)

அமெரிக்காவையும், தென் கொரியாவையும் தாக்கப்போவதாக வடகொரியா போர் மிரட்டல் விடுத்துவரும் நிலையில் அமெரிக்காவும், தனது இராணுவ படைப்பிரிவை முன்னகர்த்தியுள்ளதுடன், ஏவுகணைகளையும் நகர்த்தியுள்ளது.

தென்கொரியா, அமெரிக்கா மீது போர் தொடுக்கப்போவதாக வடகொரியா மிரட்டி வருகிறது. இரு நாடுகள் மீதும் அணுகுண்டு வீசுவோம் எனவும் எச்சரித்துள்ளது.

வடகொரியா நேற்றுமுன் தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் நாங்கள் அமெரிக்கா, தென்கொரியா மீது அணுகுண்டு தாக்குதல் நடாத்துவதற்கான கடைசி உத்தரவை இராணுவத்துக்கு பிறப்பித்து விட்டோம் என்று கூறியுள்ளது.

எனவே, வடகொரிய இராணுவம் எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்ச நிலை அங்கு உருவாகியுள்ளது. எனவே இதைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அமெரிக்காவும், தென் கொரியாவும் எடுத்துள்ளன.

வடகொரியா அருகே அமெரிக்காவுக்கு சொந்தமான குவாம் என்ற தீவு உள்ளது. இதன் மீது தான் வடகொரியா முதல் தாக்குதல் நடத்தும் என்று எதிர்பார்க்கின்றனர். எனவே,அங்கு அனைத்து ஏற்பாடுகளையும் அமெரிக்கா செய்துள்ளது.

வடகொரிய ஏவுகணை மூலம அணுகுண்டு வீசினால் அதை நடுவானிலேயே வழிமறித்து அழிக்கும் ஏவுகணைகளை அமெரிக்கா தயாராக வைத்துள்ளது. வடகொரியாவின் கடைசி எச்சரிக்கையை அடுத்து அமெரிக்கா தனது ஏவுகணைகளை முன் நகர்த்தி வருகிறது.

ஏவுகணைகளை ஏவும் டிரக் லோஞ்சர்களில் ஏவுகணைகள் பொருத்தப்பட்டு முன் நகர்த்தப்பட்டுள்ளன. அதேபோல எதிரி நாட்டு ஏவுகணையை முன்கூட்டியே கண்டறிந்து தகவல் தெரிவிக்கும் ராடர்களும் முன் நகர்த்தப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த தீ தடுப்பு அமைப்புகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இதனால் அங்கு உச்சக்கட்ட போர் பதட்டம் நிலவிவருகிறது.

# கடாபியின் மகள் அடாவடி
# அல்ஜீரியாவிலிருந்து விரட்டியடிப்பு



(லண்டன்)

லிபியாவில் ஏற்பட்ட மக்கள் புரட்சியின் விளைவாக அந்நாட்டின் அதிபர் முவம்மர் கடாபி கடந்த 2011ஆம் ஆண்டு புரட்சிப் படையினரால் கொல்லப்பட்டார். இதனைத்தொடர்ந்து அவரது மனைவி, மகன்கள் மற்றும் மகள் வெளிநாடுகளில் தஞ்சமடைந்து வாழ்ந்து வருகின்றனர்.

கடாபியின் ஒரே மகள், ஆயிஷா கடாபி. இவரது கணவர் மற்றும் 2 குழந்தைகள் புரட்சிக்காரர்கள் நடத்திய உச்சகட்ட தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

கடாபியின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஆயிஷா அல்ஜீரியா நாட்டில் அரசியல் தஞ்சமடைந்தார். அவர் தங்குவதற்கு அல்ஜீரியா அதிபரின் மாளிகை வளாகத்திற்குள் பாதுகாப்பான வீடு வழங்கப்பட்டது. அங்கு குடியேறிய பின்னர், ஒரு பெண் குழந்தையை பெற்றெடுத்த ஆயிஷாவின் போக்கில் நாளடைவில் மாற்றம் ஏற்பட்டது.

தனது பாதுகாவலர்களை அடித்து, உதைப்பது. அல்ஜீரிய அதிபரின் ஓவியத்தை நாசப்படுத்துவது, வீட்டின் பொருட்களை தீயிட்டு கொளுத்துவது போன்ற செயல்களை ஆயிஷா தொடர்ந்து செய்து வந்தார். அதிபர் மாளிகை அதிகாரிகள் பலமுறை எச்சரித்தும், அவரது போக்கில் மாற்றம் ஏற்படவில்லை.

இதனையடுத்து, அல்ஜீரியாவில் இருந்து ஆயிஷா கடாபி விரட்டப்பட்டதாகவும் தற்போது ஓமன் நாட்டில் அவர் தஞ்சமடைந்து இருப்பதாகவும் அல்ஜீரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ஆப்கான் நீதிமன்ற வளாகத்தில் தற்கொலைப்படைத்தாக்குதல்
## – 53பேர் பலி 90 இற்கு மேல் காயம்



(காபூல்)

ஆப்கானின் நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்ற தற்கொலைத்தாக்குதலில் 53பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் 90 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

ஆப்கானிஸ்தானில் கைது செய்யப்பட்ட தலிபான் தீவிரவாதிகள் சிலரை நேற்று முன் தினம் விசாரணைக்காக பாரா மாகாணத்தில் உள்ள நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றனர். அப்போது இராணுவ உடையணிந்த 6 தற்கொலைப்படை தலிபான் தீவிரவாதிகள் ஒரு வாகனத்தில் வந்தனர். அவர்களை இராணுவ வீரர்கள் என நினைத்து, நீதிமன்ற வளாகத்தில் பணியில் இருந்த இராணுவத்தினர் அனுமதித்தனர்.

பின்னர் நீதிமன்றத்திற்குள் புகுந்த அவர்களில் 4 பேர் அங்கிருந்த தலிபான்களை நோக்கி ஓடினர். 2 பேர் தாங்கள் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தனர்.

இந்தத் தாக்குதலில் 53 பேர் கொல்லப்பட்டனர். மற்ற தலிபானகளுடன் நடைபெற்ற சண்டையில் ஒருவன் மட்டும் கொல்லப்பட்டான். 3 பேர் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர். இந்த தாக்குதலுக்கு தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர்.

இதனால், தலிபான்களை விடுவிக்கும் முயற்சி தோல்வியில் முடிவடைந்தது. இந்நிலையில், நேட்டோ படைகள் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறவுள்ள நிலையில் அங்கு நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# காற்றில் கலந்தது மாசு
# சீனாவில் 12 இலட்சம் பேர் பலி



(பீஜிங்)

சீனாவின் தலைநகர் பீஜிங் உள்ளிட்ட பெருநகரங்களில் காற்றில் பெருமளவிற்கு மாசு கலந்துள்ளது. "பி.எம்.2.5 துகள்கள் என அழைக்கப்படும் கண்ணுக்குப் புலப்படாத நச்சுத துகள்கள் காற்றில் கலந்திருப்பதால் பெருநகரங்களில் வசிக்கும் சீனர்களில் பலர், சுவாசிக்கும் முகமூடிகளை அணிந்தபடி தான் வெளியே செல்கின்றனர்.

எனினும், சுவாசத்தின் மூலம் இந்தத் துகள்கள் நுரையீரலுக்குள் ஆழ்ந்து ஊடுருவி தங்கிவிடுவதால் ஆஸ்துமா, புற்றுநோய் போன்ற நோயினால் சீனர்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

கடந்த 2010ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 12 இலட்சம் சீனர்கள் காற்று மாசு தொடர்பான நோய்களுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக சீனாவில் இவ்வாரம் தாக்கல் செய்யப்பட்ட வோஷிங்டன் பல்கலைக் கழகத்தின் ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது.

உணவு சார்ந்த தீமைகள், உயர் இரத்த அழுத்தம், புகைப் பிடித்தல் ஆகியவற்றிற்கு அடுத்த 4ஆவது இடத்தில் காற்று மாசினால் ஏற்படும் நோய்கள் சீனர்களின் இறப்புக்கு காரணமாக இருப்பதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது

உலகச் செய்திகள்

# இரண்டாவது உலகப்போரில் வீசிய வெடிகுண்டு ஜேர்மனில் கண்டுபிடிப்பு



(பெர்லின்)


இரண்டாம் உலகப் போரின் போது பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டு ஜேர்மன் நாட்டின் பெர்லின் நகரில் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

கடந்த 1945ஆம் ஆண்டு 2ஆவது உலகப் போர் முடிவுக்கு வந்தது. எனினும், இந்தப் போரில் விமானம் வழியாக குண்டுகள் வீசப்பட்டன. இதில், பல வெடிகுண்டுகள் வெடிக்காத நிலையிலேயே இருந்துள்ளன. அவற்றில் சில தற்போது போரில் ஈடுபட்ட நாடுகளில் இருந்து கண்டறியப்பட்டு வருகின்றன. இந்நிலையில், ஜேர்மனியின் மத்திய பெர்லின் நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை மத்திய ரயில்வே நிலையத்தில் தண்டவாளம் அருகே சக்தி வாய்ந்த வெடிகுண்டு கண்டறியப்பட்டது. இது 100 கி.கிராம் எடை கொண்டது. சோவியத் நாட்டைச் சேர்ந்தது என்றும் விமானம் வழியாக வெடிகுண்டு பாய்ச்சப்பட்டுள்ளது என்றும் தெரியவந்துள்ளது. இதனைத் தொடர்ந்து அருகில் இருந்த கட்டடங்களின் குடியிருப்போர் அனைவரையும் பாதுகாப்பான இடத்திற்கு இடம் பெயரச் செய்த பின் நேற்றுமுன்தினம் வெடிகுண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது. இந்தப்பணி அரை மணி நேரம் நீடித்தது.

இந்த பணியின்போது அருகிலுள்ள வாகனப் போக்குவரத்து முற்றிலும் நிறுத்தப்பட்டது. மேலும், ரயில் போக்குவரத்து மற்றும் பெர்லின் நகருக்கான டெகல் விமான நிலைய போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. ஜேர்மனியில் இன்னும் ஆயிரக்கணக்கான வெடிகுண்டுகள் வெடிக்காத நிலையில் இருப்பதாக நம்பப்படுகிறது.

# இங்கிலாந்து மேயர்மாளிகையில் கொள்ளைபோனது நோபல்பரிசு





இங்கிலாந்தில் உள்ள மேயர் மாளிகையில் பல ஆண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வந்த அரிய வரலாற்று சிறப்புமிக்க பொருட்களுடன் முன்னாள் இங்கிலாந்து அமைச்சர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட நோபல் பரிசும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

வட இங்கிலாந்தில் உள்ள நியூ கேஸ்டில் நகரில் உள்ள மேயர் இல்லத்தில் பல ஆண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வந்த வரலாற்றுச் சிறப்புப் பெற்ற தொல்பொருட்கள் மற்றும் அரிய வகை பரிசுப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கொள்ளை போன பொருட்களில் உலகின் மிக உயரிய பரிசு எனக் கருதப்படும் நோபல் பரிசுப் பதக்கமும் ஒன்றாகும். இந்த நோபல் பரிசு இங்கிலாந்து நாட்டின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஆர்தர் ஹெண்டர்சனுக்கு 1934 ஆம் ஆண்டு அமைதிக்காக வழங்கப்பட்டதாகும்.

இதுகுறித்து தெரிவித்த நார்டம்பரிய பகுதி பொலிஸார், நியூ கேஸ்டில் மேயர் இல்லத்திலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட அனைத்துப் பொருட்களும் கிடைப்பதற்கு அரிய தொல்பொருட்களாகும். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பொருட்களின் மொத்த மதிப்பு 1,50,000 பவுண்டுகள். ஏப்ரல் 1 ஆம் திகதி இரவு நடந்த இந்த கொள்ளைச் சம்பவம் குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருகிறது எனக் கூறினார்.

இங்கிலாந்தில் நோபல் பரிசுடன் திருட்டுப்போன பொருட்களின் மொத்த மதிப்பு இந்திய ரூபாயில் 1,24,01,148 ரூபாயாகும்

# உவர்நீர் தடுப்பணை புனரமைப்பு பூர்த்தியடையும் நிலையில்


மண்டைதீவு மற்றும் அல்லைப்பிட்டிப் பகுதிகளில் ஜி.ஐ.சற். நிறுவனத்தின் நிதி உதவியின் கீழ் மேற்கொள்ளப்படும் உவர் நீர் தடுப்பணை புனரமைப்பு வேலைகள் எண்பது வீதம் பூர்த்தியடைந்திருப்பதாக யாழ். மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

மண்டைதீவு சாம்பலோடை கண்ணகை அம்மன் கோவிலிற்கு மேற்காக 1150 மீற்றர் நீளமான மற்றுமொரு உவர்நீர் தடுப்பணையும் நான்கு மில்லியன் ரூபா செலவிலும் அல்லைப்பிட்டியின் வடக்குப் பகுதியில் 1233 மீற்றர் நீளமான உவர் நீர்த்த தடுப்பணையும் 275 மீற்றர் நீளமான வீதி ஒன்றும் நான்கு மில்லியன் ரூபா செலவிலும் ஜி.ஐ.சற். நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிதியின் மூலமாக யாழ். மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் புனரமைக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த வேலைகளில் 80 வீதமான வேலைகளே தற்சமயம் நிறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை மண்டைதீவுப் பகுதியில் வடக்குப் பக்கமாக பிரதான வீதிக்கு கிழக்காகவும் மேற்காகவும் இரண்டு கிலோ மீற்றர் நீளமான உவர் நீர்த்தடுப்பணை கடந்த ஆண்டு யாழ். மாவட்ட நீர்ப்பாசனத்திணைக்களத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இவ்வாறு குறித்த பகுதிகளுக்கான உவர்நீர்த் தடுப்பணை வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் குறித்த பகுதிகளில் உள்ள விளைநிலங்களில் உவர் நீர் கலந்து அவை உவர்த்தன்மை கொண்டவையாக மாறுவது தடுக்கப்படும் அதேவேளை அந்தப் பகுதிகளின் நிலத்தடி நீரினைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் எனவும் யாழ். மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

# இரு மீனவர்களும் யாழ். திரும்புவர்



(யாழ்ப்பாணம்)

இருவாரங்களுக்கு முன்பாக தமிழகம் கோடியாக் கரையில் கரையொதுங்கிய வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இரு மீனவர்களும் அவர்களது படகும் ஓரிரு தினங்களில் அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக அங்கிருந்து கிடைத்த தகவலை மேற்கோள்காட்டி யாழ். கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவ்விரு மீனவர்களும் கடந்த இருவாரங்களுக்கு முன்னர் கடற்றொழிலுக்காக வல்வெட்டித்துறைப் பகுதியில் இருந்து புறப்பட்டுச் சென்றபோது காலநிலை சீர்கேட்டின் காரணமாக தமிழகம் கோடியாக்கரைக்கு படகுடன் காற்றினால் அடித்துச் செல்லப்பட்டனர்.

இதனை அடுத்து இவர்களை தமிழக கரையோரக் காவற்படையினர் பிடித்து தமிழகப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இதன்பின்னர் அவர்கள் தமிழ்நாட்டில் இருந்து வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் சங்கத்திற்கு தொலைபேசியில் தொடர்புகொண்டு தம்மை ஓரிரு தினங்களில் விடுவிப்பதாக இந்திய அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர். எனவும் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு காலநிலை சீர்கேடடினால் இரு நாட்டு மீனவர்களும் அடிக்கடி கரையொதுங்குவதும் பின்னர் அவர்கள் அவர்களது நாட்டிற்கு அனுப்பிவைப்படுவதும் தெரிந்ததே. (பா)

# யுத்த வடுக்களை அகற்ற புதிய ஆவணப்படம் வெளியீடு

(கொழும்பு)

யுத்தகால குற்றச் செயல்களால் நாட்டுக்கு ஏற்பட்ட அவப்பெயரை அகற்றும் வகையிலான ஆவணத்திரைப்படம் ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதல்கள் தொடர்பான பொதுவான ஆய்வுகளை முன்னெடுக்கும் நோக்கில் தயாரிக்கப்பட்ட "பொது நெருக்கடி" என்ற ஆவணத் திரைப்படம் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது. கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச மத்திய நிலையத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்விற்கு பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தலைமை தாங்கினார். மோதல்களுக்கு காரணமாக அமைந்த விடயங்கள் மற்றும் அதற்கான தீர்வுகள் இந்த ஆவணப்படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இது பற்றிய காரணிகள் கலந்துரையாடல்கள் ஊடாக ஆராயப்படும் அதேவேளை இலங்கையின் இனங்களுக்கு இடையிலான பிரச்சினைகளுக்கு சமநிலையான ஆய்வுகள் இதன்போது இடம் பெறவுள்ளது. கடந்த காலங்களில் சனல்-4 போன்ற ஊடகங்கள் இலங்கை தொடர்பில் வெளியிட்ட ஆவண காணொளிகள் காரணமாக சர்வதேசத்தின் மத்தியில் நாட்டுக்கு எதிரான நிலைப்பாடுகள் வெளியாகியிருந்தன.

இவ்வாறு இலங்கைக்கு எதிரான கருத்தியல் யுத்தத்திற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்த ஆவணத்திரைப்படம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

### வன்முறை...

பதாகவும் அவர் கூறியுள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற மீள்குடியேற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஒரே மொழியை பேசும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இடையிலான உறவுகள் கடந்த 30 வருடகால போர் காரணமாக அழிந்துபோயின. இதனை மீண்டும் கட்டியெழுப்பும் நிலைமைக்கு நாம் வந்துள்ளோம். கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் ஐக்கியமாக வாழ்வது போன்று, வடக்கிலும் வாழமுடியும். தற்போதுள்ள நிலைமையில், வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் அமைதியான முறையில் வாழவேண்டும். இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பும் அவசியம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

### பரிந்துரை...

பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்களை சமாளிக்கும் இராஜதந்திர முனைப்பாக இந்த நடவடிக்கை கருதப்படுகின்றது.

இதேவேளை, எதிர்வரும் காலங்களில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் அனுர பிரியதர்சன யாபா தெரிவித்துள்ளார்.

### வெளியானது...

சண்முகராசா கோடீஸ்வரன் என்பவரும் சித்தியடைந்துள்ளார். யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் முருகதாஸ் தலக்சனா பான்கரஜயர் கம்சா ஆகியோர் 9 ஏ தரத்தில் சித்தியடைந்துள்ளனர். புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி சின்னராசா தனஞ்சிகா 9 ஏ, விநிசா 8 ஏ,பி, ஜீவசாந், 7 ஏ,பி,எஸ்.தரத்திலும சித்தியடைந்துள்ளனர். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் 18 மாணவர்கள் 9 ஏ தரத்திலும், 8 ஏ தரத்தில் 37 பேரும் சித்தியடைந்துள்ளனர். சி.சண்முககேசன், இ.சுதர்சன், க.தர்சிகா, பா.ஆதிபன, சு.வித்தியாசன், ம.ஜெகூரன், சு.ஹரிவர்த்தனன், கி.கீர்த்தனன், சி.கோபிசாந், து.நிலக்சன், த.நிறுசன், செ.சேந்தன், சி.சிவசெந்தூரன், த.சோபிநாதன், சி.தேனுகாணன், ப.தினேசன், ப.டிலக்சன், கி.லோகீசன் ஆகியோரும், நெல்லியடி மத்திய கல்லூரியில் மூவர் 9 ஏ தரத்திலும் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ஒருவர் 9 ஏ தரத்திலும் சித்தியடைந்துள்ளனர் என இணையத்தளம் மூலம் கிடைத்தபெபேறுகள் தெரிவிக்கின்றன.

### காங்கேசன்துறை...

ஜுலை மாதம் 2011 ஆம் ஆண்டு கைச்சாத்தானது. முதற்கட்ட வேலைகளுக்காக இந்தியா 20 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்க ஒப்புக்கொண்டது. இதன்படி மண் வாருதலின் இரண்டாம் கட்டவேலையை ஒரு இந்திய கம்பனி ஒன்று விரைவில் தொடங்கவுள்ளது. அலைத்தடை அணையை புனரமைக்கவும் இறங்குதுறை ஒன்றை அமைக்கவும் கடன்பெறப்படும் என துறைமுக அபிவிருத்தி அமைச்சு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். நாம் இந்தக் கடனை பெறவுள்ளோம். வட்டி வீதம் பற்றி பேச்சுவார்த்தை நடைபெறுகின்றது. இது சலுகை அடிப்படையிலான கடனாக இருக்கும் என நாம் நம்புகின்றோம் என அவர் கூறினார்.

### தக்கதருணத்தில்...

இலங்கைக்கு விஜயம் செய்ததனை விடவும் தற்போது பாரியளவில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், சமாதானம் நிலவுவதாகவும் ஜிலானி தெரிவித்துள்ளார். யுத்த நிறைவு மட்டுமன்றி அபிவிருத்திப் பணிகளிலும் பாரியளவு மேம்பாடு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாத ஒழிபபுத் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் அணுகுமுறை வரவேற்கப்பட வேண்டியது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இலங்கையுடனான நட்பு வரவேற்கப்பட வேண்டியது என அவர் தெரிவித்துள்ளார்.

### இந்திய...

சீபா பொருளாதார உடன்படிக்கையைக் கைச்சாத்திடுவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்கவும் ஆயத்தம் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளது. குறிப்பாக இடம்பெயர் மக்களுக்கான 50 ஆயிரம் வீட்டுத்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டு விட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகவும், வீடமைப்பு நடவடிக்கைகள் திட்டமிட்டவாறு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

### தகவல்...

வழங்குனர்களையும் ஒன்றாக இணைத்து தகவல் தொழில்நுட்ப பாவனையூடாக வியாபார செயற்பாடுகளை இலகுவாக மேம்படுத்துவதும் தகவல் தொழில்நுட்ப சேவை வழங்குனர்களின் சந்தை வாய்ப்புக்களை அதிகரித்தலும் மேற்படி கண்காடசியின் நோக்கமாகும். சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களது தேவைக்கேற்ப தகவல் தொழில்நுட்ப மென்பொருட்கள் மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரேகூரையின் கீழ் மேற்படி தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கவுள்ளது.

உள்நாட்டைச் சார்ந்த நிறுவனங்கள் பங்குபற்றும் இக்கண்காட்சி, சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறையினருக்கான தக வல் தொழில்நுட்ப பிரயோக தீர்வுகளை உள்ளடக்கியதாக இருக்கும். இக் கண்காட்சிக்கு முதலீட்டாளர்கள், உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள், வர்த்தகத் துறையினர், அரச, தனியார் நிறுவனத்தினர் மற்றும் பொதுமக்களும் என பல்வேறு தரப்பினரும் வருகைதரவுள்ளனர்.

அபிவிருத்திப் பாதையில் அடியெடுத்து வைத்துள்ள வடபகுதி இப்போது முதலீடுகளுக்கான சிறந்தகளமாக விளங்குவதுடன், பல்வேறு கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்படுகின்றன. புதிய கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. மக்களின் வாழ்க்கை முறையில் புதிய தோர் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் அண்மித்த வருடங்களில் வடபகுதி சந்தை சிறந்த முறையில் விரிவடைந்துள்ளது என்று யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றத் தலைவர் பூரணச்சந்திரன் தெரிவிக்கின்றார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி தொடர்பான பெருமளவு வேலைத்திட்டங்கள் இடம்பெறுகின்றன. நிலைபேறான வளர்ச்சிக்கும் புதிய முதலீடுகளுக்கும் ஏராளமான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. வர்த்தக நிறுவனங்கள் தமது உத்தேச வாடிக்கையாளர்களின் தேவைகளை நன்கு அறிந்துகொள்ளவும், வாடிக்கையாளர்களுக்கு மிகச் சிறப்பான சேவைகளை வழங்குவதற்கும் மற்றும் தகவல் தொடர்பாடல் பிரயோகக் கட்டமைப்பில் மிகச் சிறந்த தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இக்கண்காட்சி ஒரு சிறந்த களமாக அமையும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும், கண்காட்சியின் மற்று மோர் அம்சமான சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினருக்கான பயனுள்ள கருத்தரங்குகளும் இடம்பெறவுள்ளன என்றும், இத்துறைசார்ந்த ஆர்வமுள்ள அனைத்துத் தரப்பினரும் வாய்ப்புக்களை தவறவிடாது மேற்படி நிகழ்வுகளில் பங்குபற்றி பயன் பெறும் வண்ணம் கேட்டுக்கொண்டுள்ளார்.

முதன்முறையாக இவ்வாறா னதோர் பயறுறுதி வாய்ந்த நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது இக்கண்காட்சியின் முக்கியமானதோர் சிறப்பம்சமாகும். இந்தக் கண்காட்சி தொடர்பாக நேற்றுப் பிற்பகல் இராசாவின் தோட்டத்தில் உள்ள வர்த்தக தொழில்துறை மன்றத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது. (பா)

### பளைநகரில்...

இது தொடர்பாக அவர் கருததுத் தெரிவிக்கையில், உத்தேச சர்வதேச சமாதான பல்கலைக்கழகம் கிளிநொச்சியில் உள்ள பளை எனுமிடத்தில் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதி உதவியை இலங்கையில் சமாதானத்தில் அக்கறையுள்ள உலக நாடுகளும், புலம்பெயர் நன்கொடையாளர்களும் வழங்கவுள்ளனர்.

இப் பல்கலைக்கழகத்தில் ஆறு பீடங்களும், பட்டப்பின் படிப்பு வசதிகளும், க.பொ.த. சாதாரணதர, க.பொ.த. உயர்தரம பயின்றவர்களுக்கான சான்றிதழ் கற்கைநெறிகளும் நடாத்தப்படும். விசேடமாக தெற்காசிய நாடுகளின் மாணவர்களும், சார்க் நாடுகளின் மாணவர்களும் இப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

# கிராமிய வளர்ச்சிக்கு அர்ப்பணிப்பு உணர்வு தேவை

(பளை)

மக்களுக்காகவும், கிராமங்களின் முன்னேற்றத்திற்காகவும் நேர்மையாகவும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் சேவை செய்யக் கூடிய பிரதிநிதிகளை தெரிவு செய்வதும் மக்களின் பொறுப்பாகும் என நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று பளை தம்பகாமம் கிராமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிராம மட்ட அமைப்புகள் மக்களுக்கும் அந்தந்த கிராமங்களுக்கும் சேவை செய்வதற்கே ஏற்படுத்தப்படுகின்றன. எனவே இந்த மக்கள் அமைப்புகளுக்கு தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகள் அந்த மக்களுக்கு உண்மையிலேயே சேவை செய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும் எனத்தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் கூறுகையில், மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் போது நிதானமாகச் சிந்தித்து பொருத்தமானவர்களை தெரிவு செய்ய வேண்டும் இதில் மக்களுக்குதான் அதிக பொறுப்புகள் உண்டு. மக்கள் தங்களுடைய சமூக மற்றும் ஜனநாயகப் பொறுப்புக்களை தட்டிக்கழிக்க கூடாது அவ்வாறு தட்டிக்கழிக்கும் போது அதன் பாதிப்புகள் மக்களுக்கே எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து தம்பகாமம் பிரதேசத்தின் தேவைகள் தொடர்பில் ஆராயப்பட்டது இதன் போது மக்கள் மின்சாரம்,வீதி வீட்டுத் திட்டம், காணி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.



மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் படிப்படியாக மக்களின் பிரச்சினைகள் கவனத்தில் எடுக்கப்பட்டு கடந்த காலங்கள் போன்று தீர்வுகள் காணப்படும் குறிப்பாக மின்சாரம் கிடைக்கப்பெறாத தம்பகாமத்தின் சில பிரதேசங்களுக்கு விரைவில் மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு, தம்பகாமம், மாமுனை வீதி மற்றும் தம்பகாமம் குறுக்கு வீதி, ஆனைத்தெரு வீதி உள்ளிட்ட பல வீதிகளை புனரமைப்பதற்கு திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும், அவை விரைவில் புனரமைக்கப்படும் எனவும், அத்தோடு குளங்களையும் புனரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்த அவர், நெல்லியாய் பிரதேசத்தில் வசிக்கும் பன்னிரண்டு குடும்பங்களுக்கும் காணிக் கச்சேரி நடத்தப்பட்டு காணிகள் வழங்கப்படுவதோடு விளையாட்டு கழகங்களுக்கு காணிகள் வழங்குவது தொடர்பிலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டார்.

அத்தோடு வண்ணாங்கேணி வடக்கு விளையாட்டுக்கழகத்திற்கு தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு திட்ட நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாவினை ஒதுக்கித் தருவதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதேச செயலர் சத்தியசீலன், பிரதேசசபை உறுப்பினர்கள் அன்ரன் அன்பழகன், தியாகராசா, பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலர் கமநல சேவைகள் நிலையத்தின் அலுவலர் சமூகசேவையாளர் தர்மலிங்கம், கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தியாகராசா பிரதேசசபை செயலாளர் சிவப்பிரகாசம் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வீதியில் கண்டெடுத்த பணத்தை அதிபரிடம் ஒப்படைத்த மாணவன்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் கல்வி பயிலும் மாணவர் ஒருவர் பாடசாலை முன்வீதியில கண்டெடுத்த பெருந்தொகைப் பணத்தை பாடசாலை அதிபரிடம் ஒப்படைத்துள்ளார்.


ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இரண்டாம் ஆண்டில் கல்வி பயிலும் சவேந்திரன் உமாகாந்தன் என்ற மாணவனே இவ்வாறு இந்தப் பணத்தை பாடசாலைக்கு செல்லும் போது அதிபரிடம் ஒப்படைத்துள்ளார்.

இதனை அங்கே சக ஆசிரியர்களுடன் கலந்துரையாடி அதிபர் அதற்குள் 21 ஆயிரம் ரூபா பணமும், தொலைபேசி இலக்கங்களும் இருந்தைதைக் கண்டு அதன் மூலம் தொலைபேசியுடன் தொடர்பு கொண்டதையடுத்த பணத்தை உரியவர்களிடம் ஒப்படைத்தனர்.

உரியவர் இதனை பெற்றுச் சென்றுள்ளார். இதனைக் கண்டெடுத்த மாணவனுக்கு சிறுதொகைப் பணத்தை அதிபர் அவரது வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாணவனின் முன்மாதிரியான செயற்பாட்டை பாடசாலை சமூகத்தினர் பாராட்டியுள்ளனர். (104)

# ஐ.பி.எல். மும்பைக்கு எதிரான ஆட்டம் வாகை சூடியது பெங்களூர் அணி



ஐ.பி.எல். தொடரின் 2ஆவது லீக் ஆட்டம் நேற்று பெங்களூர் சின்னசாமி விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் உள்ளூர் அணியான றோயல் சலஞ்சர்ஸ் அணி, மும்பை இந்தியன்ஸ் அணியுடன் மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி பந்துவீச்சை ஆரம்பித்தது.

முதலில் களமிறங்கிய றோயல் சலஞ்சர்ஸ் அணி ஆரம்பத்தில், மும்பை பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் தடுமாறியது. தொடக்க வீரர் தில்ஷான் 8 பந்துகளை எதிர்கொண்டும் ஓட்டமெதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். வேகப்பந்து வீச்சாளர் ஜான்சன் பந்தில் அவர் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து கெயிலுடன், விராட் ஹோலி இணைய ஆட்டம் சூடுபிடித்தது.

14 பந்துகளில் 4 பவுண்டரி 1 சிக்சருடன் 24 ஓட்டங்கள் விளாசிய ஹோலி, எல்.பி.டபுள்யூ. முறையில் ஆட்டமிழந்து வெளியேறினர். அதிரடியாக பந்துகளை சிக்சர், பவுண்டரிகளாக பறக்க விட்ட கெயில் அரைச்சதம் கடந்தார்.

ஆனால், மறுமுனையில் ஆடிய வீரர்கள் சோபிக்கவில்லை. இதனால் பெங்களூர் அணி 20 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 156 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கெயில் 92 ஓட்டங்களுடனும், அருண் கார்த்திக் 19 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

# கருக்கலைப்பு மருந்துடன் இந்தியப் பிரஜை கைது

(கொழும்பு)

கருக்கலைப்பு மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்படும் ஒரு தொகை மருந்துகளுடன் இந்திய பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

39 வயதான இந்தச் சந்தேக நபர் சென்னையிலிருந்து இலங்கை வந்தபோதே விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டதாக சுங்க ஊடகப் பேச்சாளரும், சுங்க அத்தியட்சகருமான வெஸ்லி காமினி குறிப்பிட்டார்.

குறித்த இந்தியப் பிரஜையின் பயணப் பொதியை சோதனையிட்டபோது கருக்கலைப்பிற்கான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட மருந்துத் தொகை அரச உடைமையாக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# நடனமங்கைக்கு பிடியாணை

பாம்புப் பெண் என அழைக்கப்படும் நிரோஷா விமலரட்னவுக்கு கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. சந்தேக நபரான நிரோஷா விமலரட்ன அல்லது டிலானி என அழைக்கப்படும் இந்தப் பெண் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகாமையினாலேயே நீதிமன்றம் பிடியாணை விடுத்துள்ளது.

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள இரவுக் களியாட்ட விடுதியில் நடன மங்கையாக பணியாற்றி வந்த நிலையில் பாம்பொன்றை உடன் வைத்திருந்த காரணத்தினால் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இதனையடுத்து இந்த வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.


# மரண அறிவித்தல்



## திருமதி கந்தையா தெய்வானை

மட்டுவில் வடக்கு சந்திரபுரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தெய்வானை நேற்று (04.04.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னப்பொடி கந்தையாவின் அன்பு மனைவியும் திருமதி இராஜேஸ்வரி, சின்னராசா, சிவராசா, திருமதி நாகேஸ்வரி, திருமதி யோகேஸ்வரி, திருமதி ஞானேஸ்வரி, சிவானந்தராசா, சிவபாலராசா மற்றும் காலம் சென்ற சிவஞானராசா ஆகியோரின் அன்புத்தாயாரும், சுப்பையா, திருமதி அழகறட்னேஸ்வரி, திருமதி அஞ்சலிதேவி, பொன்னுத்துரை, விக்னேஸ்வரன், திருமதி பார்வதி, குணசுந்தரராசா, திருமதி நாகநந்தா ஆகியோரின் மாமியாரும், செல்வராசா, தர்மராசா, திருமதி செல்வராணி, யோகராசா, திருமதி தர்மராணி, திருமதி யோகராணி ஆகியோரின் பெரிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**0771877380**
**0775268540**
**சிவானந்தபவனம்,**
**சந்திரபுரம்,**
**மட்டுவில் வடக்கு,**
**சாவகச்சேரி.**

(C/2513)

**தகவல் :**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**


# பகிஷ்கரிப்பு போர் இன்று மன்னாரில் பஸ் சேவை இல்லை

முன்னறிவித்தல் ஏதுமின்றி வழித்தடத்திற்கான அனுமதியை பெற கேள்வி கோரப்பட்டுள்ளமையினால் மன்னார் மாவட்ட தனியார் பஸ்கள் இன்று அதிகாலை முதல் நள்ளிரவு வரை சேவையில் ஈடுபடாது என மன்னார் மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் தர்மலிங்கம் ரமேஸ் நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

எவ்வித முன்னறிவித்தலும் இன்றி மன்னார் மாவட்ட செயலகத்தினூடாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மன்னார் மாவட்டத்தில் ஒவ்வொரு வழித்தடத்துக்குமான அனுமதியை பெறுவதற்கு கேள்வி கோரல் விடுத்துள்ளது.

கடந்த யுத்த காலம் முதல் மன்னார் மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் பல்வேறு கஸ்டத்தின் மத்தியில் தமது சேவையை மக்களுக்கு வழங்கியிருந்தனர். இதன் காரணமாக பல நெருக்கடிகளை பஸ் உரிமையாளர்கள் எதிர்கொண்டிருந்தனர்.

அத்துடன், மன்னார் மாவட்டத்தில் தனியார் பஸ் உரிமையாளர் சங்கமானது பொறுப்புணர்வுடன் கடந்த பல வருடங்களாக செயற்பட்டு வரும் நிலையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தன்னிச்சையான இச்செயற்பாடுகளை கண்டித்து பஸ் சேவைகளை நிறுத்தி பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளோம் என தெரிவித்தார். இது தொடர்பில் தாம் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு மகஜர் ஒன்றினையும் கையளித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்தநிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.சத்தியபாலன், வடமாகாண கல்வி அபிவிருத்தி குழுத்தலைவர் இரா. செல்வவடிவேல் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஏப்ரல் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.